# தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு



## முன் வரலாறு

- 1854-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட நிலை ஆணை அரசாங்கப் பதவிகள் ஒருசில செல்வாக்குமிக்க குடும்பங்களின் ஏகபோக உரிமையாக இருக்கக் கூடாது என்று கூறியது.
- 1871-ம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் கணக்கீட்டு மேற்பார்வையாளர் கோர்னிங் பரிந்துரை படி ஒவ்வொரு பிரச்சனையையும் பிராமணக் கண்ணாடி மூலம் பார்ப்பது நல்லதல்ல எனவும் இந்து முஸ்லீம் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசாங்க பதவிகளில் வரம்பு விதிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.
- அயோத்திதாசப் பண்டிதர் என்பவரால் திராவிடர் முன்னேற்றித்திற்காக 1876-ம் ஆண்டு அத்விதாநந்தா சபை என்ற அமைப்பும் திராவிட பாண்டியன் என்ற இதழும் வெளியிடப்பட்டது. மேலும் இவரால் 1891-ல் திராவிட மகாஜன சபை தோற்றுவிக்கப்பட்டது.
- இரட்டைமலை சீனிவாசன் என்பவரால் 1891-ல் பறையர் மகாஜன சபை தோற்றுவிக்கப்பட்டு 1892-ம் ஆண்டு ஆதிதிராவிட மகாஜன சபை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1908-ம் ஆண்டு நீதிபதி சங்கரன் நாயர் என்பவர் வர்ண -ஜாதி முறை அகற்றப்படாத வரை அரசியல் முன்னேற்றம் சாத்தியமில்லை என்று கூறினார்.
- 1909-ம் ஆண்டு சி.சுப்ரமணியம், எம்.புருஷோத்தமன் என்ற இரு வழக்கறிஞர்களால் ‘சென்னை பிராமணரல்லாதார் சங்கம்’ துவக்கப்பட்டது. இதன் நோக்கம் பிராமணரல்லாதோரிடையே கல்வியை பரப்புவதாகும்.
- 1912-ல் சரவணப்பிள்ளை, வீராசாமி, துரைசாமி என்பவர்களால் சென்னை கூட்டமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. இதன் செயலாளராக இருந்த சி.நடேச முதலியார் சென்னையில் கல்வி பயில தங்கியிருந்த பிராமணரல்லாத மாணவர்களுக்காக திராவிட விடுதி ஒன்றை நடத்தினார். இந்த அமைப்பே பின்னர் சென்னை திராவிடர் சங்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- 1912-ம் ஆண்டு அரசாங்க பணி களுக்காக அமைக்கப்பட்ட ராயல் கமிஷனுக்கு பி.தியாகராய செட்டி என்பவரால் சாதிவாரியான விகிதாச்சார பிரதிநிதித்துவம் பற்றி வலியுறுத்தி கோரிக்கை அனுப்பப்பட்டது.
- 1916-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தன்னாட்சி கழகத்தில் பிராமணர் செல்வாக்கு மேலும் உயர்ந்தது. அதே ஆண்டு நடைபெற்ற இம்பீரியல் சட்ட மன்றத்துக்கான தேர்தலில் பிராமண ரல்லாத வேட்பாளர்கள் அனைவரும் தோற்கடிக்கப்பட்டது வேதனைக் குரிய தானது. இவர்கள் காங்கிரஸை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## தோற்றம்

பிராமணல்லாதவர்கள் முன்னேற்றத்திற்காக சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் 1916 நவம்பர் 20-ல் தென்னிந்திய நல உரிமை யாளர் சங்கம் வேலைவாய்ப்பு மற்றும் கல்வி யில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் இட ஒதுக்கீடு என்ற முக்கிய நோக்கங்கள் அடிப்படையில் தொடங்கப்பட்டது. டி.எம். நாயர், பனகல் அரசர், தியாகராய செட்டியார், நடேச முதலியார் ஆகியோர் முக்கிய பிரமுகர்கள் ஆவர்.

1916 டிசம்பர் மாதம் பி.தியாகராய செட்டி என்பவரால் வரலாற்று சிறப்புமிக்க பிராமண ரல்லாதோர் பிரகடனம் வெளியிடப்பட்டது. இப்பிரகடனத்தில் மொத்த மக்கள் தொகையில் வெறும் 37% மட்டுமே உள்ள பிராமணர்கள் அரசாங்க பதவிகளில் அதிக இடங்களிலும், முக்கிய பதவிகளிலும் உள்ளனர் என்று கூறப்பட்டது. இதுவே பின்னர் “பிராமண ரல்லாதாரின் மாக்னா கார்டா” என்றழைக்கப் பட்டது.

> *டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் இந்த பிரகடனத்தை செட்டியாரின் பிரகடனம் என்று குறை கூறியது. இந்து, நியூஏஜ், இந்து நேசன் போன்ற பத்திரிக்கைகளில் நீதிக்கட்சி பெரிய அளவில் விமர்சிக்கப்பட்டது.*

## நீதிக்கட்சி

தென்னிந்திய நல உரிமை சங்கம் தனது கொள்கைகளை மக்களிடையே பரப்ப மூன்று பத்திரிகைகளை நடத்தி வந்தது.

ஜஸ்டிஸ் – ஆங்கிலம் – டி.எம்.நாயர், எம்.எஸ். பூர்ணலிங்கம்

ஆந்திர பிரகாசா – தெலுங்கு – பார்த்தசாரதி நாயுடு

திராவிடன் – தமிழ் – பக்தவத்சலம் பிள்ளை

இதன் ஆங்கில இதழான ஜஸ்டிஸ் என்ற பெயரிலேயே ஜஸ்டிஸ் பார்ட்டி என்றழைக்கப் பட்டது. இதுவே தமிழில் நீதிக்கட்சி என அழைக்கப்பட்டது.

நீதிக்கட்சியின் முதல் பிராமணல்லாதார் மாவட்ட மாநாடு 1917 ஆகஸ்டு 19-ம் நாள் கோயம்பத்தூர் ஒப்பணக்கார வீதியில் நடை பெற்றது. முதல் மாநில மாநாடு 1917 டிசம்பர் 28,29 சென்னை வெல்லிங்டன் திரை அரங்கில் நடைபெற்றது.

1917-டிசம்பர் 14ல் மாண்டேகுவை சந்தித்து பிராமணர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினர்க்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் கோரப்பட்டது.

## நீதிக்கட்சியின் ஆட்சி அமைப்பு

நீதிக் கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையே அரசியல் சட்ட வரைவாகக் கருதப்பட்டது.

நீதிக்கட்சிக்கு ஒரு தலைவரும், நான்கு துணைத் தலைவர்களும், ஒரு பொதுச் செயலரும், ஒரு பொருளாளரும் இருந்தனர். 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு கொள்கை முடிவுகளை செயல்படுத்தியது.

1920 தேர்தலுக்குப் பிறகு கட்சிக் கொரடா என்ற புதிய கட்சிப்பதவி உருவாக்கப்பட்டது.

நீதிக்கட்சியின் முதல் தலைவராக சர். தியாகராய செட்டியும், முதல் பொதுச் செயலாளராக ஆற்காடு ராமசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சட்டமன்ற தேர்தல் 1920

1919- மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டது. தொகுதிகள் வகுப்புவாரி, தொகுதிகள் சிறப்பு தொகுதிகள் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் என பிரிக்கப்பட்டிருந்தன. சென்னை சட்ட மன்றத்தில் 127 உறுப்பினர்கள் இருந்தனர். இந்துக்களில் 98பேர் 61 தொகுதிகள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரட்டை ஆட்சி முறையை எதிர்த்து காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடவில்லை. பலமிக்க எதிர்க்கட்சி இன்மையில் நீதிக்கட்சி 63 இடங்களில் வெற்றி பெற்றது.

அக்காலகட்டத்தில் சொத்து மதிப்பு உடையவர்கள் மட்டுமே வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். மொத்த மக்கள் தொகை 40 மில்லினில் 12, 48, 156 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். சராசரியாக 24.97% வாக்கு பதிவாயிற்று.

## முதல் அமைச்சரவை (1920-23)

- பி.தியாகராய செட்டி பதவியேற்க மறுத்தமையால் ஆளுநர் வெல்லிடன் அமைப்பின் பேரில் ஏ.சுப்பராயலு நாயுடுவின் தலைமையில் 1920 டிசம்பர் 7-ம் நாள் அமைச்சரவை அமைக்கப்பட்டது. இவர் உடல்நிலை காரணமாக பதவி விலகியதால் 1921 ஜுலை 11 பனகல் அரசர் பொறுப் பேற்றார்.
- 1921-ல் தேர்தலில் போட்டியிட பெண் களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.
- 1920-ல் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பள்ளிகளில் இலவச உணவு வழங்கப்பட்டது. பின்னர் இதுவே இலவச மதிய உணவுத் திட்டமாக விரிவடைந்தது.
- பறையர், பஞ்சமர் என்ற சொற்கள் நீக்கப்பட்டு அவர்கள் ஆதி திராவிடர் என்றழைக்கப்பட்டனர்.
- 1922 டிசம்பர் 18ல் இந்து அறநிலைய சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது.
- தாழ்த்தப்பட்டோர் நலன் பாதுகாப்பிற்காக ஐ.சி.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார்.
- முதல் அமைச்சரவையில் தமிழர் ஒருவர் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாவது அமைச்சரவை (1923-26)

- முதல் அமைச்சரவை 1923 செப் 11 - முடிந்து 1923 அக். 31-ல் தேர்தல் நடத்தப்பட்டது. சுயராஜ்ஜியக் கட்சி போட்டியிட்டதால் 44 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.
- தனிப்பெரும்பான்மை அமையாததால் நியமன உறுப்பினர் ஆதரவுடன் 1923 நவம்பர் 19ல் பனகல் அரசர் தலைமையில் இரண்டாம் அமைச்சரவை பதவி ஏற்றது.
- 1924-ல் பணியாளர் நியமன வாரியம் அமைக்கப்பட்டது. இதுவே பின்னர் மாநில பணியாளர்கள் தேர்வாணைய மாக உருமாற்றம் அடைந்தது.
- 1925-ன் தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்காக ஆந்திர பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1922-ல் கொண்டுவரப்பட்ட இந்து அறநிலைய மசோதா 1925ல் நிறை வேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இதன்படி கோயில்களில்மூலம்வரும்வருமானம் பொதுப்பணிக்கு பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

### மூன்றாம் அமைச்சரவை

- 1926-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எஸ்.சத்யமூர்த்தி தலைமை யில் களமிறங்கிய சுயராஜ்ஜியக் கட்சி 41 இடங்களிலும், நீதிக்கட்சி 21-இடங்களிலும் வெற்றி பெற்றனர்.
- தனிப் பெரும்பான்மை இருந்தும் சுயராஜ்ஜியக் கட்சி ஆட்சி அமைக்க மறுத்து விட்டதாலும், நீதிக்கட்சிக்கு பெரும்பான்மை இல்லாததாலும், சுயேட்சையாக போட்டியிட்ட "கருப்பு குதிரை" சுப்பராயன் என்பவர் நீதிக்கட்சி மற்றும் மற்ற சுயேட்சைகள் ஆதரவுடன் ஆட்சி அமைத்தனர்.
- இவரது அமைச்சரவையில்தான் முதன் முதலாக ஒரு பெண் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவரது பெயர். Dr. முத்துலட்சுமி ரெட்டி. இவரது முயற்சி மூலம் பெண் விடுதலை சட்டங்கள் இயற்றப்பட்டன. 1930-ல் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- 1929-ல் தமிழ்கல்வி வளர்ச்சிக்காக அண்ணாமலை பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- மகத்தான சாதனையாக முத்தையா முதலியார் என்பவரால் வகுப்புவாரி பிரதிநித்துவம் அறிவியல் பூர்வமான முறையில் வகுக்கப்பட்டது. இது கோட்டா முறை எனப்பட்டது.

### நான்காவது அமைச்சரவை (1930 - 34)

- 1930-ம் ஆண்டு வாக்கில் மக்களிடையே செல்வாக்கு இன்மை யால் பிராமணர்களும், கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதே ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக் கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றது.
- பெரும்பான்மை இல்லாததால் நியமன உறுப்பினர் ஆதரவோடு முனுசாமி நாயுடு தலைமையில் 1930 அக்.17ல் ஆட்சி அமைத்தது.

- உட்கட்சி பூசல் காரணமாக 1932 நவம்பர் 5-ம் தேதி பொப்பலி அரசர் முதலமைச்சராக பொறுப்பேற்றார்.
- இக்காலக்கட்டத்தில் ஜமின்தாரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மக்கள் ஏமாற்றப் பட்டனர். எனவே மக்களிடையே கட்சியின் செல்வாக்கு சரிய தொடங்கியது.

## ஐந்தாவது அமைச்சரவை (1934-37)

1934-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தாலும் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற சுய ராஜ்ஜியக் கட்சி ஆட்சி அமைக்காததால் நீதிக்கட்சி பொப்பிலி அரசர் தலைமையில் ஆட்சி அமைத்தது.

பெரியாரின் ஈரோடு திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால் பெரியாரின் ஆதரவு கிடைத்தது.

## திராவிடர் கழகம்

1935 இந்திய அரசுச்சட்டத்தின் படி நடைபெற்ற 1937-ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று, ராஜாஜி தலைமையில் ஆட்சி அமைத்தது.

1938 டிசம்பர் 29-ம் ஆண்டு பெரியார் பெல்லாரி சிறையில் இருந்தபோது நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் பாதையில் இருந்து நீதிக்கட்சியை விலக்கிய பெரியார் சமூக சீர்த்திருத்த போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

இதனையடுத்து 1944 ஆகஸ்டு 27-ம் தேதி சேலத்தில் நடந்த மாநாட்டில் நீதிக்கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் சின்னமான தராசு மாற்றப்பட்டு கறுப்பு பிண்ணனியில் சிகப்பு வட்டம் பொறித்த கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் நீதிக்கட்சி பி.ராமச்சந்திர ரெட்டி தலைமையிலும் (1944-45) பி.டி.ராஜன் தலைமையில் (45-47) பெயரளவுக்கு செயல் பட்டு மறைந்தது.

> *"பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை" - சி.நடேச முதலியார் (சமரச சத்தர்)*
> *"வீட்டுக்குள் நுழைந்த திருடன் போன்று ஆரியர்கள் திராவிடர்கள் சொத்தை சூறையாடி விட்டனர்". டி.எம். நாயர்*

## நீதிக்கட்சி வீழ்ச்சிக்கான காரணங்கள்

- வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற ஒற்றைக் குறிக்கோள் கட்சியாக செயல் பட்டது.
- ஆங்கிலேயருக்கு முழு ஆதரவு அளித்தது.
- உயர் வகுப்பாரின் உயர்வுக்கு முன்னுரிமை. குறிப்பாக சிறுபான்மை யினர், ஆதிதிராவிடர் ஏமாற்றப் பட்டனர்.
- அதிகார ஆசையின் காரணமாக எழுந்த கட்சி பூசல் மற்றும் மோதல் போக்குகள்.
- நீதிக்கட்சி தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறை
- ஆட்சியாளர்களின் யதேச்சதிகாரப் போக்கு மற்றும் காங்கிரஸ் அசுர வளர்ச்சி.

> *ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கூட நீதிக்கட்சி எதிர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

## சென்னை மகாஜன சங்கம்

- நீதிக்கட்சியின் நிலைப்பாட்டை அறிந்து, அதற்கு போட்டியாக பிராமணரல்லாத காங்கிரஸ்காரர்களால் 1917 செப். 20ல் துவக்கப்பட்டது.
- பி.கேசவ பிள்ளை தலைவராகவும், ஈ,வெ.ராமசாமி நாயக்கர் துணை தலைவராகவும், திரு. வி. கல்யாண சுந்தரனார், பி.வரதராஜீலு நாயுடு போன்றோர் முக்கிய உறுப்பினராகவும் இருந்தனர்.
- இந்தியன் பேட்டரியாட் என்ற ஆங்கில இதழும் தேச பக்தன் என்ற தமிழ் இதழும் வெளியிடப்பட்டது.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலனுக்காக பாடுபடுவதோடு ஆங்கில ஆட்சியையும் எதிர்ப்பதை கொள்கையாக கொண்டது.

## சுயமரியாதை இயக்கம்

- தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சீர்த் திருத்த வாதியான பெரியார் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் 1925-ம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.
- சுயமரியாதை இயக்கம், பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் சுயமரியாதையை வலியுறுத்தியதுடன், அவர்களைச் சமூதாயத்தின மேல் மட்டத்திற்கு உயர்த்தவும் பாடுபட்டது.
- மதம், ஜாதி, அரசியலில் மற்றும் சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கத்தை இவ்வியக்கம் கடுமையாக எதிர்த்தது.
- மூட நம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.
- பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணம் மற்றும் குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றுக்காகப் போராடியது.
- சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு 1929-ம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று **செங்கல்பட்டில்** நடைபெற்றது. இந்த மாநாட்டில் வகுக்கப்பட்ட கொள்கைகள் திராவிட இன வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மாநாட்டில்தான் ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
- ம.சிங்காரவேலரின் ஆலோசனைப்படி 1932 டிசம்பரில் “சுயமரியாதை சமதர்ம திட்டம்” ஒன்றைப் பெரியார் உருவாக்கினார்.
- அரசியலில் பிராமணர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கவும், தன்மான இயக்கக் கொள்கைகளைச் சட்டமாக்கவும், பொருளாதாரப் பொது உடைமையை ஏற்படுத்தவும் சுய மரியாதைச் சமதர்மத் திட்டத்தை அவர் செயல்படுத்தினார்.
- இவ்வியக்கம், ஓர் அங்கீகாரம் பெற்ற அமைப்பாகச் செயல்பட விரும்பியதால் 1952, செப்டம்பர் 29-ல் **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார இயக்கம்** என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது.

- சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் வெளிவந்த புரட்சி என்ற இதழுக்கு முதன் முதலில் **எஸ்.ஆர். கண்ணம்மாள்** என்பவர் பதிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவரே **தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராவார்.**
- பெரியார், **'குடியரசு'** இதழை 1925, மே 2-ம் நாளன்று தொடங்கினார். அவ்விதழை அச்சடிக்கும் அச்சகத்திற்கு **"உண்மை விளக்க அச்சகம்"** என்று பெயரிட்டார். முதல் இதழைத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் வெளியிட்டார்.
- ஈரோட்டில் 1930-ல் நடைபெற்ற இவ்வியக்கத்தின் மாநாட்டில் **"மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதிப் பெயர்களைச் சேர்க்கக் கூடாது"** என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
- இந்திய சமூகத்தில் சாதி மதப் பிரிவு களைக் குறிக்கும் குறிப்புகளை நீக்க வேண்டுமென்ற கோரிக்கை, 1932-ல் வெளியிடப்பட்ட **சுயமரியாதை வேலைத் திட்டத்தின்** மூலம் முன் வைக்கப்பட்டது.
- இவ்வியக்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திருமண முறை, **"சுயமரியாதைத் திருமணம்"** எனப்படுகிறது. இம்முறையில் வழக்கமாகப் பின்பற்றப் பட்டு வரும் நடைமுறைகளான பிராமண புரோகிதர் சமஸ்கிருத மந்திரம் ஓதி திருமணம் செய்வித்தல், தாலி கட்டுதல் போன்ற சடங்குகள் இன்றி திருமணம் எளிமையான நடத்தப்படுவதற்கான நடைமுறைகள் இடம்பெற்றிருந்தன.
- பேரறிஞர் அண்ணா முதல்வரானதும், சுயமரியாதைத் திருமணங்களுக்கு சட்டப்படி அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு திருமண சட்டத்தில் 7(அ) என்ற புதிய பிரிவை இணைத்து இந்து திருமணச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம், 1968, ஜனவரி 20 முதல் நடைமுறைக்கு வந்தது.




# சுதந்திர போராட்டத்தில் தமிழகம்

## சென்னை சுதேசி சங்கம்(1852)

- சென்னை சுதேசி சங்கம் வங்காள பிரிட்டிஷ் இந்தியக் கழகத்தின் கிளையாக துவக்கப்பட்டது.
- சென்னை மாகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலைநாட்ட மேற்கத்திய முறையில் ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம்.
- இதனை ஹார்லி, லட்சுமி நரசுச் செட்டி, சீனிவாசப் பிள்ளை ஆகியோர் நிறுவினர். இச்சங்கம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கை களை விமர்சனம் செய்தது.
- 1856-ல் வருவாய்த்துறை அதிகாரிகள் செய்த சித்ரவதை பற்றி விசாரணை செய்ய வற்புறுத்தியது.
- 1858-ல் திருநெல்வேலியில் ஏற்பட்ட சமயகலவரங்களை சரியாக கையாளவில்லை என அதிகாரிகள் மீது குறை கூறப்பட்டது.
- 1860-ல் தஞ்சை மன்னரை மீண்டும் பதவியில் அமர்த்த பாராளு மன்றத்திற்கு விண்ணப்பம் அளித்தது.

## சென்னை மகாஜன சபை (1884)

- 1884-ம் ஆண்டு சென்னை மகாஜன சபைஉருவாக்கப்பட்து. எஸ். இராமசாமி முதலியார், பி. அனந்தாசாருலு, ரெங்கையா நாயுடு ஆகியோர் இதனை ஏற்படுத்தியவர்கள். இச்சபை சென்னை அண்ணாசாலையில் அமைந்திருந்தது.
- சென்னை மகாஜன சபையின் முதல் தலைவரக பி.ரெங்கையா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய அரசப் பிரதிநிதி எல்ஜின் பிரபு, டிசம்பர் 1895-ம் ஆண்டு சென்னைக்குப் பயணம் மேற்கொண்ட போது, சென்னை மகாஜன சபை வழங்கிய வரவேற்பை ஏற்க மறுத்தார்.
- 1920-ம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை சென்னையில் ஜார்ஜ் டவுன், யானைகவுனி, உயர்நீதி மன்றம் மற்றும் கடற்கரைப் பகுதியில் தலைமையேற்று நடத்தியது.
- இப்போராட்டத்தின் போது இதன் உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கப் பட்டனர். இந்நிகழ்வு குறித்து விசாரிக்க நீதிபதி, **டி.ஆர். இராமச்சந்திர**

**அய்யர்** தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

- ஆங்கில அரசு காங்கிரஸ் கட்சிக்குத் தடை விதித்திருந்த போது, சென்னை மகாஜன சபை, சுதேசிப் பொருட்கள் கண்காட்சி, அனைத்திந்திய கதர், கைத்தறிக் கண்காட்சி போன்ற பல்வேறு பொருட்கள் கண்காட்சி மூலம் மக்கள் மனதில் நாட்டுப்பற்றை வளர்த்து வந்தது.
- தேசத்தந்தை மகாத்மா காந்தி, 1896 அக்டோபர் 24-ல் சென்னை மகாஜன சபையில் உரையாற்றினார். இச்சபையின் பொன்விழாக் கொண்டாட்டத்தில் ஜவஹர்லால் நேரு கலந்து கொணடார்.

### இந்திய தேசிய காங்கிரஸ்

**(டப்ரின் பிரபு வைசிராயாக இருந்த கால கட்டத்தில்)**

- ஓய்வு பெற்ற ஆங்கிலேய அதிகாரி யான **ஆலன் ஆக்டேவியர் ஹியூம்** என்பவரால் 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.
- இந்திய தேசிய காங்கிரஸின் முதல் மாநாடு 1885, டிசம்பர் 28 அன்று பம்பாயில் கூடியது.
- இந்தியா முழுவதிலுமிருந்து அம்மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் 72 பேர். சென்னை மாகாணத்திலிருந்து பங்கேற்ற 21

| சங்கங்களின் பெயர் | தோற்றுவித்த ஆண்டு | தோற்றுவித்தவர் |
|---|---|---|
| இந்து இலக்கியச் சங்கம் | 1830 | - |
| சென்னை சுதேசி இயக்கம் (Madras Native Assication) | 1852 | லெட்சுமி நரசு செட்டி |
| இந்து முன்னேற்ற மேன்மைச் சங்கம் (Hindu Progressive Improvement Society) | 1853 | சீனிவாசப் பிள்ளை |
| மத்திய தேசிய முகமதிய சங்கம் | 1883 | - |
| மதராஸ் மகாஜன சபை | 1884 | அனந்தாச்சார்லு, ரெங்கையா நாயுடு |
| தென்னாட்டுத் தமிழ்ச் சங்கம் | 1890 | - |
| திராவிட பாஷா சங்கம் | 1899 | - |
| சுயாட்சி இயக்கம் | 1916 | அன்னிபெசன்ட் |
| நெல்லை தேசாபிமானச் சங்கம் | 1908 | வ.உ.சி. |
| தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் | 1916 | டி.எம். நாயர், தியாகராஜ செட்டிார் |

பேரில், தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து பங்கேற்றவர்கள் 16 பேர்.

- தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் சென்னை மகாஜன சங்கத்தின் சார்பாகச் சென்றவர்கள் ஆவர்.
- முதல் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவராக டபுள்யு.சி.பானர்ஜியின் பெயரை வழிமொழிந்து, மாநாட்டின் முதல்தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை தமிழ்நாட்டுப் பிரதிநிதியான எஸ்.சுப்பிரமணிய அய்யருக்கே கிடைத்தது.

*டேவிட் அர்னால்டு "காந்தி தனது ரௌலட் சத்யாகிரகத்திற்கு தமிழ்நாட்டு தீவிரவாதிகளின் ஆதரவை நாடினார்."*

- காங்கிரஸின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னை நகரில் ஆயிரம் விளக்கு பகுதியில் மக்கள் தோட்டம் என்னுமிடத்தில் நடைபெற்றது. காங்கிரஸ் வினாவிடை அல்லது இத்தேசத்தில் வருஷா வருஷா கூடி வரும் காங்கிரஸ் ஜனசபையின் சரித்திரம் நூலை இந்த ஆண்டில் முடும்பை வீர ராகவாச்சாரியார் வெளியிட்டார்.

*மூன்றாவது மாநாட்டின் சிறப்பு அம்சம்: அதன் செலவின் பெரும்பகுதி பெரிது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.*

- சென்னை மாகாணத்தின் சார்பில் 362 பிரதிநிதிகள் பங்கேற்ற இம்மாநாட்டிற்குப் பக்ருதீன் தியாப்ஜி தலைமைவகித்தார். முதன்முறையாகத் திறந்த வெளித் திடலில் அமைக்கப்பட்ட பந்தலில்நடைபெற்றது.
- அன்றைய சென்னை கவர்னரான கன்னிமாரா பிரபு இம்மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் சிறப்பு விருந்தளித்துச் சிறப்பித்தார்.
- 1920, நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் சி.பி. விஜயராகவாச்சாரியும், 1926, கௌகாத்தி மாநாட்டின் தலைவர் எஸ்.சீனிவாச அய்யங்காரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே.
- சுதந்திரத்திற்கு முன்பாக சென்னையில் இந்தியதேசியகாங்கிரஸின்மாநாடுகள் 7 முறை நடைபெற்றுள்ளன.

| ஆண்டு | தலைமை |
|---|---|
| 1885 | பக்ருதீன் தியாப்ஜி |
| 1894 | ஆல்பிரட் வெப் |
| 1898 | ஆனந்த் மோகன் போஸ் |
| 1903 | லால்மோகன் கோஷ் |
| 1914 | ராஷ்பிஹாரி கோஷ் |
| 1927 | எம்.ஏ. அன்சாரி |

## தமிழ்நாட்டு மிதவாதிகள்

- காங்கிரசில் **கோபாலகிருஷ்ண கோகலேயைப்** பின்பற்றியவர்கள் மிதவாதிகள் என்றழைக்கப்பட்டனர்.
- கோகலேயின் வலக்கரமாக திகழ்ந்த வி.எஸ். சீனிவாச சாஸ்திரி மிதவாதி களுக்கெல்லாம் மித வாதியாக விளங்கினார். மேலும் பி.எஸ். சிவசாமி அய்யர், வி.கிருஷ்ணசாமி அய்யார். டி.ஆர். வெங்கடராம சாஸ்திரி, ஜி.ஏ.நடேசன், திரு.வி. கல்யாண

சுந்தரனார், டாக்டர்.பி. வரதராஜுலு நாயுடு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், எஸ்.சீனிவாச அய்யங்கார் ஆகியோர் தமிழ்நாட்டின் மிதவாதிகளாவர்.

## தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்

- பாலகங்காதார திலகரைப் பின் பற்றியவர்கள் தீவிரவாதிகள் என்ற ழைக்கப்பட்டனர். திலகரின் தேசியக் கட்சி கொள்கைகளை விளக்கி 1907-ம் ஆண்டு கல்கத்தாவில் அவர் பேசியதை புதிய கட்சியின் கொள்கைகள் என்ற நூலில் பாரதியார் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.
- **தமிழ்நாட்டு தீவிரவாதத்தின் தந்தை** என சேலம் விஜயராகவாச் சாரியைக் கூறலாம். அவரது பாசறையில் பயிற்சி பெற்றவர்களில் முக்கியமானவர் ராஜாஜி என அழைக்கப்படும் சி.ராஜகோபாலச்சாரி.
- டி.எம். நாயார், எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார், ஏ.ராமசாமி அய்யங்கார், டி.ரெங்காச்சாரி, வ.உ. சிதம்பரம் பிள்ளை, அரவிந்தகோஷ், சுப்பிர மணியசிவா, சி. சுப்பிரமணிய பாரதி, வ.வே. சுப்பிரமணிய அய்யர் நீலகண்ட பிரம்மச்சாரி, வாஞ்சிநாதன், சுதேசி பத்மநாப அய்யர் ஆகியோர் தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க காங்கிரஸ் தீவிரவாதிகளாவர்.
- வ.உ. சிதம்பரனார் தமிழ்நாட்டுத் திலகர் என்று அழைக்கப்பட்டார்.
- தமிழ்நாட்டில் திலகரின் தளபதிகளாக வ.உ.சியும் சுப்பிரமணிய சிவாவும் கருதப்பட்டனர்.

## தமிழ்நாட்டின் புரட்சி தேசியவாதிகள்

- மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கை தோல்வியுற்றபோது, தீவிரவாதிகளின் சிலர் பயங்கரவாதிகள் ஆயினர். 1905-ல் இலண்டனில் "ஹோம்ரூல்லீக்" என்ற அமைப்பையும் 1966-ல் இந்தியா விடுதி என்ற முகாமையும் அமைத்தனர்.
- தமிழ்நாட்டைச் சேரந்த வ.வே. சுப்ரமணிய அய்யரும், திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனும், எம்.பி.டி. ஆச்சாரியாவும் அப்பயங்கரவாதப் பாசறையில் பயிற்சி பெற்றோர் ஆவர்.
- ஆயுதப் புரட்சியின் மூலம் விடுதலை பெறுவதே இவர்களது நோக்கம்.
- புரட்சிவாதியான நீலகண்ட பிரம்மச்சாரி 1910 ஏப். 10-ம் தேதி "பாரத மாதா சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.
- இவரின் சந்திப்பிற்கு பின்னரே வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி பயிற்சி பெற்று வாஞ்சிநாதன் 1911- ஜூன் 17-ம் தேதி திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் ஆஷ் துறையை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்றனர்.

## தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்

- வங்காளத்தில் 1905 இல் தோன்றிய சுதேசி இயக்கம் தமிழக மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. **"வந்தே மாதரம்"** என்ற முழக்கம் தமிழகத்தில் ஒலிக்கத் துவங்கியது.
- தென்னாட்டுத் திலகர் என அழைக்கப்பட்ட வ.உ. சிதம்பரனார் தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில்

சுதேசிக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். 1906ல் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை நிறுவினார். கப்பலோட்டிய தமிழன் எனப்புகழ் பெற்றார்.

- தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்துடன் பயங்கரவாதமும் ஓரளவு தலை தூக்கியது.
- திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகளுள் ஒருவரான சங்கரன் நாயர், இந்தக் கொலை தேசிய விழிப்பின் எதிரொலி என்று குறிப்பிட்டார்.
- சுதேசி இயக்கத் தலைவர்களான வ.உ சிதம்பரனார், பாரதியார், சுப்ரமணிய சிவா போன்றவர்களது பேச்சும், எழுத்தும் மக்களை எழுச்சியுறச் செய்தன.

## தன்னாட்சி இயக்கம்(1916)

- 1916-ம் ஆண்டு செப்டம்பர் 3 அன்று, சென்னை கோகலே மண்டபத்தில் **தன்னாட்சிக் கழகம்** (Home Rule League) **அன்னிபெசன்ட்** அம்மையாரால் துவக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக 'இந்திய புத்திரர்கள் சபை'யை அவர் நிறுவியிருந்தார்.
- தன்னாட்சிக் கழகத்தின் தலைவராக அன்னிபெசன்ட் அம்மையாரும், ஜி.எஸ். அருண்டேல் அமைப்புச் செயலாராகவும், சி.பி.ராமசாமி அய்யர் பொதுச் செயலாளராகவும், பி.பி. வாடியா பொருளாளராகவும பொறுப்பேற்றனர்
- பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியா சுயாட்சி பெற வேண்டும் என்பதே தன்னாட்சிக் கழகத்தின் குறிக்கோள்.
- இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்டு முடங்கிக் கிடந்த காலத்தில் தன்னாட்சி இயக்கம் தேசியப் போராட்டத்தைத் தீரத்துடன் வழிநடத்தியது.
- அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி சங்கத்திற்குக் கிடைத்த பரிசு என 1917, ஆகஸ்ட் 20ல் வெளியான மாண்டேகு பிரகடனத்தைக் கூறலாம்.
- அன்னிபெசண்டின் சாதனைகளைப் பாராட்டி அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் 1917- டிசம்பரில் கல் கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ரௌலட் சத்யாக்கிரகம்

- மகாத்மா காந்தி தமிழ்நாட்டில் தங்கியிருந்த போதுதான் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதை எதிர்த்து காந்தி ரௌலட் சத்தியாக்கிரகத்தைத் தமிழ்நாட்டிலிருந்துதான் தொடங்கினார். **காந்தியின் முதல் அகில இந்திய சத்தியாக்கிரகப் போராட்டம்** இதுதான்.
- தமிழ்நாட்டுக்கு 1919, மார்ச் 17 அன்று வருகை தந்த காந்தி, கஸ்தூரிரங்க அய்யங்கார் வீட்டில் தங்கினார். அங்கு ரௌலட் சட்ட எதிர்ப்புத்

திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக சத்தியாக்கிரக சபை உருவாக்கப்பட்டது.

- காந்தி சத்தியாக்கிரக சபையின் தலைவர்; சி.விஜயராகவாச்சாரி, டி.பிரகாசம் ஆகியோர் துணைத் தலைவர்கள்; சி.ராஜகோபாலாச்சாரி, எம்.சி. நஞ்சுண்டராவ், எ.கஸ்தூரிரங்க அய்யங்கார், ஜி. அரிபுரவோத்தம் ராவ், சேலம் டி. ஆதிநாராயண செட்டியார் ஆகியோர் செயலாளர்கள் என நிர்வாகிகள் பொறுப்பேற்றிருந்தனர்.
- தமிழ்நாட்டில் **ரௌலட் சட்ட எதிர்ப்பு** நாள் 1919, ஏப்ரல் **6**-அன்று துக்கதினமாக அனுசரிக்கப்பட்டது. பல பகுதிகளில் கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. அப்போது பத்திரிகைப் பதிவுச் சட்டத்தை மீறி சென்னை நகரில் **"சத்யாக்கிரகி"** என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது.
- அரசாங்கத்தினால் தடை செய்யப் பட்டிருந்த நூல்களான காந்தியின் **"சர்வோதயம்", "இந்திய சுயராஜ்யம்"** மற்றும் வீர சவாக்கரின் **"எரிமலை"** ஆகியவற்றைத் தமிழ்நாட்டுச் சத்தியாக்கிரகிகள் விற்பனை செய்தனர்.

## கிலாபத் இயக்கம்

- இந்திய முஸ்லீம்கள், காந்தியின் ஒத்துழைப்புடன் தொடங்கிய கிலாபத் இயக்கத்தில் தமிழ்நாடு ஆர்வத்துடன் கலந்து கொண்டது.
- சென்னை மாகாண காங்கிரஸ் மாநாடு 1919, ஆகஸ்டில் கூடியது. அலி சகோதரர்களை விடுதலை செய்யக் கோரும் தீர்மானத்த ராஜாஜி கொண்டு வந்தார். மேலும், **அக்டோபர் 17** அன்று அனுசரிக்கப்பட்ட **கிலாபத் தினத்துக்கு** தமிழ்நாட்டு இந்துக்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தார்.
- சென்னை நகரில், மௌலானா சவுகத் அலியின் தலைமையில் 1920, ஏப்ரல் 20-ல் கிலாபத் மாநாடு நடைபெற்றது. ராஜாஜி, கஸ்தூரிரங்க அய்யங்கார், பிரகாசம் ஆகியோர் அம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.
- சென்னை மாநில கிலாபத் இயக்கத்தை ராஜாஜியின் ஆதரவுடன் **யாகூப்** ஹாசன் 1920 மே மாதத்தில் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.
- தமிழ்நாட்டுக்கு 1920, ஆகஸ்டில் வருகை தந்த காந்தி கிலாபத் இயக்கத்த ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.
- அன்றுவடஆற்காடு(இப்போதுவேலூர்) மாவட்டத்திலுள்ள **வாணியம்பாடி,** கிலாபத் இயக்கத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தார்.
- தமிழ்நாட்டில் நீதிக்கட்சியினரும், சுயாட்சி அங்கத்தினரும், லிபரல் கட்சியினரும் கிலாபத் இயக்கத்தை ஆதரிக்கவில்லை.

## ஒத்துழையாமை இயக்கம்

- 1919-ல் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார்.

- தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் **சி.ராஜகோபாலாச்சாரியின்** தலைமையில் நடைபெற்றது.
- ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக சென்னைத் தொழிலாளர் சங்கம்சார்பில்பக்கிங்காம்&கர்னாட்டிக் (பிஅண்ட்சி) தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.
- தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினர் கொண்டு வந்த சட்டமன்றப் புறக் கணிப்பு வெற்றி பெறவில்லை.
- அதற்குக் காரணம், நீதிக்கட்சி தேசிய நீரோட்டத்திலிந்து விலகி அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று, ஒத்துழையாமை இயக்கத்தை ஒதுக்கிவிட்டு மக்களின் செல் வாக்கைப்பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றியதுதான்.
- தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்கள், 1921 ஜனவரி 10-ம் தேதி சென்னைக்கு வருகை தந்த **கானாட் கோமகனைப்** புறக்கணித்தனர்.
- கஸ்தூரி ரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், சத்தியமூர்த்தி, வ.உ. சிதம்பரனார், சிங்காரவேலு செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்ற தலைவர்களின் முயற்சியால் ஒத்துழையாமை இயக்கம் பெரும் வீச்சுடன் நடைபெற்றது.
- மேலும் இந்து, சுதேசமித்திரன், தேசபக்தன், முகமதன் போன்ற பத்திரிகைகளும் இந்த இயக்கம் வளர உதவின.
- தமிழகத்தில் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. பல்லாயிரக் கணக்கில் மக்கள் சிறை சென்றனர்.
- ஒத்துழையாமை இயக்கத்தின் போது **மலபாரில்** நிகழ்ந்த **மாப்ளா கலகம்** தமிழ்நாட்டில்மோசமானவிளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் தமிழ்நாட்டில் கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்கள் வலுவிழந்து போயின.
- **சௌரி சௌராவில்** நடைபெற்ற வன்முறை நிகழ்ச்சியினால் காந்தியே ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொண்டார்.

### சுயராஜ்ஜியக் கட்சி

- இந்திய விடுதலைப் போராட்டம் தேக்க நிலையிலிருந்து போது சுயராஜ்ஜியக் கட்சியினர் சட்டமன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்தனர்.
- தமிழ்நாட்டில் கஸ்தூரிரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, ஏ. ரங்கசாமி அய்யங்கார் ஆகியோர் சுயராஜ்ஜியக் கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர்.
- மத்திய சட்டமன்றத்திற்கு 1892, நவம்பர் 13 அன்று நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியினருள்ஏ.ரங்கசாமிஅய்யங்கார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், என். சீனிவாச அய்யங்கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

- சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைப் பெற்றாலும் கூட அமைச்சரவையை அமைக்க மறுத்து விட்டது. அதனால் டாக்டர் பி.சுப்பராயன் தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் சுயராஜ்ஜியக் கட்சி யினரால் இரட்டை ஆட்சியின் தீமைகளை எடுத்துக்காட்ட முடிந்ததே ஒழிய அதை செயலிழக்கச் செய்ய முடியவில்லை.

## நீல் சிலை சத்தியாக்கிரகம்

- சென்னை இராணுவப் பிரிவின் தலைவராயிருந்த கர்னல் நீல் 1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சியை ஒடுக்குவதில் தீவிரமாகச் செயல் பட்டிருந்ததைப் பாராட்டிப் பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னையின் பிரதான பகுதியில் நீலின் சிலையை வைத்தது.
- விடுதலைப் போராட்டத்தின் போது அந்தச் சிலையை அகற்றுவதற்காக நெல்லை சோமயாஜுலுவின் தலைமையில் சத்தியாக்கிரகக் குழு துவக்கப்பட்டது.
- 1927, ஆகஸ்ட் 11-ல் தொடங்கிய நீல்சிலை அகற்றும் போராட்டத்திற்கு சுப்புராயலு நாயுடுவும், முகமது சாலியா ராவுத்தரும் தலைமை தாங்க, நலின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர்.
- ஆகஸ்ட் மாதம் துவக்கப்பட்ட நீல் சிலை சத்தியாக்கிரகம் டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து தொண்டர்கள் சென்னைக்கு வந்து அப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.
- இராஜாஜி முதல்வரான பின்னர் 1937-ல் அச்சிலை அகற்றப்பட்டு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டது.

## சைமன் குழு புறக்கணிப்பு

- சைமன் குழு, 1930, பிப்ரவரி 3-ல் பம்பாய் நகருக்கு வந்து சேர்ந்தபோது அதை எதிர்த்து இந்தியா முழுவதிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
- இக்குழு சென்னைக்கு வந்த போது, **“சைமனே திரும்பிப் போ”** என்ற முழக்கம் எழுந்தது.
- சைமன் குழுவுக்கு எதிராகக் கருப்புக் கொடிகாட்டப்பட்டது. கண்டன ஊர்வலமும் கடற்கரைக் கூட்டமும் நடைபெற்றன.
- சைமன் குழுவிற்கு அளிக்கப்பட்ட அரசாங்க வரவேற்பில் டாக்டர் பி. சுப்புராயன் ரங்கநாத முதலியாரும், ஆரோக்கியசாமி முதலியாரும் பதவி விலகினர்.

## பூரண சுதந்திரம்

- 1927-ம் ஆண்டு சென்யையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்தான் முதன்முறையாக பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது.
- 1930, ஜனவரி 26-ம் நாள் தேசமெங்கும் **பூரண சுதந்திர நாள்** கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திலும், ஊரிலும் அந்நாள் கொண்டாடப்பட வேண்டு

மென இராஜாஜி பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்தார்.

- சென்னையில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. மாலையில் திருவல்லிக்கேணியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் பங்கேற்ற அறுபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பூரண சுதந்திர சபதம் எடுத்தனர்.

## தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கம்

- தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கம் **இராஜாஜி** தலைமையில் நடை பெற்றது. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மறியல்கள் நடைபெற்றன. உச்ச கட்டப் போராட்டமாக உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றது.
- 1930, ஏப்ரல் 30 அன்று **வேதாரண்யத்தில்** உப்பு காய்ச்சுவதற்காக இராஜாஜி தலைமையில் நூறு தொண்டர்கள் திருச்சியிலிருந்து புறப்பட்டனர்.
- சத்யாக்கிரகிகள், பாரதியாரின் **"அச்சமில்லை"** பாடலையும், இந்த வேதாரண்யம் யாத்திரைக்கென்றே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை புனைந்த **"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"** என்ற பாடலையும் பாடியவாறே நடந்து சென்றனர்.
- தஞ்சை மாவட்ட கலெக்டராக அப்போதியிருந்த எ.ஜே.தார்ன் என்பவர் இப்போராட்டத்தை நசுக்க பல வழிகளில் முயன்றார். ஆனாலும் போராட்ட வீரர்களுக்குத் திருவையாறு, தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற நகரங்களில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
- வேதாரண்யத்தை அடைந்து தடையை மீறி உப்புக் காய்ச்சிய ராஜாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- அவரைத் தொடர்ந்து சர்தார் வேதரத்தினம் பிள்ளை, டாக்டர் ராஜன், திருமதி.ருக்மணி லட்சுமிபதி போன்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.
- திருச்சியிலிருந்து இராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாக்கிரகிகள் புறப்பட்ட அன்றே ஆந்திர கேசரி பிரகாசம் தலைமையில் சென்னை நகரில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கப் பட்டது. போராட்டத் தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.
- காந்தி 1930, மே 5-ம் தேதி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன.
- சென்னை மாநில சட்டமன்ற நியமன உறுப்பினரான திருமதி. முத்துலட்சுமி ரெட்டி, காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்துத் தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- காந்தி கைது செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து ஆறுமாத காலத்திற்குத் தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் தீவிரமாக நடைபெற்றது.

- 1932 ஜனவரி 26ல் சென்னையில் தடையை மீறி தேசிய **சுயராஜ்ஜிய தினம்** கொண்டாடப்பட்டது.
- இறுதியாக, 1934-ல் சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த இயக்கம் தமிழ்நாட்டில் படித்தவர் களிடம், பாமர மக்களிடமும் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி தேசிய இயக்கம் வளர்ச்சியடைய உதவியது.

## தனிநபர் சத்தியாக்கிரகம்

- வார்தாவில் 1940, அக்டோபர் 13 அன்று கூடிய காங்கிரஸ் செயற் குழுக் கூட்டத்தில் காந்தியடிகள் தனிநபர் சத்தியாக்கிரகத் திட்டத்தை வெளியிட்டார்.
- அதன்படி, **தமிழ்நாட்டின் முதல் தனிநபர் சத்தியாக்கரகியாக டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்** என்பவர் சிறை சென்றார். இவரைத் தொடர்ந்து ராஜாஜி, சத்தியமூர்த்தி, டி.பிரகாசம், ம.பொ. சிவஞானம் உள்ளிட்ட பல தலைவர்கள் தனிநபர் சத்தியாக் கிரகத்தின் போது சிறை சென்றனர்

## வெள்ளையனே வெளியேறு இயக்கம்

- 1942, ஆகஸ்ட் 7,8 தேதிகளில் **பம்பாயில்** கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1942 ஆகஸ்டு 9-ம் தேதி **காந்தியடிகள்** வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து காந்தி உட்பட பல முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தமிழ்நாட்டில் பரப்பியவர் **காமராஜராவார்.**
- காந்தி கைது செய்யப்பட்ட செய்தி எட்டியவுடன் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கடைகள் அடைக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. கல்விக் கூடங்கள் காலியாக இருந்தன.
- தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கலகக்காரர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- கோயம்புத்தூரில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடையை மீறி ஊர்வலம் சென்றனர்.
- மதுரை மாவட்டம் முழுவதும் கடை யடைப்புச் செய்யப்பட்டது. தீயிடல், தந்திக் கம்பங்களை அறுத்தல், பாலங்களைத் தகர்த்தல் போன்ற வன்முறைச் செயல்கள் தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்ந்தன.
- வன்முறை அதிகமாகக் காணப்பட்ட இந்த ஆகஸ்ட் போராட்டம் அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளால் மூன்று மாதமே நீடித்ததது.

### இந்தியா சுதந்திரம் அடைதல்

- நீண்ட போராட்டத்திற்குப் பின்னர், 1947. ஆகஸ்ட் 15 அன்று இந்தியா விடுதலை அடைந்தது. ஆங்கிலேயரின் யூனியன் ஜாக்கொடி இறக்கப்பட்டு, இந்தியாவின் மூவர்ணக் கொடி பறக்க விடப்பட்டது.
- இந்தியா விடுதலையடைந்த போது, ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் தமிழக முதலமைச்சராக இருந்தார். விடுதலை நாளை நாட்டு மக்கள் மகிழ்ச்சி பொங்க, விழாவாகக் கொண்டாடினர்.

• • •

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்



# அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும்

## சுதந்திரத்திற்கு முன்

### இராஜாஜி

- 1937-ல் நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 214 இடங்களில் 159 இடங்களை வென்ற காங்கிரஸ், நீதிக்கட்சியிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1937 ஜூலை 14-ம் நாள் இராஜாஜி முதல்வராக (பிரீமியர்) பதவியேற்றார்.
- 1937-ல் விற்பனை வரி அறிமுகப் படுத்தப்பட்டது.
- உலகப்போரில் இந்தியாவை உட்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1939-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் இராஜாஜி தலைமையிலான அமைச்சரவை பதவி விலகியது.
- இரண்டாம் உலகப் போரால் ஏற்பட்ட நெருக்கடி நிலையினால் 1939 நவம்பர் முதல் 1946 ஏப்ரல் வரை சென்னை மாகாணத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்றது.

### டி.பிரகாசம்

- 1946 ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.
- 1946 ஏப்ரல் 30-ம் நாள் டி.பிரகாசம் முதலமைச்சரானார். நம்பிக்கை யில்லாத தீர்மானம் நிறைவேற்றப் பட்டதையடுத்து 1947 மார்ச் 23-ம்நாள் டி.பிரகாசம் தலைமையினலான அமைச்சரவை பதவியிழந்தது.

## சுதந்திரத்திற்கு பின்

### ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

- 1947 மார்ச் 23 அன்றே காங்கிரஸ் கட்சியின் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரீமியராக (முதலமைச்சர்) பதவியேற்றார். அன்று முதல் 6, 1949 வரை இவரே முதல்வராகத் தொடர்ந்தார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது புனித ஜார்ஜ் கோட்டையில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் சுதந்திரத் திருநாள் கொண்டாடப்பட்டது.

இவரே சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய முதலாவது தமிழக முதல்வராவார்.

- இவரது ஆட்சியில் 1949-ல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது.
- 1949 ஏப்ரல் 6 முதல் 1950 ஜனவரி 26வரை பி.எஸ். குமாரசாமி ராஜா தலைமையிலான காங்கிரஸ் அரசு அதிகாரத்திலிருந்தது.

**இராஜாஜி**

- தமிழகத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படியான முதல் பொதுத்தேர்தல் 1952 மார்ச்-ல் நடைபெற்றது.
- மாணிக்க வேலரின் **பொதுநலக்கட்சி** (Commonweal Party) மற்றும் **உழைப்பாளர் கட்சியைச்** சேர்ந்த ராமசாமி படையாச்சி ஆகியோரது ஆதரவுடன் 1952 ஏப்ரல் 12-ல் இராஜாஜி முதலமைச்சரானார்.
- 1953 அக்டோபர் ஒன்றாம் தேதி ஆந்திர மாநிலம் உதயமானது.
- **ஆந்திர கேசரி** என்று அழைக்கப்பட்ட **டி.பிரகாசம்** ஆந்திர மாநிலத்தின் முதல் முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- 1953-ம் ஆண்டு இராஜாஜி கொண்டு வந்த **குலக்கல்வித் திட்டம்** பெரும் எதிர்ப்பை சந்தித்தது. இதையடுத்து 1954 ஏப்ரல் 13-ல் இராஜாஜி தமது பதவியை ராஜினாமா செய்தார்.

**காமராஜர்**

- இராஜாஜிக்கு பிறகு 1954 ஏப்ரல் 13 முதல் 1963 அக்டோபர் 2-ம் நாள் வரை காமராஜர் தமிழக முதல்வராக அரும்பணியாற்றினார்.
- 1956-ல் காமராஜர் **தமிழ்** மொழியை **ஆட்சி மொழியாக்கினார்.**
- 1958-ல் தொழிலாளர் **கூலி நிர்ணயச் சட்டம்** இயற்றப்பட்டது.
- 1955-ல் எட்டயபுரத்தில் **இலவச மதிய உணவுத் திட்டத்தை** துவக்கினார் காமராஜர்.
- 1955-ல் **விவசாய வருமான வரிச் சட்டம்** இயற்றப்பட்டது.
- 1956-ல் இயற்றப்பட்ட சென்னை குத்தகை சாகுபடியாளர்கள் (நியாய மான குத்தகை செலுத்துதல்) சட்டம், நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்தது.
- 1958-ல் **தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம்** இயற்றப்பட்டது.
- 1961-ல் சென்னை **நில சீர்திருத்தச் சட்டம்** இயற்றப்பட்டது. இது நில உச்ச வரம்பை 30 ஏக்கராக நிர்ணயித்தது.
- 1961 பிப்ரவரி 24-ல் சட்டப்பேரவையில் அரசாங்க நிர்வாக கடிதப் போக்குவரத்தில் மெட்ராஸ் ஸ்டேட் என்பதை இனி **தமிழ்நாடு** என்று எழுதப்படும்என அரசு அறிவித்தது.
- 1963-ல் காமராஜர் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவற்காக **"காமராஜர்**

**திட்டம்" (K-Plan or Kamaraj Plan)** கொண்டு வந்தார்.

- அத்திட்டப்படி காமராஜர் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சிப் பணிக்கு திரும்பினார்.

**பக்தவத்சலம்**

- காமராஜருக்குப் பிறகு தமிழக முதலமைச்சராக பதவியேற்றவர் எம்.பக்தவச்சலம் ஆவார். இவர் 1963 அக்டோபர் 2 முதல் 1967 மார்ச் 6 வரை முதல்வரக பதவி வகித்தார்.
- இவரே காங்கிரஸ் கட்சியின் கடைசி தமிழக முதலமைச்சராவார்.
- இவரது ஆட்சிக் காலத்தில் **இந்தி எதிர்ப்புப் போராட்டம்** தமிழகம் முழுவதும் பரவியது.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்**

**சுதந்திரத்திற்கு முன்பு இந்தி எதிர்ப்பு**

- பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியாவில், ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் நோக்கத்துடன் காங்கிரஸ் இயக்கம் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியது.
- 1918 மற்றும் 1922-ம் ஆண்டுகளில் **சென்னை** மாகாணத்தில் இந்தியைப் பரப்புவதற்காக 40 மையங்கள் தொடங்கப்பட்டன. அதற்கு நீதிக் கட்சியின் ஆதரவும் கிடைத்தது.
- சென்னை மாகாண மக்களின் மேல் பிராமணங்களின் பண்பாட்டு ஆதிக்கமே, மீண்டும் இந்தி வடிவில் வருகிறது என்று **பெரியார்** கூறினார். இதனால் தமிழ் மக்களின் முன்னேற்றம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும் என்று கூறினார்.
- 1930-ல் **நன்னிலத்தில்** நடைபெற்ற சுயமரியாதை நாட்டில் **இந்தி எதிர்ப்பு தீர்மானம்** நிறைவேற்றப்பட்டது.
- 1936-ல் **பொப்பிலி ராஜா** தலைமை யிலான நீதிக்கட்சி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியை இரண்டாவது மொழியாக பயிற்றுவிக்க ஆணை பிறப்பித்தது.
- முதல் முறையாக இந்தி எதிர்ப்பு போராட்டம் 1937-ம் ஆண்டு நடத்தப் பட்டது.
- இராஜாஜி தமிழக முதல்வராக பதவிக்கு வந்த ஒரு மாத காலத்திலேயே 1937 ஆகஸ்ட் 11 அன்று பள்ளிகளில் **இந்தி கட்டாய பாடமாக்கப்படும்** என்பதை அறிவித்தார்.
- இராஜாஜியின் இந்த அறிவிப்பை எதிர்த்து முன் முதலாக மறைமலை அடிகள், பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் ஆகியோர் திருச்சியில் **முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டை** நடத்தினார்.
- சென்னையில் நீதிக்கட்சியைச் சேர்ந்த ஏ.டி. பன்னீர் செல்வம் மற்றும் ஈ.வெ.ரா பெரியார் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றன,

- இந்த எதிர்ப்புகளுக்கிடையே இந்தியை கட்டாய பாடமாக்கும் அரசாணையை இராஜாஜி 1938 ஏப்ரல் 21 அன்று வெளியிட்டார்.
- இராஜாஜி மற்றும் இந்திக்கு எதிராக மாநில அளிவில் எதிர்ப்பு கிளம்பியது. 1938 டிசம்பர் 3 இந்தி எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டது.
- 1939-ல் இந்தி எதிர்ப்பு பேரணியில் பங்கேற்றதால் கைது செய்யப்பட்ட தாளமுத்து மற்றும் நடராஜன் ஆகியோர் காவலில் இருக்கும்போதே இறந்தனர். பின்னர் இவர்கள் மொழிப்போர் தியாகிகள் என்று அழைக்கப்பட்டனர்.
- இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு 1939-ம் ஆண்டு பதவி விலகியது. அதைத் தொடர்ந்து சென்னை மாகாண ஆளுநர் எர்ஸ்கின் பிரபு 1940 பிப்ரவரியில் இந்தக் கட்டாய இந்திக் கல்வியை விலக்கி அதை விருப்பப் பாடமாக்கினார்.

**சுதந்திரத்திற்கு பிறகு இந்தி எதிர்ப்பு**

- சுதந்திரத்திற்கு பிறகு ஓ.பி.ராமசாமி ரெட்டியார் தலைமையிலான அரசு சென்னை மாகாணத்தில் மீண்டும் இந்தியை கட்டாயப் பாடமாக்கியது. இதனால் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கியது.
- 1948 நவம்பர் 2-ல் அண்ணாவைத் தளபதியாகக் கொண்டு திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தொடங்கியது.
- 1950 மே 2-ல் அப்போதைய கல்வி அமைச்சர் மாதவராவ் ஒன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை இரண்டாம் மொழியாக ஆங்கிலமும்/ மூன்றாம் மொழியாக இந்தியும்கட்டாய பாடம் என்ற உத்தரவை பிறப்பித்தார்.
- 1950 மே 10-ம் நாள் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.
- பின்னர் 1950, ஜூலை 18-ல் அரசு தனது கட்டாய இந்தி திணிப்பை அகற்றியது.
- 1952 முதல் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து மொழிப் போராட்டத்தை துவங்கின. முதற்கட்டமாக பெயர் பலகை யிலுள்ள இந்தி எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் ஆரம்பமானது.
- 1963-ம் ஆண்டு ஏப்ரல் 13அன்று இந்திய ஆட்சி மொழிச் சட்டத்தை அப்போதைய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தாக்கல் செய்தார்.
- இச்சட்டத்தின்படி 1965 ஜனவரி 26-ம் நாள் இந்தியாவில் இந்தி ஆட்சி மொழி யாகும். இந்தி மொழிக்கு துணை மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப் படும் என்று அறிவிக்கப் பட்டது.
- இச்சட்டம் இந்தி பேசாத மக்களுக்கு இழைத்த அநீதி என்று கருதி இதை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது.
- 1967 மார்ச் 6-ல் அண்ணாதுரை தமிழக முதல்வரானார்.

- 1968 ஜனவரி 23 -ல் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளே தமிழகத்தின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று இரு மொழி கொள்கை திட்டத்தை அறிமுகம் செய்தவுடன் நீண்ட கால மாக நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்பு போராட்டம் முடிவடைந்துது.

## தி.மு.க. ஆட்சியல் தமிழகம்

- 1944-ம் ஆண்டு தந்தை பெரியரால் திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
- பெரியாருக்கும் அண்ணாதுரைக்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு காரணமாக, அண்ணாதுரை திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை உருவாக்கினார்.
- தி.மு.க. என்றழைக்கப்படும் திராவிட முன்னேற்றக் கழகம் **1952**-ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் பங்கேற்கவில்லை.
- தி.மு.க. **1967** தேர்தலில் **1938** இடங்களை வென்று முதன் முறையாக ஆட்சியைப் பிடித்தது.
- **1967** பிப்ரவரி **6**-ம் நாள் அக்கட்சியின் பொதுச் செயலாளர் அண்ணா தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.
- இவரது ஆட்சியில் **1969**-ம் ஆண்டு ஜனவரி **14** அன்று சென்னை மாநிலம் **"தமிழ்நாடு"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- **1968** ஜனவரி **23**-ல் தமிழக அரசின் மொழிக் கொள்கையாக "தமிழ், ஆங்கிலம்" என்ற இருமொழி திட்டத்தை அறிவித்தார் அண்ணா.
- **1968** ஜனவரி **3**-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- அண்ணா அறிமுகப்படுத்திய **சுய மரியாதைத் திருமண பாதுகாப்புச் சட்டம் 1968,** ஜனவரி **20** முதல் நடைமுறைக்கு வந்தது.
- **1969**-ல் அண்ணா இறந்ததும் நாவலர் நெடுஞ்செழியன் தற்காலிக முதல்வராகப் பணியாற்றினார்.
- **1969** பிப்ரவரி **10**-ல் **கலைஞர் மு.கருணாநிதி** தமிழக முதல்வராகப் பதவியேற்றார். **1971** ஜனவரி **31**அன்று ஆட்சி கலைக்கப்படும் வரை அவர் அப்பதவியில் தொடர்ந்தார்.
- **1972** அக்டோபர் 14-ல் கட்சிப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து வெளியேறி அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை உருவாக்கினார். இது தி.மு.கவில் ஏற்பட்ட மிகப்பெரிய பிளவாகக் கருதப்பட்டது.
- கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தமிழ் வளர்ச்சிக்காக தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய **"நீராடும் கடலுடுத்த"** என்ற பாடல் அறிவிக்கப்பட்டது.

- "ஸ்டேட் எக்ஸ்பிரஸ்" என்ற பெயரில் இயக்கப்பட்ட பேருந்துகளுக்கு **"தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்"** என பெயர் மாற்றம் செய்யப் பட்டது.
- 1969 ஜுன் 13-ல் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டம் இயற்றப்பட்டது.
- **1970-ல் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்** தொடங்கப்பட்டது.
- 1970-ல் **உலக தமிழாராய்ச்சி நிறுவனம்** நிறுவப்பட்டது.
- 1971-ல் கண்ணொளி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.
- 1973-ல் இலவச சைச்சிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் துவக்கம்.
- 1974-ல் **ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டம்** துவக்கம்
- 1974-ல் அகர முதலியை பல தொகுதிகளாக வெளியிடுவதற்கான "அகர முதலி திட்ட இயக்கத்தை" நிறுவினார் கருணாநிதி.
- 1975-ல் அனாதை சிறுவர் மற்றும் மகளிர் மறுவாழ்வுத் திட்டம் செயல் படுத்தப்பட்டது.
- 1969 அக்டோபர் 2 அன்று மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் பற்றி ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி **டாக்டர் பி.வி. ராஜமன்னார்** தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- 1974 ஏப்ரல் 20-ல் **"மாநில சுயாட்சி"** கோரும் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
- **1976** முதல் **1989** வரை அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகவும், தி.மு.க. எதிர்க் கட்சியாகவும் இருந்தது.
- 1989-ல் டாகடர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் துவங்கப் பட்டது.
- மக்கள் நலன்களுக்கான குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவை உருவாக்கப் பட்டன.
- **1989** டிசம்பர் **29-ல் பெண்களுக்கு சொத்துரிமை** வழங்கும் சட்டம் இயற்றப்பட்டது.
- **1993** அக்டோபர் **11**-ல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வை. கோபாலசாமி (வைகோ) கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் தி.மு.க.வில் இரண்டாவது முறையாக பிளவு ஏற்பட்டது.
- **1996**-ல் மெட்ராஸ் என்பது **சென்னை** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- **1999**-ல் தமிழகத்தில் முதல் **உழவர் சந்தை** மதுரையில் துவக்கப்பட்டது.
- **2006** ஜுன் **3**-ம் தேதி "2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை" துவங்கினார் கருணாநிதி.
- **2006**-ல் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜுலை **15 "கல்வி**

**வளர்ச்சி நாளாக"** அறிவிக்கப் பட்டது.

- **2006** நவம்பர் **11**-ல் "வேலையில்லா இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்" துவக்கம்.
- 2006 ஜனவரி 15 அன்று இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது.
- தமிழகத்தில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைகான நுழைவுத் தேர்வை ரத்து செய்வதற்காக 2006 ஜூலை 7-ல் அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் அனந்த் கிருஷ்ணன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- இக்குழுவின் பரிந்துரைப்படி தமிழகத்தில் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.
- 2007 ஜனவரி 1 முதல் தமிழ்நாட்டில் மதிப்பு கூட்டு வரி அமலுக்கு வந்தது.
- 2008 செப்டம்பரில் இலவச அவசர கால மருத்துவ ஊர்தி திட்டம் "108" (இலவச அம்புலன்ஸ் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.
- பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பு முறைப் படுத்துதல்) சட்டம் 2009-ம் ஆண்டு இயற்றப்பட்டது.
- 2010 மார்ச் 13-ல் புதிய சட்டமன்ற வளாகம் திறக்கப்பட்டது.
- 2010-ம் ஆண்டு "தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறை சட்டம்" இயற்றப்பட்டது.
- 2010-ஜூன் 23 முதல் 27 வரை கோவை மாநகரில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்றது.

## அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம்

**எம்.ஜி.ராமச்சந்திரன்**

- 1962-ல் மேலவை உறுப்பினர்.
- 1967-ல் பரங்கிமலைத் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பின ரானார்.
- 1972 அக்டோபர் 13-ல் தி.மு.க. விலிருந்து வெளியேற்றம்
- 1977 முதல் 1987 வரை தமிழக முதல் வராக ஆட்சி புரிந்தார்.
- **புரட்சித் தலைவர்** என்றும் **மக்கள் தலைவர்** என்றும் போற்றப்படும் எம்.ஜி.ஆர். (மருதூர் கோபாலமேனன் ராமச்சந்திரன்) 1972-ம் ஆண்டு அக்டோபர் 18-ம் நாள் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற கட்சியைத் தோற்றுவித்தார்.
- பின்னர் அக்கட்சியின் பெயரை "அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றம் செய்தார்.
- **1973**-ல் இக்கட்சி முதன் முதலாக **திண்டுக்கல்** பாராளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

- 1974-ல் நடைபெற்ற பாண்டிச்சேரி சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைந்தது.
- 1977-ல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. 131 இடங்களைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தது.
- **1977** ஜுன் **30**-ல் **எம்.ஜி.ஆர்.** தமிழக முதல்வராகப் பதவியேற்றார். அது முதல் **1987** தமிழக முதல்வராக ஆட்சிப்புரிந்தார்.
- **1978**-ல் தமிழகத்தில் **"10+2+3"** எனும் கல்விமுறை அமலுக்கு வந்தது. சென்னையில் **"அண்ணா பல்கலைக் கழகம்"** துவங்கப்பட்டது.
- **1980**-இல் பரம்பரையாக இருந்த கிராம ஊழிய முறை ஒழிக்கப்பட்டது. கர்ணம், கிராம முன்சீப் போன்ற பதவிகளும் ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக **"கிராம நிர்வாக அதிகாரிகள்"** நியமிக்கப் பட்டனர்.
- **1980**-ல் நடைபெற்ற **7**வது சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வரானானர் எம்.ஜி.ஆர்.
- **1981**-ல் மதுரையில் **"ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு"** நடை பெற்றது.
- **1981** செப்டம்பர் 15-ல் "தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்" உருவாக்கப்பட்டது.
- **1982**-ல் கோவையில் பாரதியார் பல் கலைக்கழகமும், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும் தொடங்கப்பட்டது.
- **1982**-ல் எம்.ஜி.ஆர் **"இலவச சத்துணவு திட்டத்தை"** துவக்கினார்.
- **1983**-கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்காக ஆந்திர அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார் எம்.ஜி.ஆர்.
- **1983**-ல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு திறக்கப் பட்டது.
- **1983**-ல் சிறு விவசாயிகளுக்கு **இலவச மின்சாரம் வழங்கும் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.
- **1984**-ல் எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்றுக் கொண்டிருக்கும் போது தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் அவர் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று மீண்டும் தமிழக மதல்ரானார்.
- **1987** டிசம்பர் **24**-ம் தேதி எம்.ஜி.ஆர். உயிர் நீத்தார். இவருக்குப் பிறகு இவரது மனைவி **ஜானகி அம்மையார்** 1988 ஜனவரி **7** முதல் **30** வரை தமிழக முதல்வராக பதவி வகித்தார். இவரே தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சராவார்.
- அ.இ.அ.தி.மு.கவில் **1988**-ல் பிளவு ஏற்பட்டு மீண்டும் **1989**-ல் ஒன்றாக இணைந்தது.

## டாக்டர் ஜெ.ஜெயலலிதா ஆட்சியில் தமிழகம்

- 1991 ஜூன் மாதத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது.
- **1991** ஜூன் 24 அன்று **செல்வி. ஜெ. ஜெயலலிதா** தமிழக முதல்வராக பதவியேற்றார்.
- இவரே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட **தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சராவார்.** பதவியேற்ற அன்று முதன் முதலாக தமிழகத்தில் மதுக்கடைகளை மூடுவதற்கான உத்தரவில் கையெழுத்திட்டார்.
- **1992**-ல் **அனைத்து மகளிர் காவல் நிலையம்** தொடக்கம்.
- **1992**-ல் பெண் குழந்தைகளை பாது காப்பதற்கான **தொட்டில் குழந்தை திட்டம்** துவங்கப்பட்டது.
- **1994**-ல் **மண்டல் கமிஷன்** பரிந்துரைகள் அமலுக்கு வந்தன.
- **1995**-ல் **எட்டாவது உலகத் தமிழ் மாநாடு** தஞ்சையில் நடைபெற்றது.
- 1996 சட்டமன்ற தேர்தலில் தோல்வி யடைந்தது.
- மே, 2001-ல் நடைபெற்ற 12-வது சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, மே 15 அன்று ஜெயலலிதா இரண்டாவது முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்றார்.
- டான்சி நில வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டதால் அவர் முதல்வராக பதவியேற்றது செல்லாது என உச்ச நீதிமன்றம் செப்டம்பர் 21, 2001 இல் தீர்ப்பளித்தது.
- இதனால் ஜெயலலிதா பதவி விலக ஓ. பன்னீர் செல்வம் தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- இதற்கிடையில் டான்சி வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற டிசம்பர் 4, 2001-ல் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தது.
- அதன் பிறகு ஜெயலலிதா 2002 பிப்ரவரி 21-ல் ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 2002, மார்ச் 2-ல் ஜெயலலிதா மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- 2002, மார்ச் 23-ல் கோயில்களின் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டது. 2002-ல் “அனைவருக்கும் கல்வித் திட்டம்” தொடங்கப்பட்டது. ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றை சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- தமிழகத்தின் லாட்டரி சீட்டுகள் தடை செய்யப்பட்டன.

- பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் புகையிலைப் பொருட்களின் விற்பனை தடை செய்யப்பட்டது.
- 2004 அக்டோபர் 18-ல் கூடுதல் டி.ஜி.பி. விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படையினர் “பட்டுப்பூச்சிக் கூடு ஆபரேஷன்”திட்டப்படிசந்தனக்கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்றனர்.
- 2006 சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தோல்வியடைந்தது.
- 2011-ல் நடைபெற்ற 14வது சட்டமன்ற தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. பெரும் வெற்றி பெற்றது. ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜெயலலிதா 2011, மே 15 அன்று நான்காவது முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்.
- முதல்வராக பதவியேற்றதும் 6 இலவச திட்டங்களுக்கு கையொப்பமிட்டார்.
- இலவச அரிசி வழங்கும் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், இலவச கால் நடைகள் வழங்கும் திட்டம், மாணவர் களுக்கு இலவச மடிகணினி வழங்கும் திட்டம், முதியோர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் தற்போது செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழக அரசியல் கட்சிகள்

| கட்சிப் பெயர் | உருவாக்கப்பட்ட ஆண்டு | தோற்றுவித்தவர்கள் |
|---|---|---|
| நீதிக்கட்சி | 1916 | டி.எம்.நாயர், தியாகராஜ செட்டியார் |
| திராவிடர் கழகம் | 1944 | தந்தை பெரியார் |
| தமிழரசுக் கழகம் | 1946 | ம.பொ. சிவஞானம் |
| திராவிட முன்னேற்றக்கழகம் | 1949 | சி.என். அண்ணாதுரை |
| தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி | 1951 | எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி |
| காமன்வீல் கட்சி (Common weal Party) | 1951 | எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கர் |

| | | |
|---|---|---|
| சுதந்திரக் கட்சி | 1959 | இராஜாஜி மற்றும் என்.ஜி.ரங்கா |
| தமிழ் தேசியக்கட்சி | 1961 | ஈ.வெ.கே. சம்பத் |
| அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் | 1972 | எம்.ஜி.ராமச்சந்திரன் |
| விடுதலை சிறுத்தைகள் | 1972 | - |
| பாட்டாளி மக்கள் கட்சி | 1990 | டாக்டர். ராமதாஸ் |
| மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் | 1994 | வை.கோபால்சாமி (வைகோ) |

• • •

# இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும்

## இந்தியாவில் இட ஒதுக்கீடு

### அறிமுகம்

நாட்டில் இடஒதுக்கீடு முறையின் தோற்றத்திற்கு இந்தியாவின் பழமையான சாதி அமைப்பு பொறுப்பு. எளிமையான சொற்களில், இது அரசாங்க வேலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சட்டமன்றங்களில் கூட சில பிரிவுகளுக்கு இடங்களை அணுகுவதை எளிதாக்குவது பற்றியது. இந்த பிரிவுகள் சாதி அடையாளத்தின் காரணமாக வரலாற்று அநீதியை எதிர்கொண்டன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தும், நடவடிக்கையாக, இட ஒதுக்கீடு நேர்மறையான பாகுபாடாகவும் காணப்படுகிறது. இந்தியாவில் இது இந்திய அரசியலமைப்பின் ஆதரவுடன் அரசாங்க கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகிறது.

### வரலாற்று பின்னணி

1882-இல் வில்லியம் ஹண்டர் மற்றும் ஜோதிராவ் புலே ஆகியோர் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு முறையின் கருத்தை முதலில் கருதினர். இன்று இருக்கும் இட ஒதுக்கீடு முறை, அதன் உண்மையான அர்த்தத்தில், 1933-இல் பிரிட்டிஷ் பிரதமர் **ராம்சே மெக்டொனால்ட் ”வகுப்புவாத விருதை”** வழங்கியபோது அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த விருது முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் தலித்துகளுக்கு தனி வாக்காளர்களுக்கு (Separate Electroate) ஏற்பாடு செய்தது. நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, காந்தியும் அம்பேத்கரும் **”பூனா ஒப்பந்தத்தில்”** கையெழுத்திட்டனர். அங்கு சில **இட ஒதுக்கீடுகளுடன் ஒரு இந்து வாக்காளர்கள்** இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு, ஆரம்பத்தில் இடஒதுக்கீடு எஸ்.சி. மற்றும் எஸ்.டி.களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. மண்டல ஆணையத்தின் பரிந்துரைகளின் பேரில் 1991-ஆம் ஆண்டில் இட ஒதுக்கீட்டின் நோக்கத்தில் OBCகள் சேர்க்கப்பட்டன.

### மண்டல் ஆணையம்

அரசியலமைப்பின் 340வது பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி, பி.பி.மண்டலின் தலைமையில் 1978 டிசம்பரில் பின் தங்கிய வகுப்பினர் ஆணையத்தை நியமித்தார். இந்தியாவின் ”சமூக மற்றும் கல்வி ரீதியாக பின் தங்கிய வகுப்புகளை” வரையறுப்பதற்கான அளவுகோல்களைத் தீர்மானிக்கவும், அந்த வகுப்புகளின் முன்னேற்றத்திற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்திய மக்கள் தொகையில் 52 சதவீத ஓபிசிகளைக் கொண்டிருப்பதாக மண்டல் ஆணையம் முடிவு செய்தது. எனவே 27% அரசு வேலைகள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ருக்க வேண்டும்.

இந்த ஆணையம் சமூக, கல்வி மற்றும் பொருளாதார பின்தங்கிய நிலைக்கு பதினொரு குறிகாட்டிகளை உருவாக்கியுள்ளது.

இந்துக்களிடையே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அடையாளம் காண்பதைத் தவிர, இந்துக்கள் அல்லாதவர்களிடையே (எ.கா. முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் புத்த மதத்தினர்) மத்தியில் பின் தங்கிய வகுப்பினரையும் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது. இது அகில இந்திய பிறபிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் (ஓபிசி) 3,743 சாதிகளின் பட்டியலையும், 2,108 சாதிகளின் மிகவும் தாழ்த்தப்பட்ட "தாழ்த்தப்பட்ட பின்தங்கிய வகுப்புகள்" பட்டியலையும் உருவாக்கியுள்ளது.

**இந்திர சாவ்னி வழக்கு (1992)**

1992-ஆம் ஆண்டின் இந்திர சாவ்னி வழக்கில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 சதவீத ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் உறுதி செய்தபோது, உயர் சாதியினரிடையே பொருளாதார ரீதியாக பின் தங்கியவகுப்பினருக்கு 10% அரசு வேலைகளை ஒதுக்கிய அரசாங்க அறிவிப்பை நிறுத்தியது.

இதே வழக்கில் உச்சநீதிமன்றம் ஒருங்கிணைந்த இடஒதுக்கீடு பயனாளிகள் இந்தியாவின் மக்கள்தொகையில் **50 சதவீதத்தை தாண்டக் கூடாது** என்ற கொள்கையை உறுதிப்படுத்தியது.

"கிரீமிலேயர்" (Creamy layer) என்ற கருத்தும் இந்த தீர்ப்பின் மூலமாகவும், பின் தங்கிய வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு ஆரம்ப நியமனங்களுடன் மட்டுமே இருக்க வேண்டும். பதவி உயர்வுகளுக்கு நீட்டிக்கப்படக்கூடாது என்றும் தீர்ப்பளித்தது. சமீபத்தில், 2019-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (103வது திருத்தம்) சட்டம், அரசாங்க வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 10% இடஒதுக்கீட்டை "பொருளாதார ரீதியாக பின் தங்கியவர்களுக்கு" முன்பதிவு செய்யப்படாத பிரிவில் வழங்கியுள்ளது.

பொருளாதார பின் தங்கியவர்களின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இந்த சட்டம் அரசியலமைப்பின் 15 மற்றும் 16வது பிரிவுகளைத் திருத்துகிறது. இந்த 10% பொருளாதார இடஒதுக்கீடு 50% இடஒதுக்கீடு அளவுக்கு (ceiling Limit) க்கு மேல் உள்ளது.

**இந்தியாவில் இடஒதுக்கீட்டை நிர்வகிக்கும் அரசியலமைப்பு விதிகள்**

பகுதி XVI மத்திய மற்றும் மாநில சட்டமன்றங்களில் எஸ்சி மற்றும் எஸ்டி இடஒதுக்கீடு தொடர்பானது. அரசியலமைப்பின் 15 (4) மற்றும 16 (4)வது பிரிவு, எஸ்.சி. மற்றும் எஸ்.டி உறுப்பினர்களுக்கு அரசு சேவைகளில் இடங்களை ஒதுக்க மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு உதவியது.

அரசியலமைப்பு (77வது திருத்தம்) சட்டம், 1995-ஆல் திருத்தப்பட்டது மற்றும் அரசாங்கத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான இடஒதுக்கிட்டை வழங்குவதற்காக 16வது பிரிவில் ஒரு புதிய பிரிவு (14 ஏ) சேர்க்கப்பட்டது. பின்னர், இடஒதுக்கீடு வழங்குவதன் மூலம் பதவி உயர்வு பெற்ற எஸ்சி மற்றும் எஸ்டியினர்க்கு பதவி உயர்வு வழங்குவதற்காக, அரசியலமைப்பு (85வது திருத்தம்) சட்டம், 2001ஆல் உட்பிரிவு (14 ஏ) மாற்றப்பட்டது.

அரசியலமைப்பு 81வது திருத்தச் சட்டம், 2000 பிரிவு 16 (4 பி) ஐச் சேர்த்தது, இது அடுத்த ஆண்டு எஸ்சி/எஸ்டி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒருவருடத்தின் நிரப்பப்படாத காலியிடங்களை நிரப்புவதற்கு அரசுக்கு உதவுகிறது. இதன் மூலம் மொத்த காலியிடங்களின் எண்ணிக்கையில் ஐம்பது சதவீத இடஒதுக்கீட்டின் உச்சவரம்பை ரத்து செய்கிறது.

சரத்து 330 (Article 330) மற்றும் சரத்து 332 (Article 332)வது பிரிவு முறையே பாராளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் எஸ்சி மற்றும் எஸ்டி இடங்களை ஒதுக்குவதன் மூலம் குறிப்பிட்ட பிரதிநிதிததுவத்தை வழங்குகிறது.

பிரிவு 243D ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எஸ்சி மற்றும் எஸ்.டி.களுக்கான இடங்களை ஒதுக்கீடு செய்கிறது. பிரிவு 243T ஒவ்வொரு நகராட்சியில் எஸ்சி மற்றும் எஸ்டி இடங்களுக்கான இடஒதுக்கீட்டை வழங்குகிறது. அரசியலமைப்பின் 335வது பிரிவு, எஸ்.சி.க்கள் மற்றும் எஸ்.டி.க்களின் கூற்றுகள் நிர்வாகத்தின் செயல்திறனைப் பராமரிப்பதன் மூலம் அரசியலமைப்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்று கூறுகிறது.

**இடஒதுக்கீடு தொடர்பான நீதித்துறை ஆய்வு**

மெட்ராஸ் மாநிலம் Vs. திருமதி. வி.செம்பகம் துரைராஜன் (Champakam Durairajan) (1951) வழக்கு இடஒதுக்கீடு தொடர்பான உச்சநீதிமன்றத்தின் முதல் முக்கிய தீர்ப்பாகும். இந்த வழக்கு அரசியலமைப்பில் முதல் திருத்தத்திற்கு வழிவகுத்தது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியது, மாநிலத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழக்கில், பிரிவு 16(4) பின்தங்கிய வகுப்பு குடிமக்களுக்கு ஆதரவாக இடஒதுக்கீடு அளிக்கும்போது, 15வது பிரிவில் அத்தகைய ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க, பாராளுமன்றம் பிரிவு 15ஐ பிரிவு (4)ஐ சேர்த்ததன் மூலம் திருத்தியது.

இந்திர சாவ்னி.வி. Vs. யூனியன் ஆப் இந்தியா (1992) வழக்கில் நீதிமன்றம் 16 (4)வது பிரிவின் நோக்கம் மற்றும் அளவை ஆய்வு செய்தது. OBCகளின் கிரீமிலேயரை இட ஒதுக்கீட்டின் பயனாளிகளின் பட்டியலில் இருந்து விலக்க வேண்டும். பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடுட இருக்கக்கூடாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. மொத்த ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 50% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

பாராளுமன்றம் பதிலளித்தது 77வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை இயற்றியது, இது பிரிவு 16(4ஏ)ஐ அறிமுகப்படுத்தியது. பொதுவேலை வாய்ப்பில் சமூகங்கள் போதுமான அளவில் பிரதிநிதித்துவம் செய்யப்படாவிட்டால், பொது சேவைகளில் பதவி உயர்வுகளில் எஸ்சி மற்றும் எஸ்டிக்கு ஆதரவாக இடங்களை ஒதுக்குவதற்கான கட்டுரை அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

எம்.நாகராஜ் Vs. யூனியன் ஆப் இந்தியா 2006 வழக்கில் உச்சநீதிமன்றம் சரத் 16 (4ஏ) இன் அரசியலமைப்பு செல்லுபடியை உறுதிசெய்த போது, அரசியலமைப்பு ரீதியாக செல்லபடியாகும் வகையில் அத்தகைய இடஒதுக்கீடு கொள்கை பின்வரும் அரசியலமைப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் என்று கூறியது.

எஸ்.சி. மற்றும் எஸ்.சி சமூகம் மற்றும் கல்வி ரீதியாக பின் தங்கிய நிலையில் இருக்க வேண்டும்.

எஸ்.சி. மற்றும் எஸ்.டி சமூகங்கள் பொது வேலை வாய்ப்பில் போதுமான அளவில் குறிப்பிடப்படவில்லை.

இத்தகைய இடஒதுக்கீடு கொள்கை நிர்வாகத்தின் ஒட்டு மொத்த செயல் திறனை பாதிக்காது. 2018-ஆம் ஆண்டின் ஜர்னைல் சிங் மற்றும் லட்சமி நரேன் குப்தா வழக்கில், பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு, பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் பின்தங்கிய நிலை குறித்து அளவிடக்கூடிய தரவுகளை சேகரிக்க மாநிலத்திற்கு தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் கருதுகிறது.

கிரீமிலேயர் (Creamy layer) விலக்கு எஸ்.சி./எஸ்.டிக்களுக்கு நீட்டிக்கப்படுகிறது என்றும், எனவே தங்கள் சமூகத்தின் கிரீமிலேயரைச் சேர்ந்த எஸ்.சி/எஸ்.டி நபர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் அரசு இட ஒதுக்கீடு வழங்க முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது.

**இட ஒதுக்கீடு ஏன் தேவை?**

- ❖ நாட்டில் பின் தங்கிய வகுப்பினர் எதிர்கொள்ளும் வரலாற்று அநீதியை சரி செய்ய
- ❖ பல நூற்றாண்டுகளாக வளங்கள் மற்றும் வழிமுறைகளை அணுகியவர்களுடன் போட்டியிட முடியாததால்
- ❖ பின் தங்கிய பிரிவுக்கு ஒரு சமநிலையை (Level playing field) வழங்குவது.
- ❖ பின் தங்கிய வகுப்புகளின் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த

**இட ஒதுக்கீட்டிற்கு எதிரான வாதம்:**

- ❖ அரசு சேவைகளில் இடஒதுக்கீடு அரசாங்க ஊழியர்களிடையே பிளவு மற்றும் பகைமைக்கு வழிவகுத்தது.
- ❖ சாதி ஒழிப்பு என்பது இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கமாக இருந்தது. ஆனால் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது சமூகத்தில் சாதி என்ற கருத்தை மட்டுமே நில நிறுத்துகிறது.
- ❖ வரலாற்று ரீதியாக பின் தங்கிய சமூகங்களுக்கு சமமான அணுகல் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இட ஒதுக்கீடு பொருளாதார முன்னேற்றத்தைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தொடர்ந்து சமூக ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்றே காட்டுகிறது.
- ❖ இட ஒதுக்கீடு சுயமரியாதையை அழிக்கிறது. அந்தளவுக்கு சிறந்தவை ஆனால் மிகவும் பின்தங்கியவர்களை தீர்மானிக்க போட்டி இல்லை.

- பல முற்போக்கான நாடுகளின் அடித்தளமாக இருக்கும் தகுதிக்கான மிகப்பெரிய எதிரி இடஒதுக்கீடு.
- வர்க்க விசுவாசம் மற்றும் ஆதிகால அடையாளங்களைக் தூண்டுவதன் மூலம் குறுகிய அரசியல் முடிவுகளை பூர்த்தி செய்வதற்கான கருவியாக இது மாறிவிட்டது.
- பின்தங்கிய சாதிகளுக்குள் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கம் இடஒதுக்கீட்டின் நன்மைகளைப் பெற்றுள்ளது மற்றும் பின் தங்கிய சாதியினரிடையே மிகவும் ஓரங்கட்டப்பட்டவர்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள்.
- பல உயர்சாதி ஏழைகளும் சமூகத்தில் விரக்தியை வளர்க்கும் பாகுபாடு மற்றும் அநீதிகளை எதிர்கொண்டு வருவதால், இடஒதுக்கீடு சேர்க்கப்படுவதை விட விலக்குவதற்கான வழிமுறையாக மாறியுள்ளது.

**இடஒதுக்கீடு அதிகரிப்பதற்கான காரணங்கள்**

- தவறான சிந்தனை வளர்ச்சிக் கொள்கைகளின் பாதகமான விளைவுகளுக்கு ஒரு தீர்வாக இடஒதுக்கீடு பெருகிய முறையில் காணப்படுகிறது.
- வளர்ந்த மாநிலங்களான ஹரியானா, குஜராத் மற்றும் மகாராஸ்டிராவில், அவர்களின் பொருளாதாரங்கள் ஒப்பீட்டளவில் சிறப்பாக இருந்த போதிலும், மூன்று விஷயங்கள் மக்களை கவலையடையச் செய்துள்ளன.
    1. கடுமையான விவசாய துன்பம்
    2. வேலை வாய்ப்பு வளர்ச்சியில் தேக்கம் மற்றும்
    3. வளர்ச்சி பாதையில் சிதைவுகள்
- இந்த பின்னணியில், அரசாங்கங்களுக்கு, ஒரு பாட நெறிதிருத்தம் செய்வதை விட இடஒதுக்கீடு பற்றி பேசுவது எளிது.
- உயர் சாதியினரிடையே இடஒதுக்கீடு கோரிக்கைகள் அதிகரித்து வருவது, சலுகையை இழக்கும் என்ற அச்சம் மற்றும் மாற்றத்தை சமாளிக்க இயலாமை ஆகியவற்றிலிருந்து எழுகிறது.
- பின்தங்கிய வகுப்புகள் போன்ற ஒத்த நன்மைகளைப் பெறாததால், உயர் அரசு சாதிகள் குறிப்பாக அரசாங்க வேலைகளின் பின்னணியில் பின் தங்கியதாக உணரத் தொடங்கியுள்ளன.

**பரிந்துரை**

- ❖ இடஒதுக்கீடு சலுகைள் தாழ்த்தப்பட்ட சாதியினரிடமிருந்து பெரும்பான்மையான பின்தங்கிய குழந்தைகளுக்கு வரவேண்டும் சாதிக் குறிச்சொல் கொண்ட சில சலுகை பெற்ற குழந்தைகளுக்கு அல்ல.
- ❖ உயர்பதவிகளில் உள்ள அதிகாரிகள் குடும்பங்கள், உயர்வருமான வல்லுநர்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் உள்ளவர்கள் குறிப்பாக அரசு வேலைகளில் இடஒதுக்கீடு சலுகைகளைப் பெறக்கூடாது.
- ❖ ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் தேவைப்படும் நபர்களுக்கு இடஒதுக்கீடு மூலம் உதவ நியாயமான மற்றும் நடைமுறை வழிகள் சாத்தியம் மற்றும் அவசியம்.
- ❖ இடஒதுக்கீடு செயல்முறை உண்மையிலேயே பொருளாதார ரீதியாக பின் தங்கிய நபர்களை வடிகட்டி, அவர்கள் அனைவரையும் நீதிக்கு கொண்டுவர வேண்டும்.
- ❖ அடிமட்டத்தில் கல்வி முறையில் புரட்சிகர மாற்றங்கள் என்பது காலத்தின் தேவை.
- ❖ விழிப்புணர்வை உருவாக்குவதற்கான தேவையும் உள்ளது. ஏனென்றால் முன்பதிவு செய்யப்படாத பிரிவுகள், ஏற்பாட்டை எதிர்த்து நிற்கும் போது, ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்குள் இருந்து தேவைப்படும் பிரிவுகள், அந்த ஏற்பாட்டிலிருந்து எவ்வாறு பயனடைவது என்பது பற்றியும் அல்லது அத்தகைய விதிகள் உள்ளனவா என்பது பற்றியும் தெரியாது.
- ❖ உயர்கல்வி அல்லது வேலைகளில் சேருவதற்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு பதிலாக அனைத்து சாதியினரிடையேயும் கிரீமிலேயர் அடுக்கையும் (Creamy layer) இடஒதுக்கீட்டிலிருந்து விலக்குவது மற்றும் அவர்களின் திறன்களை வளர்த்துக்கொள்வது போன்ற தீவிர தீர்வுகள்

**முற்பட்ட சமூகத்தினருக்கான 10 சதவீத இடஒதுக்கீடு:**

- ❖ பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட சமூகத்தினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
- ❖ இந்தியாவில் சாதிய ரீதியிலான இடஒதுக்கீட்டுக்கு ஆங்காங்கே அவ்வப்போது எதிர்ப்புகள் கிளம்பும். அதற்கு மாற்றாக வைக்கப்படும் தீர்வு, இடஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பது. இந்த விவாதம் இந்தியாவில் நீண்ட காலமாக ஒலித்துக் கொண்டே தான் உள்ளது.

- இந்நிலையில், பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீட்டுக்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது. அதாவது பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது.

**இந்த இடஒதுக்கீட்டுக்கு தகுதியானவர்கள் யார்?**

- ஆண்டு வருமானம் ரூ. 8 லட்சத்துக்கும் குறைவாக உள்ளவர்கள்
- 5 ஏக்கருக்கு குறைவாக விவசாய நிலம் வைததிருப்பவர்கள்
- 1000 சதுர அடிக்கு குறைவாக வீடு வைத்திருக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்
- நகராட்சி அல்லாத இடத்தில் 1000 சதுர அடிக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்
- நகராட்சி அல்லாத இடத்தில் 2000 சதுர அடிக்கு குறைவாக வீட்டு மனை வைத்திருப்பவர்கள்

**கடந்து வந்த பாதை**

- பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் பொதுப் பிரிவினருக்கான 10 சதவீத இடஒதுக்கீடு மசோதா 165 உறுப்பினர்களின் ஆதரவுடன் மாநிலங்களவையில் நிறைவேறியது.
- பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் பொதுப்பிரிவினருக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இதைத்தொடர்ந்து, இந்த மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு 323 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.
- இதைத்தொடர்ந்து, மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில், 165 உறுப்பினர்கள் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்தனர். 7 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதன் மூலம், இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றியது.
- இதையடுத்து இந்த மசோதாவை சட்டமாக்க குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. அவர் ஒப்புதல் அளித்த பின்னர், இது சட்டமானது.

**10 சதவீத இட ஒதுக்கீடு சட்டம் குஜராத்தில் முதன் முதலில் அமல்**

பொதுப்பிரிவில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் குஜராத்தில் முதன்முதலில் அமலுக்கு வந்தது. இந்தியாவில் சாதி ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதமாக கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இடஒதுக்கீடு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மத்திய அரசுத் துறைகளில் 50 சதவீதத்திற்கு மிகாமல் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நாட்டிலேயே முதல் மாநிலமாக குஜராத்தில் பொதுப்பிரிவில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என்று அம்மாநில முதல்வர் விஜய் ரூபானி அறிவித்துள்ளார். இதன்மூலம் குஜராத்தில் மொத்த இட ஒதுக்கீடு 59.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இடஒதுக்கீட 50 சதவீதத்தை தாண்டக்கூடாது என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பால் குஜராத்தில் இதுவரை 49.5 சதவீத இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்

சமத்துவம், நீதி குறித்து சமூகங்கள் இடையிலான விவாதங்கள் இருபதாம் நூற்றாண்டு பிற்பகுதி வரை கூட நடைபெறவில்லை. அதற்கு சில வரம்புகள் பின்பற்றப்பட்டு, ஒரு சமூகத்துக்குள் மட்டும் நிகழ்ந்தன. உதாரணமாக ஜான் ரால்ஸ் அவர்களின் நீதிக்கோட்பாடு கூட முழுமையானதாக அமைந்திருக்கவில்லை. சமூகங்கள் இடையேயான செல்வப் பகிர்வு குறித்து அவர் ஆய்வு செய்யவில்லை. 1990களின் போதுதான், தொழில் மய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் அதாவது பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளிகளால் உருவாகியுள்ள அறநெறிப்பாதிப்புகள் குறித்து தத்துவ வியலாளர்கள் எண்ணிப் பார்க்கத் தொடங்கினர். வளரும் நாடுகளில் வறுமை அதிகரித்து வருவதற்கு வளர்ந்த நாடுகளே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறும் ஜெர்மன் தத்துவவியலாளர் தாமஸ் போக்கே, இதன் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் மடிந்து வருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல ஒரு நாட்டுக்குள் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் அநீதியான பாகுபாட்டால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளான பிரிவினருக்கும் சமத்துவ ஆட்சியில் முன்னுரிமை தருவதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது. இதுவே சமூக நீதியின் அடிப்படைக் கோட்பாடாகும். உறுதிப்படுத்தும் நடவடிக்கை, நேர்மறை பாகுபாடு என்றும் அழைக்கப்படுகிறது.

**சமூக நீதி என்றால் என்ன?**

சமூகம் உருவாக்கும் எதிர்மறை மதிப்பீடுகள் சமத்துவ மின்மையை ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது. சட்டென்று பார்க்கும் போது சிலருக்கு ஆண் பெண் ஏற்றத்தாழ்வு இயற்கையானதாகவே தெரியும். ஆம், பல நூற்றாண்டுகளாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் பெண்களின் "பலவீனமான" நிலை பலருக்கு இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் தோன்றலாம். ஆப்பிரிக்காவின கருப்பு இனமக்கள் மீதான காழ்ப்புணர்ச்சியும் இதை வகையைச் சேர்ந்ததே. கருப்பின மக்கள் அறிவுலகில் பலரும் பங்களிப்பைச் செய்ய முடியாது என்றே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. பல காலமாகத் தொடர்ந்த இந்த அவலம் நமக்கு இயல்பானதாக மாற்றப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் இந்த நிலைதான் சாதியின் பெயரால் வாய்ப்பு மறுக்கப்பட்டதை பலரது நிலை "இயற்கையானது" என்பது போல நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால், இவை அனைத்தும் செயற்கையானது, நம் கண்களுக்குப் புலப்படாத அதே சமயம் பெரும் உருவம் கொண்ட 'அதிகாரம்' அங்கு ஊடுருவியிருக்கிறது என்பதை இன்றைய அறிஞர்கள் திட்டவட்டமாக அறிவிக்கின்றனர்.

சமூக அதிகாரத்தைக் கைக்கொள்வதில் ஏற்படும் போட்டிகளே ஒடுக்கு முறைகள் தோன்றிடக் காரணங்களாகும். தங்களுக்கென உருவாக்கிக் கொண்ட இயல்பான அடையாள கூறுகளைத் தற்காத்துக் கொள்வதற்கு அதிகார அமைப்புகளைக் கைப்பற்றி கொள்ள எண்ணுகின்றனர். பன்மைத்துவமான சமூக அமைப்பில் தனித்து ஒரு குழுவினர் மட்டும் சமூக மேலாதிக்கம் பெற்றவர்களாக உருவெடுப்பது அநீதியான போக்காகும்.

**இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐ.நா. பிரகடனம் டிசம்பர் 18, 1992 பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்:**

- சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொது வாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டைப் பின்பற்றவும், மதத்தைக் கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியைப் பயன்படுத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.
- சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு.
- சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதற்கும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.
- ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறுவிளைவிப்பதாக அமையக்கூடாது.
- சகமேலாதிக்க உணர்வினைப் பெற்ற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக் குழுவினர் மற்ற குழுவினரின் சம உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும் போது அல்லது தடுக்கும் போது சகப் பகை முரண்கள் உருவாகின்றன. தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.

**சமூகப்படி நிலைகளின் பின்புலம்**

இந்தியாவில், புராதன காலத்து மரபுசார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படி நிலை, மேல் கீழ் என்னும் பாகுபாட்டைக் கொண்டிருக்கின்றது. வருண படிநிலை அமைப்பு 'சதுர் வருண அமைப்பு' (நான்கு வருண அமைப்பு அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது. பிறப்பின் அடிப்படையில் பேணப்படும் இப்பாகுபாடு, தலைமுறைகளாகத் தொடர்வதால் சமூகத்தில் ஆழமாக ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 15 (4)**

சமூக மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான சிறப்புத் திட்டங்கள் உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்டவிதி 29(2) தடையாக இருக்காது.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 16(4)**

அரசுப் பணியில் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறாத அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்க மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு இவ்விதி தடையாக இருக்காது.

இந்தியா பல்வேறு தட்ப, வெப்ப புவிசார் நிலவியல் அமைப்பு கொண்ட பன்மைத்துவ நாடாகும். பல்வேறு மொழிகள் பேசும் தேசிய இனங்கள் வெவ்வேறு பண்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். எனினும், இந்தய சமூக வளர்ச்சிப் போக்கில் ஏற்றத்தாழ்வுகள் வர்ண அமைப்பின் அடிப்படையில் அமைந்த படிநிலைகளால் உருவாகியுள்ளன. இத்தகைய ஏற்றத் தாழ்வுகளால் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கை மேம்பட அவர்களையும் அரவணைத்து வளர்ச்சி பெற்றிட, நமது அரசமைப்புச் சட்டம் பல்வேறு விதமான வழிகாட்டு நெறிமுறைகளை முன்மொழிகிறது.

இயற்கை வளங்களோ தொழில் வளர்ச்சியோ இல்லாத பகுதிகளுக்கு ஏற்ப சிறப்புத் திட்டங்களை மாநில அரசு உருவாக்கிக் கொள்ள அரசமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் சமூகத்தில் கல்வி, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள நலிந்த பிரிவினருக்குச் சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகளையும் அரசமைப்புச் சட்ட வழிகாட்டுதலின்படியே அரசு வழங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தன்னிறைவு பெற்ற சமூக வளர்ச்சிக்கு என்று சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சிறப்பு ஏற்பாடுகள் இன்றியமையாத தேவையாக உள்ளன.

நமது நாட்டின் சமூக மக்களாட்சி தழைத்திடவும், பன்மைத்துவம் வலிமை பெறவும் இன, மத பிரிவினர்கள் குழுக்கள் தங்கள் அடையாளங்களுடனும், அதிகாரப் பகிர்வுடனும், சகிப்புத்தன்மை உணர்வுடனும் வாழ்வதற்கான சமூக ஏற்பாடே சம வாய்ப்பு என்பதாகும்.

தொழில் புரட்சியைத் தொடர்ந்த மேலை ஐரோப்பிய சமூக அமைப்பில் ஏற்பட்ட பிரிவினை உணர்விற்கு பொருளாதாரம் அடிப்படை காரணமாகும். இந்தய சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பாகுபாடுகள் வைதீக புராணங்கள் அடிப்படையில் நால்வருண அமைப்பாக பாகுபடுத்தப்பட்டிருக்கிறது.

சமூகத்தின் உற்பத்திக் கருவிகளான நிலம் மற்றும் இயற்கை வளங்களை உடைமையாக்கிக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறவர் முதலாளியாகவும் அத்தகைய உற்பத்திக் கருவிகளைப் பெறமுடியாமல் தடுக்கப்பட்டு ஏழ்மை நிலையை அடைந்தவர்கள் தொழிலாளிகளும் ஆவார். நிலம் மற்றும் வளங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறபோது அவரின் வர்க்கமும் மாற்றம் அடைகிறது. எனவே, பொருளாதார அடிப்படையில் முதலாளி என சமூகப் பிரிவினை ஏற்பட்ட மேலை ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி முதலாளி ஆவதற்குச் சமூகத்தில், நிரந்தரத் தடைகள் ஏதும் இல்லை. ஆனால், புராதண நூல்களின் அடிப்படையில் உருவான நால்வருணப் பாகுபாட்டு முறையில் யாரும் தத்தம் வருணங்களை மாற்றிக் கொள்ள முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே வருணத்தில் மட்டுமே இருக்க வேண்டிய சமூகத்தடை உள்ளது.

வருண அமைப்பு தனிமனித மாண்புகளையும் உரிமைகளையும் மறுக்கிறது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் சரியான சமூகக் கண்காணிப்பு முறைகளையும், சட்டப் பூர்வமான நீதி வழங்கும் முறையினையும் கடைபிடித்து வருகின்றது. அவ்வாறு வழங்கப்பெறும் நீதி வருண, வர்க்க வேறுபாடுகளைக் களைவதுடன் சமத்துவக் கண்ணோட்டத்துடனும் அமைந்திருக்கிறது எனலாம்.

- **மக்களாட்சி** என்பது எண்ணிக்கை சார்ந்து பெரும்பான்மையினரின் விருப்பம் அல்லது எண்ணப் பிரதிபலிப்பு என்று புரிந்து கொள்ளப்படுகிறது. எல்லோருக்குமான பிரதிநிதித்துவம் என்பதே உண்மையான மக்களாட்சி என்பதே வளர்ந்து வரும் புதிய கண்ணோட்டமாகும். எல்லோரையும் உள்ளடக்கிய அமைப்பு முறையில் மக்களாட்சி செழிப்படையும். அவ்வாறு உருவாகும் மக்களாட்சி அமைப்பு முறைக்குள் **"பன்மைத்துவ உணர்வு"** ஏற்படும் பன்மைத்துவமான சிந்தனைகளும், பிரதிநிதித்துவமும் தான் நமது இந்திய ஜனநாயகத்தின் வேர்களாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களாட்சி நெறிமுறைகளின்படி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கையினைப் பாதுகாக்கிறது. இத்தகைய சமூக வளர்ச்சிக்கான மாற்று செயல் முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் சமூக விடுதலையும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே, உயிரோட்டமான சமூக நீதி இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பேணிக் காத்து நீதிப் பகிர்வினையும் மக்களாட்சி மாண்பினையும் உறுதி செய்கிறது.

**சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்**

சமத்துவம் வேண்டும் என்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் நம்மை நிலைகுலைய வைக்கின்றன. வசதிகளில், வாய்ப்புகளில், பணிச் சூழலில் என்று பல தளங்களில் நிலவும் சமத்துவமின்மை பற்றி நாம் என்ன சொல்லப் போகிறோம்? இது போன்ற ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நமது வாழ்வில் தவிர்க்க முடியாத மற்றும் நிரந்தரமான அம்சங்கள் என்று கருதமுடியுமா? இவ்வாறு வாய்ப்புகள் இன்றித் தவிக்கும் மக்கள் நமது நாட்டின வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்ய நாம் கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? இது போன்ற சமத்துவமின்மைக்கு நமது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு மதிப்பீடுகள் எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றன?

இது மாதிரியான கேள்விகள் பல ஆண்டுகளாகவே நம் நாட்டினரை மட்டுமல்ல உலகெங்கிலும் பெரும் அதிர்வுகளை உருவாக்கி வந்திருக்கின்றன. அதனால் தான், சமத்துவம் என்பது சமூக, அரசியல் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையில்லை.

**சிறப்பு முன்னுரிமைக்கான தேவைகள்**

ஏழைக் குடும்பத்தில் குடிசையில் பிறந்த காரணத்தினால் ஒரு குழந்தைக்கு தரமான கல்வி, மருத்துவம் மறுக்கப்பட்டால் அதற்கு எதிராக நாம் குரல் கொடுக்கிறோம். காரணம், அது அநீதி என்று கருதுகிறோம். ஆக, நாம் எதை ஏற்கிறோம், எதை மறுக்கிறோம் என்பதை புரிந்து கொள்வோம். ஒருவர் பெரும் மரியாதையோடு நடத்தப்படுவதற்கு அவரது மதம், சாதி, மொழி, இனம் மட்டுமே காரணம் என்றால் அந்த மரியாதையை ஏற்பதில்லை. அதேசமயம், இசை போன்ற ஒரு துறையில் ஆர்வம் கொண்ட ஒருவர் அவரது துறையில்

சாதிக்க முயலும் போது, அவரது மதம், சாதி, பாலினம், இனம் போன்ற சமூக அடையாளங்களினால் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்படும் போது அது அநீதிக்கு வித்திடுகிறது. மனிதர்களிடம் இருக்கும் வேறுபாடுகள் என்ன? பாகுபாடுகள் என்ன? என்பதைப் புரிந்து கொள்வது மிக அவசியம். சமூக அடையாளங்களை முன்னிறுத்தி ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது அநீதி அதுவே சமத்துவமின்மையை உருவாக வழிகோலுகிறது.

இனம், மொழி, சாதி, பாலினம், மதம் போன்ற வேறுபாடுகள் இருந்தாலும், மனிதர்கள் அனைவரும் தங்களது தனித்துவமான திறமையினை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புகள் சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

சமூக, அரசியல் கோட்பாடுகளில், மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது இயற்கையாகவே மனிதர்களிடம் நிலவும் வேறுபாடுகளுக்கும் சமூக, கலாச்சார ரீதியாக இருக்கும் பாகுபாடுகளுக்குமான வேறுபாடு போல, தனிநபர் விருப்பங்கள், திறமைகள் இயல்பானவை, தனித்துவமானவை. ஒருவருக்கான அங்கீகாரமும், மதிப்பும் தனி நபர்களின் சாதனைகள், தனி நபரின் திறமைக்குமாக இருக்க வேண்டும்; ஆனால், ஒரு சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் கலாச்சார, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செயற்கையானவை. இவற்றை பாகுபாடுகள் எனலாம்.

மக்களாட்சி நிலவும் நாடுகளில் அரசியல் சமத்துவத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். மக்களாட்சி அரசுகள் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரேமாதிரியான குடியுரிமையை வழங்கி வருகின்றன. குடியுரிமை என்பது வாக்குரிமை, கருத்துரிமை, இணைந்து செயல்படும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வழிபாட்டுரிமை என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை அனைத்துமே மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட அவசியமாகும். அப்போதுதான், குடிமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அரசு செயல்பட முடியும். மேலும், அரசமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சட்ட உரிமைகளையும் வழங்கியுள்ளது. மக்களாட்சி நிலவும் பல நாடுகளில் குடியுரிமை உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவத்தான் செய்கின்றன.

**விரிவாக்கப்பட்ட கல்வி**

ஃரன்ட் லைன் என்ற மாத இதழின் இணையத்திற்கு சென்று அங்கே நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்தியா சென் எழுதிய பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் என்ற தலைப்பிலான சிந்தனையைத் தூண்டும் கட்டுரையை வாசிக்கவும். அதில் அவர் ஏழு விதமான பாகுபாடுகளை பட்டியலிடுகிறார்.

- இறப்பில் பாகுபாடு
- பிறப்பில் பாகுபாடு
- அடிப்படை வசதிகளில் பாகுபாடு
- சிறப்பு வாய்ப்புகளில் பாகுபாடு
- தொழிலில் பாகுபாடு
- உடைமை கொள்வதில் பாகுபாடு
- இல்லத்தில் பாகுபாடு

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ரேட் சினிப் கல்வி நிறுவனத்தில் ஆற்றிய தொடக்க உரையின் அடிப்படையில் எழுதப்பட்டது இந்தக் கட்டுரை. அதில் பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் பற்றி விரிவாக கூறியுள்ளார்.

அதன்படி பின்தங்கிய வகுப்பினருள் உள்ள பொருளாதார மேம்பாடு அடைந்தவர்களுக்கு இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**நியாயமான விநியோகம் (Justice Distribution)**

ஒரு சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்கள் மாறுபட்ட விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொண்ட போது யார், எப்படி நியாயத்தை உறுதிப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகின்றன. சமூகத்தில் அனைவருக்கும் செல்வம், வாய்ப்பு போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். நியாயமாக வளங்களை அனைவருக்கும் வழங்குவதற்கு சட்டம் வழிசெய்கின்றன. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகள் வளங்களை விநியோகிப்பதை கண்காணிக்க வேண்டும். இதில் எந்த விதமான அநீதிகளும் இடம் பெறக்கூடாது.

நம்மை போன்ற நாடுகளில் சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் நன்கு ஊன்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவிற்கும் சுதந்திரம், வாய்ப்பு, செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை, சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.

சட்டமானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கு முன்னரே, மக்கள் சில அடிப்படை சமத்துவங்களை பெற்று வாழ்வில் தனது நோக்கங்களை தொடர் தேவையான சூழ்நிலைகள் அமைய வேண்டும். அரசும் சட்டமியற்றும் அமைப்புகளும் தீண்டாமை மற்றும் பிறசாதி பாகுபாடு நடவடிக்கை அகற்றி சமூகத்தில் நீதியை முறைப்படுத்துகின்றது.

சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்குவதும் அதை அனைவருக்கும் உறுதிப்படுத்துவதும் அரசமைப்பின் தலையாய கடமையாகும்.

வரலாற்று ரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சட்ட ரீதியாகவும், தார்மீகரீதியாகவும் உரிமை கிடைக்க அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். சமத்துவத்தை உருவாக்குவதில் பரந்த மனப்பான்மை என்றும் தொண்டு எனவும் அரசாங்கம் நினைக்கக் கூடாது. சமுதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட மக்களை மாறுபட்ட விதத்தில் நடத்துவது அரசின் கடமையாகும். மேலும் நலிவடைந்த பிரிவினரின் அடிப்படை உரிமையாகவும் இதனைக் கொண்டு சட்டரீதியாகவும் அரசமைப்பில் தீர்வு காண முடியும். நலிவடைந்த பிரிவினருக்கு சம வாய்ப்பும் வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஏற்படுத்துவதில் அரசு முக்கிய பங்காற்றுகிறது. அரசு வேலைவாய்ப்பிலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் நவீன கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இதனை நிலைநிறுத்துவதற்கு சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்துவதும் அரசமைப்பின் முக்கிய நோக்கமாகவும் அங்கமாகவும் இருக்கின்றது.

இதனைப் பற்றி பல கருத்துகள் சமூகத்தில் நிலவுகிறது. நலிவடைந்த பிரிவினருக்கு வளங்களையும், சமவாய்ப்புகளையும் எவ்வாறு அளிப்பது என கேள்வி எழுகின்றது. மேல்தட்டு மக்கள் அரசின் மாறுபட்ட செயல்பாடு பாகுபாட்டை ஏற்படுத்தும் என கருதினர். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு நலிவடைந்தோருக்கு கிடைக்காது என்ற அச்சத்தில் இட ஒதுக்கீடு முறையை அரசு உருவாக்குவதன் மூலம் சமூகத்தில் சமவாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று நம்பினர்.

இட ஒதுக்கீடு முறையினால் நலிவடைந்த பிரிவினருக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தும் போது தகுதி பாதிக்கப்படுவதாக சிலர் கருதினர். ஆகையால் தொழிற்துறையில், பணியாளர்களின் திறமையை பாதிக்கும் என கூறப்படுகிறது.

அரசியல் அறிவியல் மாணவர்களான நாம் எவ்வித தயக்கமின்றி நீதியில் உள்ள பிரச்சினைகளை ஆராய வேண்டும். முதலில் நீங்கள் நலிவடைந்து, முன்னேற்றமடையாத மக்களுக்கு உதவ சில தலையீடு தேவை என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?

நாம் சுதந்திரம் அடைந்து குடியரசு ஆன பின்னும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வளங்கள் அனைத்தும் மேல்தட்டு மக்கள் வசமே இருந்தால் அது என்ன விளைவை ஏற்படுத்தும்? நாம் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டையோ அல்லது குறிப்பிட்ட சிலருக்கான நாட்டையோ? எதை அடைய வேண்டும் எவ்வகையான சமூக நீதியை நாம் இறுதியில் பின்பற்ற வேண்டும்.

**பகிர்ந்தளிக்கும் நீதி, மற்றும் தண்டிக்கும் நீதி**

நீதி என்ற கோட்பாட்டைபடிக்கும் போது வளங்களை எவ்வாறு சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றபொருள் விளங்கும். நீதி பற்றிய கருத்தை முழுமையாக புரிந்து கொள்வதற்கு இதில் உள்ள முக்கியமான கருத்துக்கள் மற்றும் பிரச்சனைகளை அறிய வேண்டும். அரசியல் தொடர்பானவற்றில் மரபு ரீதியான புரிதலில் பல நீதி பற்றிய முதன்மையான கோட்பாடுகள் நீண்ட விவாதத்திற்குட்பட்டுள்ளது. அனைவருக்கும் சமமான வளங்கள் பெறுவதற்கு பொது உரிமையாளர் கோட்பாடு, உரிமைகோட்பாடு போன்றவைகள் நீதி என்ற விவாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அ) வளங்களில் சமத்துவம்**

இது வளங்களின் விநியோகம் நியாயமான முறையில் இருக்க வேண்டும் என கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் சமமான வளங்களை கொண்டிருந்தால் அது நீதியாகும். வழங்கப்பட்ட ஒரு பணிக்கு அனைவரும் சமமான ஊதியத்தையோ அல்லது வெகுமதியையோ பெறுவதே நீதியை பெறும் வழியாகும். சமத்துவமின்மைக்கு தனிமனித செயல்பாடுகளே காரணமாகின்றன. ஒருவன் உழைப்பை தேர்ந்தெடுப்பதோ? அல்லது ஓய்வை தேர்ந்தெடுப்பதோ அவனது தேர்வாகும்.

இது சுய உடமைத்துவத்தையும் வளங்களின் உடமைத்துவத்தையும் நிராகரிக்கின்றது. அதே வேளையில் கடமைகளையும் பொறுப்புகளையும் வலியுறுத்துகிறது.

**ஆ) பொது உரிமையாளர் கோட்பாடு**

ஆரம்ப நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஒரே அளவிலான நிலங்கள் மற்றும் வளங்களை நியாயமான விநியோகத்தின் மூலம் பெற்றிருக்க வேண்டும். இது தனி மனித முன்னுரிமையிலும் மற்றும் திறமையிலும் வேறுபாடின்றியும் இருக்க வேண்டும் என்பதை தெளிவாகக் கூறுகின்றது. சமூகத்தில் உள்ள அனைத்து தனிமனிதனும் சமமான திறமையை பெற்றுள்ளனர். ஆகையால், வளங்கள் அனைத்துக்கும் அனைவரும் உரிமையாளர் என்ற நிலைமையை உறுதி செய்வதே நீதியை உருவாக்குவதற்கான ஒரேவழி.

**இ) உரிமை அளித்தல் கோட்பாடு**

நிலம் மற்றும் பிறவளங்கள் வழங்கப்படுவதை வரலாற்று ரீதியாக நியாயப்படுத்த வேண்டும். என நியாயமான விநியோகம் விளக்குகிறது. தனிமனிதன் நிலம், மற்றும் பிறவளங்களுக்கு ஒருபோதும் உரிமையாளராக இல்லாத போது தானாகவே வளங்களும்,

நிலங்களும் அவர்களுக்கு மாற வேண்டும். அவ்வாறு வளங்கள் அவர்களுக்கு மாறுவது முற்றிலும் தானாகவே அமைய வேண்டும். மனிதனின் திறமையும், வளங்கள் இந்த இரண்டுமே முக்கிய கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. வளங்கள் என்றால் உதாரணமாக நிலமும், மனிதனின் அறிவு எனவும், கோட்பாடுகளில் மனிதனின் திறமை முக்கிய பங்காற்றுகிறது.

சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டுமானால் நீதி தண்டிப்பை விட நியாயமான நீதி விநியோகம் இருந்தால் மட்டுமே தீர்வு என்ற பெரும் கருத்தொற்றுமை உருவானது, நாம் எவ்வாறு தண்டிக்கும் நீதியை விளக்கப் போகின்றோம்?

**ஈ) தண்டிக்கும் நீதி**

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கம் ஆனது பல சூழ்நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகை நீதியின் கட்டமைப்பை சில விதிகளை பின்பற்றுவதன் மூலம் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

- தவறான செயல்களை செய்தவர்கள், கடும் குற்றம் இழைத்தவர்கள், அவர்களின் குற்றத்திற்கான சரியான தண்டனை பெற வேண்டும்.
- சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் குற்றவாளிக்கு, அவரின் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை வழங்குவதே தார்மீக அடிப்படையில் சரியானதாகும். ஒவ்வொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்கும் செயலானது. தண்டிக்கப்படுபவர்களுள் ஒப்பு நோக்கப்படுகிறதோ அல்லது ஒப்பு நோக்கப்படவில்லையோ, ஆனால் தண்டிப்பது என்பது அவசியம். அதுவே சமூக நன்மைக்கு அவசியமாகிறது.
- இது வேண்டுமென்றே அப்பாவிகளை தண்டிப்பதை ஊக்குவிப்பதில்லை. மேலும் குற்றவாளிகளுக்கு அவர்கள் இழைத்த குற்றத்தை விட அதிகமான தண்டனை வழங்குவதையும் இது கண்டிக்கிறது.

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன் மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது. நிலையான நீதியை வழங்காது என்று நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும்போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில் நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான்ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

**ஜான் ராால்சின் நீதி கோட்பாடு**

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராக ஜான் ரால்சன் கருதப்படுகிறார். நேர்மையான நீதி என்ற கருத்தியலின் அடிப்படையில் ஓர் நீதி கோட்பாட்டை அவர் உருவாக்கியுள்ளனர்.

அவரது கட்டமைப்பு அனைத்து தனிமனித பண்புகளையும் ஒழுக்க ரீதியில் தன்னிச்சையானவை என்கிறது. இவரது நீதி சமத்துவத்தை கோருகிறது. இவரைப் பொறுத்தவரை சுதந்திரம், வாய்ப்பு, வருவாய் வளம் மற்றும் சுயமரியாதை என அனைத்தும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இதையே வேறு வார்த்தைகளில் கூறினால் சமத்துவமின்மையே அநீதி ஆகும். தனிமனிதன் எந்த ஒரு செயலோ அல்லது பண்போ மற்றவருக்கு பயனளிக்காத வகையில் இருக்குமாயின் அது அந்த சமூகத்தின் அநீதியான பண்பை காட்டுவதாக அமையும்.

இந்த கண்ணோட்டமானது நீதியை பற்றிய நமது புரிதலை விரிவாக்குகிறது. ரால்ஸ் நீதியைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன் மூலம் நீதியை நிலைநாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும் போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில் நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான்ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

ஜான்ரால்சின் இந்தக் கேள்விக்கான பதிலை கண்டறிய முயற்சித்தார். ஒரு கற்பனை சூழ்நிலையை நம்முடைய சிந்தனைக்கு அவர் தருகிறார். ஆம், ஒரு சமுதாயத்தில் இந்தபடி நிலையில் நாம் இருக்கிறோம் என்று தெரியவில்லை. ஆனால் அந்த சமுதாயம் எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கும் ஒரு முக்கிய நிலையில் நாம் இருப்பதாக கற்பனை செய்து கொள்வோம். நாம் எந்தக் குடும்பத்தில் பிறந்து இருப்போம் என்று தெரியாது. அதைப்போல் நமது சாதி இனம் மதம் பாலினம் மற்றும் எந்த இடம் என்ற எதைப் பற்றியும் நமக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்த எதிர்கால கற்பனை சமுதாயத்தில் நாம் உருவாக்கும் விதிகள் மற்றும் சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும் நியாயமானவையாகவும் மட்டுமெ இருக்கும் என்று 'ஜான்ரால்ஸ்' கூறுகிறார். நமது எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கும்போது நாம் ஏற்படுத்தும் அமைப்பில் அனைவருக்கும் நியாயமான வழியில் அனைத்தும் கிடைப்பதாக இருக்கும்.

இந்த தருணத்தில் ஜான்ரால்ஸ் **"அறியாமை திரை"** யின் கீழ் சிந்திப்பது தொடர்பாக விவரிக்கிறார். நாம் சமுதாயத்தில் நம்முறைய நிலை என்னவென்று அறிந்திருக்கவில்லை. புதிய சமுதாயத்தில் அவரவர் தங்களுக்கு உகந்த அளவில் சுயநல விருப்பங்களை கொண்டிருப்பர். ஆனால், ஆச்சரியப்படத்தக்க வகையில் எவருமே தாங்கள் தயாராக இருப்போம் என்றோ இது தங்களுக்குப் பயனளிக்கும் என்றோ அறிந்திருக்கமாட்டார்கள்.

மிக மோசமான நிலையின் வழியேதான் நாம் ஒவ்வொருவரும் எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்கிறோம். நாம் நம்மை எல்லா சிறப்புகளையும் எல்லா உரிமைகளையும் கொண்டிருக்கும் ஒருவராகத்தான் நினைப்போம். இந்த புதிய கற்பனை உலகத்தில் நாம் எங்கே எவ்வாறு இருப்போம் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. அப்படி ஓர் சூழ்நிலையில் நாம் எதிர்பாராத விதமாக சமூகத்தின் பின்தங்கிய வகுப்பில் வாய்ப்பு வசதிகள் அற்ற ஒரு இடத்தில் பிறந்தால் என்னவாகும்? இந்நிலையில் உடனே சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கும் வாய்ப்புகள் மற்றும் வளங்கள் கிடைக்கும் படியான ஓர் அமைப்பை உருவாக்க முயற்சிக்கிறோம்.

நாம் பிரியும் தருணம் வந்தாலும் நம்மால் நம் அடையாளங்களை எளிதில் அழிக்க முடியாது. அறியாமை எனும் திரையின் கீழ் இருப்பதாக கற்பனை செய்யவும் முடியாது. இதைப்போலவே மக்கள் முன்பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு தியாகம் செய்வதாகவோ அல்லது தங்களின் நல்ல எதிர்காலத்தை பங்கு போடுவார்கள் என்று எதிர்பார்க்கவோ முடியாது.

இருந்த போதிலும் அறியாமை திரையின் பலன் என்னவெனில் இது மக்களை அவர்களின் இயல்பான பகுத்தறிவுடன் இருக்கச் சொல்கிறது. அவர்கள் தங்களுக்காக சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்களின் விருப்பத்தில் எது உயர்வாக உள்ளதோ அதைத் தேர்ந்தெடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கற்பனையான அறியாமை திரையை அணிந்துகொள்வது நேர்மையான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கான முதல்படி. இதுவே அவசியமானதாகும். இந்த நவீன காலத்தில் பகுத்தறிவு கொண்ட மக்களிடம் இது நம்பிக்கை கொண்டுள்ளது. அறநெறியின் அடிப்படையிலான பகுத்தறிவு ஒரு புதிய அரசியல் கட்டமைப்பை உருவாக்கும். அதில் மக்கள் தங்கள் சுயநல விரும்பிகளின் படி இல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய விருப்பங்களின் படியான கொள்கைகளைப் பற்றி சிந்திப்பார்கள் என்று ராவ்ஸ் கூறுகிறார்.

இந்த முழுமையான அனைவரையும் உள்ளடக்கிய கண்ணோட்டம் ஜான்ராவ்சின் கட்டமைப்பில் காணப்படுகிறது. இதை தெளிவாக கூறினால் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் அளிக்கும்படி இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கானதாக இருக்கக் கூடாது. இந்த நியாயமானது இரக்கத்தினாலோ அல்லது பெருந்தன்மையினாலோ இல்லாமல் காரண அறிவின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். ஜான்ராவ்சின் கோட்பாடானது நவீன காலத்தின் மிகச் சிறந்த பகுத்தறிவு மனிதர்கள் நம் சமூகத்தில் நீதியின் சக்தியை உணர வேண்டும் என்கிறது. நம் போன்ற சமூகங்களில் காரண அறிவுக்கு பொருந்தாத அடையாளங்கள் மற்றும் உணர்ச்சி கருத்துக்கள் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றை விடுத்து ஜான்ராவ்சின் வழியே அணுகும்போது நீதியின் உண்மையான ஆற்றலை கண்டு கொள்ள முடியும்.

- வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர்.

**சமூக, பண்பாட்டு சமத்துவம்**

சமூகத்தின் பல பிரிவினரும் தங்களது பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் தங்களது தனித் திறமைகளுக்கு ஏற்ற வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவும் சமூகத்தில் சமத்துவம் நிலவுவது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் நியாயமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நீக்கிட முயலவேண்டும்; அல்லது அதன் தாக்கத்தை குறைத்திட நடவடிக்கை எடுப்பது மேற்கொள்வது மிக அவசியம். உதாரணமாக, தரமான மருத்துவ வசதிகள், கல்வி, சத்தான உணவுகள், குறைந்தபட்ச ஊதியம் என்பது போன்ற அம்சங்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி கிடைத்திடச் செய்வது அவசியம். இவை இல்லாத நிலையில், சமூகத்தில் அனைவரும் சமம் என்றோ அல்லது சம வாய்ப்பு பெற்றவர்கள் என்றோ கருதமுடியாது.

**நமது நாட்டின் பிரச்சினை என்ன?**

சாதி மதம் பெயரால் நீண்ட காலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் பெரும் தடையாகி விடுகிறது. உதாரணமாக, நாட்டில் பல பகுதிகளில், பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே பெண்களின் நிலை உள்ளது. இவ்வாறு நடத்தப் படுவதுதான் எங்களது பண்பாடு என சொல்லத் தொடங்கினால், அதன் விளைவுகள் பலரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியவை. அதாவது, ஏற்றத்தாழ்வு தான் எங்களது பண்பாடு என்று சொன்னால், அல்லது பாகுபாடு தான் எங்கள் பண்பாடு என்றால் அது சமத்துவத்திற்கான நமது பயணம்.

**1. பொருளாதார சமத்துவம்**

ஒரு சமூகத்தில் தனி நபர்களிடம் நிலவும் சொத்து மதிப்பு, வருமானம் குறித்த ஏற்றத்தாழ்வுகளை வைத்து, அந்த சமூகத்தில் பொருளாதார சமத்துவம் இருக்கிறதா என்பதை ஓரளவிற்கு நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். அல்லது பணம் படைத்தவர்களுக்கும் ஏழை மக்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளி அந்த சமூகத்தின் பொருளாதார நிலையினை நமக்குத் தெளிவுபடுத்தும். நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையினை வைத்து சில தீரமான முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும். இது பரவலாக பின்பற்றக் கூடிய வழிமுறை.

ஆனால், சில பாகுபாடுகள் பண்பாட்டு ரீதியாக நியாயப்படுத்தப்படும் போதுதான், பிரச்சினை பெரிதாகிறது. இத்தகைய பின்னடைவுகள் மக்கள் கவனத்துக்குக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் காலத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்தவாதிகள் ஈடுபட்டனர்.

“மனிதனை மனிதனாகக் கருத முடியாமல், அவரது சாதியை மட்டுமே வைத்து எடைபோட முயலும் சிந்தனை காட்டுமிராண்டித்தனமானது” என்று வலியுறுத்திய தந்தை பெரியார், பண்பாடு கலாச்சாரம், நாகரீகம் என்ற பெயரில் சமத்துவத்தை மறுக்கும் அத்தனை அம்சங்களையும் கடுமையாக நிராகரித்தார். பெண்களை அடிமைப்படுத்த நாம் உருவாக்கி வைத்திருக்கும் அத்தனை சமூக அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிக்கும் பெரியார், சாதி, மத, பாலின பேதமற்ற சமூகமே உயரிய சமூகம் என்று அறிவித்தார். மொழி மேல் வெறியும், தங்களது பண்பாடு மேல் தீவிர மற்றும் கொண்டுள்ள நபர்களால் நவீன சமூகத்தை உருவாக்க முடியாது என்று திட்டவட்டமாக வாதாடினார். இவ்வாறு சமத்துவத்தின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு பலரும் முன்வைத்துள்ளனர்.

இதுவரை சமூகத்தில் தங்களது குடும்ப மரபு, பிறப்பு இவற்றின் அடிப்படையில் உயர் இடத்தையும் பெரும் அங்கீகாரத்தையும் பெற்ற நபர்களின் சிறப்பு நிலை முடிவுக்கு வரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் சமூகத்தில் ஒருவரின் தகுதி நிர்ணயிக்கப்படுவது சமத்துவமின்மையில் முதன்மையான அம்சம் எனலாம். இதை நிராகரித்து அனைவரும் சமம். எனவே எந்த ஒரு தகுதிக்கும் அங்கீகாரத்திற்கும் பொதுவான தேர்வு முறையினைப் பின்பற்றிட முயல்வது சமத்துவத்திற்கான முதல் படி. இதுவரை, உலகின் பல நாடுகளில் ஏழை மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது. பெண்களை கல்வி கற்கவும் பொது இடங்களில் பணி செய்யவும் தடை செய்திருக்கும் நாடுகள் பல. நமது நாழட்டில், ஒரு சில கடைநிலைப் பணிகளைத் தவிர, சாதி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர் பதவிகளைப் பெறுவதில் இருக்கும் பெரும் தடைகள் நாமறிந்ததே.

இது மாதிரியான பாகுபாடுகளைக் களைந்திட காலம் காலமாகத் தொடரும் பல சிறப்பு தகுதிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சில நேரங்களில், குறிப்பிட்ட சமூகப் பிரிவினருக்கு தொடர் புறக்கணிப்புகள் காரணமாக சிறப்பான அல்லது கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. அப்போது மட்டுமே.

உண்மையான சமத்துவத்தை நாம் நெருங்குகிறோம் என்று பொருள். எனவே, வரலாற்று ரீதியாக நிகழ்ந்திருக்கும் அநீதிகளை இனம் கண்டால் மட்டுமே, சமத்துவம் என்பதன் முழுப்பொருளையும் நாம் எட்ட முடியும்.

அரசின் சமச்சீர் நடவடிக்கைகளில் முக்கியமானது இட ஒதுக்கீடு, கல்வி, வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கீடு செய்து, இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை வழங்குவதே இதன் அடிப்படை நோக்கம். ஆனால், இது பாகுபாடின் மறுவடிவமே என்று வாதிடும் சிலரும் உண்டு. இட ஒதுக்கீட்டின் மூலம் திறமையின்மை புதிய அங்கீகாரம் பெற்றுவிடும் எனவும், சாதி ரீதியான பாகுபாடு களையப்படாமல் உறுதிப்பட்டுவிடும் என்றும் இடஒதுக்கீட்டின் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த சாதி, மத பாலின ஏற்றத்தாழ்வுகளை மிக விரைவாக நம்மால் களைய முடிந்தால் அது வரவேற்கத்தக்கதே. அப்படிப்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றம் ஓரிரு தலைமுறைகளுக்குள்ளாகவே ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியங்களுக்குப் பொருந்தாதது என்றே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**2. சமூக நீதியும் சமத்துவமும்**

உலகெங்கும் உள்ள சமூகங்கள் அனைத்தும் தங்களுக்கென்று நீதி என்பது பற்றி வரையறை வந்திருக்கின்றன. சரிதவறு என தெளிவு இல்லாத சமூகம் வரலாற்றில் இருந்ததாகத் தகவல் இல்லை. சமூகம் ஏற்றுக் கொண்ட நல்ல செயல்கள், சமூகம் மறுக்கும் அல்லது நிராகரிக்கும் செயல்கள் அந்த சமூகத்தின 'தர்மம்' என்று வழங்கப்படலாயிற்று. இந்த தர்மத்தை மீறும் நபர்கள் மீது தயவு தாட்சனயமின்றி நடவடிக்கை எடுக்கவும் தண்டனை வழங்கவும் அரசன் தவறக்கூடாது என்பதே முக்கியமான தர்மம் என்று நமது நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிலும் நிலவிய நியதியாக இருந்திருக்கிறது. கிரேக்கத் தத்துவ அறிஞர் பிளாட்டோ தனது மாணவர்களோடு நடத்திய பல உரையாடல்களில் நீதி என்றால் என்ன அதை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்பது குறித்து விரிவாகவே பேசியிருக்கிறார்.

அறிஞர் சாக்ரடீஸ் தமது குறிப்பில், ஒரு சமூகத்தில் சில நபர்கள் கூட நியாயத்திற்கு எதிராக இருந்தால், அது ஒட்டுமொத்த சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றி விளக்குகிறார், நீதி என்பது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் செயலாக மட்டுமே இருக்க முடியும் என்று தெளிவுபடுத்துகிறார். தனி நபருக்கு மட்டும் நன்மையோ, பலனையோ தரும் செயலை நீதி என்று கருதக்கூடாது என்பதே அவரது கருத்தின் சாராம்சம். ஆம், ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் நீதி பற்றிப் பேச முடியாது, நியாயம் என்பது முழு சமூகத்திற்கும் மட்டுமானதாகவே இருக்க முடியும் அல்லது இருக்க வேண்டும் என்பதே சாக்ரடீஸ் சொல்லும் தத்துவத்தின் மையக்கருத்தாகும் இதன்படி, நமது நாட்டில் காலம் காலமாக வழங்கப்பட்டு வந்த அநீதி, பாகுபாடுகளை அகற்றுவதற்காக அந்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட நீதியே இட ஒதுக்கீடு எனும் சமூக நீதியாகும்.

### 3. விகிதாச்சார நீதி

பாகுபாடு நிறைந்த சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதில் நமது அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் சமூக நீதி என்பது வரலாற்று ரீதியாக வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகத்தின் முன்னேற்றத்திற்கான உதிவிக்கரம் எனலாம். அதில் யாருக்கு எவ்வளவு வழங்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகளும் விவாதங்களும் தொடர்ந்தன. சாதியப் படிநிலையே ஏற்றத்தாழ்வுக்கான முதன்மையான கூறாக இருக்கும் நமது நாட்டில், அதனடிப்படையிலேயே சமூகநீதி நிலை நாட்டப்பட வேண்டும். ஆகவே தான், பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் பிரிவினர், பழங்குடியினர் என பலதரப்பாக ஒவ்வொருவரின் சமூக நிலைக்கு ஏற்ப, அரசின் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் 1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. **காகா காலேல்கர்** அவர்களின் தலைமையில் அமையப் பெற்ற இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.

### 4. பாகுபாடு சமூக அடிப்படைக் கோட்பாடு

மனிதர்கள் தாங்கள் சார்ந்துள்ள குழுவின் உறுப்பாகத் தம்மை அடையாளம் காண்கின்றனர். தமது குழுவைச் சார்ந்தவர்கள் எவ்வளவுதான் புகழ்ந்தாலும் தமது குழுவைச் சார்ந்து இருப்பதையே கவுரவமாகவும் ஆற்றல் மிக்கதாகவும் கருதுவர். பாகுபாடு என்பது ஒருவர்தாம் சார்ந்த குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையை இல்லாமலாக்குவது அல்லது இயற்கை வளங்களை அணுகுவதில் இருந்து தடுப்பது. மேலும், இதில் செல்வம் முக்கியப்பங்கு வகிக்கிறது. ஒரு குழுவில் ஒருவரின் தகுதி அல்லது சுய மரியாதையை உருவாக்குவதில் மறைமுகமான ஊக்கம் அவரது செல்வத்தால் ஏற்படுகிறது என்று பாகுபாடு எனும் புறக்கணிப்பு அல்லது ஒதுக்கல் குறித்து சமூக உளவியலாளர்கள் மதிப்பிடுகிறார்கள். இதை சமூக அடையாளக் கோட்பாடு எனலாம்.

குறைவான சமூக ஏற்பு அளிக்கப்படும் மனிதர்கள் வெளிக்குழுவினர் போல மதிப்பிழப்பதாகவும் சமத்துவமின்மை அடிப்படையில் அத்தகைய மனிதர்கள் எதிரிகளாகப் பார்க்கப்படுவதாகவும் தொடக்க கட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. வேறுபட்ட குழுவினர் (இன, மத சிறுபான்மையினர், பெண்கள், இயலாமையில் இருப்பவர்கள், வீடற்றவர்கள்) மீது காட்டப்படும் எதிர்மறை அணுகு முறைகள் ஒன்றுடன் ஒன்று வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளன.

**5. உறுதிப்படுத்தும் நடவடிக்கை**

சமூக பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் வழியாக சமூக சமத்துவத்தினை உருவாக்குவது உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனப்படுகிறது. இந்த மக்கள் காலம் காலமாக வரலாற்றுப் பூர்வமாக அடிமைகளாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் வாழ நிர்பந்திக்கப்பட்டவர்கள். இதனால் உருவாகியுள்ள சமுதாய, பொருளாதார இடைவெளிகளை இணைக்க வேலைவாய்ப்புகள் மற்றும் ஊதியங்களில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், கடந்த காலங்களில் ஏற்பட்ட வலி, காயங்கள் மற்றும் தவறுகளுக்கு நிவாரணம் காணுதல், குறிப்பாக அடிமை மற்றும் அடிமை சட்டங்களால் கடந்த காலங்களில் ஏற்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியன உறுதிபடுத்தும் நடவடிக்கைகளில் அடங்கும்.

உதாரணமாக, அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகளில் அமலான உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மீது 2017 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கருப்பினத்தவர் வேலைவாய்ப்பு பெறுவது அதாவது பணிகளில் கருப்பினத்தவர் பங்கு குறிப்பிடத்தக்க அளவு (0.8%) அதிகரித்துள்ளது என தெரியவந்தது.

# தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்

- தென்னிந்தியாவின் கிழக்கு கடலோரப் பகுதியில் அமைந்துள்ள நமது மாநிலமான தமிழ்நாடு **புதுச்சேரி**, **கேரளா**, **கர்நாடகம்**, **ஆந்திரப்பிரதேசம்** ஆகிய மாநிலங்களை எல்லைகளாக கொண்டுள்ளது.
- கிழக்கில் வங்காள விரிகுடாவையும், தெற்கில் இந்தியப் பெருங்கடலையும், மேற்கில் கேரளாவையும், வடக்கில் கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தினையும் தமிழகம் எல்லைகளாகக் கொண்டுள்ளது.
- **1858-ம் ஆண்டு ஜனவரி 14-ம் நாள்**, தமிழ்மொழி மாநிலத்தின் ஆட்சி மொழியாகக் கொண்டு வரப்பட்டது.




தமிழ்நாடு அமைப்பு

- இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் **ஆறாவது இடத்தை** பெற்றுள்ள தமிழகம், விவசாயம் மற்றும் இயந்திரப் பொருட்கள் உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
- தமிழ்நாடு வடக்கே **8°41** அட்சத்தி லிருந்து **13°352** அட்சம் வரையிலும், கிழக்கே **76°181** 760181 தீர்க்கத்திலிருந்து **80°201** தீர்க்கம் வரை பரவியுள்ளது.
- ஏறக்குறைய **முக்கோண வடிவ** அமைப்பில் அமைந்துள்ள தமிழ்நாடு பரப்பளவில் இந்திய மாநிலங்களில் **பதினொன்றாவது** இடத்தை வகிக்கின்றது.
- இந்தியாவில் நகரமயமாதலில் அதிக வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு தனித்தொரு புவியியல் மண்டலமாகத் திகழ்கின்றது.
- அழகிய இயற்கை வளங்களும், அடர்ந்த காடுகளும், அரியவன விலங்குகளும், குளிர் மலைப் பிரதேசங்களும், திராவிட கலைநயம் மிக்க **இந்துக் கோயில்களும்**, **சிற்பக் கலைக்கூடங்களும்** தமிழகத்தின் தனிப்பெரும் உடைமையாக உள்ளது.
- கடற்கரை விடுதிகள், பெருமை மிக்க மதவழிபாட்டுத் தலங்கள் மற்றும் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட உலக பண்பாட்டுத் தலங்கள் நிறைந்த மாநிலமாக இது திகழ்கிறது.
- தமிழகத்தில் மேலும் தேசிய பூங்காக்கள், பறவைகள் சரணாலயங்கள், புலிகள் காப்பகம், யானைகள் காப்பகம் எனப் பல்வேறு விதமான இயற்கையினால் உண்டாக்கப்பட்ட உயிரினங்கள் காணப்படுகிறது.

**தமிழ்நாட்டில் உள்ள காப்பகங்கள் பூங்காங்கள் மற்றும் சரணாலயங்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| தேசிய பூங்கா | 5 |
| பறவைகள் சரணாலயம் | 13 |
| யானைகள் காப்பகம் | 4 |
| புலிகள் காப்பகம் | 4 |
| உயிர்கோள காப்பகம் | 3 |
| வனவிலங்கு சரணாலயங்கள் | 29 |


### தமிழ்நாட்டின் மாவட்டங்கள்

- தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு **1,30,058 ச.கி.மீ ஆகும்.** இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் **நான்கு சதவீதமாகும்.**
- இன்றைய தமிழ்நாடு இந்தியாவின் **29 மாநிலங்களில்** ஒன்றாகும்.
- தமிழ்நாட்டின் தலைநகர் **சென்னை.** இதன் தலைமைச் செயலகம் **புனித ஜார்ஜ் கோட்டையில்** செயல்பட்டு வருகிறது.
- **தமிழும்**, **ஆங்கிலமும்** தமிழகத்தின் ஆட்சி மொழிகள் ஆகும்.
- தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை **7,21,47,030.**
- மக்கள் நெருக்கத்தில் **6-வது** இடத்திலும், வளர்ச்சியில் **3-வது** இடத்திலும், மனித வள மேம்பாட்டில் **6-வது** இடத்திலும் உள்ளது.

## தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்பு

| | |
|---|---|
| மாநகராட்சிகள் 12 | நகராட்சிகள் - 125 |
| பேரூராட்சிகள் 529 | மாவட்ட ஊராட்சிகள் - 31 |
| ஊராட்சி ஒன்றியங்கள் 385 | ஊராட்சி மன்றங்கள் - 12,524 |
| மக்களவை தொகுதிகள் - 39<br>சட்டமன்ற தொகுதிகள் - 234<br>மாநிலங்களவை தொகுதிகள் - 18 | |

| | | |
|---|---|---|
| 1 | அரியலூர் | 2007 |
| 2 | சென்னை | 1956 |
| 3 | கோயம்புத்தூர் | 1956 |
| 4 | கடலூர் | 1993 |
| 5 | தருமபுரி | 1966 |
| 6 | திண்டுக்கல் | 1985 |
| 7 | ஈரோடு | 1979 |
| 8 | காஞ்சிபுரம் | 1997 |
| 9 | கன்னியாகுமரி | 1956 |
| 10 | கரூர் | 1995 |
| 11 | கிருஷ்ணகிரி | 2004 |
| 12 | மதுரை | 1956 |
| 13 | நாகப்பட்டினம் | 1991 |
| 14 | நாமக்கல் | 1997 |
| 15 | நீலகிரி | 1956 |
| 16 | பெரம்பலூர் | 1995 |
| 17 | புதுக்கோட்டை | 1974 |
| 18 | இராமநாதபுரம் | 1956 |
| 19 | சேலம் | 1956 |
| 20 | சிவகங்கை | 1985 |
| 21 | தஞ்சாவூர் | 1956 |
| 22 | தேனி | 1996 |
| 23 | திருச்சிராப்பள்ளி | 1956 |
| 24 | திருநெல்வேலி | 1956 |
| 25 | திருவள்ளூர் | 1997 |
| 26 | திருவண்ணாமலை | 1989 |
| 27 | திருவாரூர் | 1991 |
| 28 | தூத்துக்குடி | 1986 |
| 29 | திருப்பூர் | 2009 |
| 30 | வேலூர் | 1989 |
| 31 | விழுப்புரம் | 1993 |
| 32 | விருதுநகர் | 1985 |




தமிழ்நாடு அமைப்பு

**மாநகராட்சிகள்**

| | |
|---|---|
| 1. சென்னை | 7. தஞ்சாவூர் |
| 2. மதுரை | 8. திருநெல்வேலி |
| 3. திருச்சி | 9. திருப்பூர் |
| 4. கோவை | 10. ஈரோடு |
| 5. சேலம் | 11. வேலூர் |
| 6. திண்டுக்கல் | 12. தூத்துக்குடி |

- ஒவ்வொரு மாவட்டத்தின் தலை நகரமும் அந்தந்த மாவட்டங்களில் அமைந் துள்ளது. இரண்டு மாவட்டங்களின் தலைநகரம் மட்டும் வேறுபட்டுள்ளது. அவை.

> கன்னியாகுமரி - நாகர்கோவில்
> நீலகிரி - உதகமண்டலம்

## தமிழகத்தின்ஒவ்வொருமாவட்டங்களின் தனிச்சிறப்புகள்

**ஈரோடு**

- நகர வளர்ச்சியில் தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகர்.
- ஈரோடு துணி வியாபாரம் இந்திய அளவில் ஜமக்காளம் மிகப் புகழ் பெற்றதாகும்.

**கடலூர்**

- நெய்வேலி அனல்மின் நிலையம்.
- நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை. (இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை)

**கரூர்**

- தமிழ்நாடு காகித ஆலை
- கூட்டுறவு நூற்பாலை
- செட்டிநாடு சிமெண்ட் ஆலை

**கன்னியாகுமரி**

- நாஞ்சில் நாடு என்றழைக்கப்படும்
- இந்திய அருமண் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கதாகும்.

**காஞ்சிபுரம்**

- ஹீண்டாய் கார் தொழிற்சாலை
- மகேந்திரா போர்ட் தொழிற்சாலை
- செயிண்ட் கோபைன் மிதவை கண்ணாடி தொழிற்சாலை அகியவை அமைந்தள்ளது.
- **அறிஞர் அண்ணா** பிறந்த ஊர் ஆகும்.

**கோயம்புத்தூர்**

- இம்மாவட்டத்திலுள்ள **கடம்பாறையில்** நீர்மின் விசை உற்பத்தி செய்யப் படுகிறது.
- **தென்னிந்தியாவின் மான்செஸ்டர்** என்றும் கோவை அழைக்கப்படுகிறது. (வட இந்தியாவின் மான்செஸ்டர் கான்பூர் ஆகும்).
- பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஸ்ரீஅவினாசி லிங்கம் மனையியல் பல்கலைக் கழகம் ஆகியவை இம் மாவட்டத்தில் உள்ளன.

**சிவகங்கை**

- உலகின் மிகவும் தரம்வாய்ந்த கிராபைட் கனிமம் கிடைக்கிறது.

**சென்னை**

- இந்தியாவின் "**டெட்ராயிட்**" என்று கூறப்படும் விதத்தில் பன்னாட்டு கார் தயாரிப்பு ஆலைகள் சென்னையிலும், அதைச் சுற்றிலும் அமைந்து உள்ளன.
- "**ஆவடி**" தென்னிந்தியாவின் கலாச் சாரத்தின் நுழைவு வாயிலாகக் கருதப் படுகிறது.

**சேலம்**

- பெரியார் பல்கலைக்கழகம் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

- இந்தியாவிலேயே **மானசைட்** உற்பத்தி செய்யும் பகுதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது.
- மேலும் ஜவ்வரிசி மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகிறது.

**தஞ்சாவூர்**

- தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ்
- பேரறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை
- திருமண்டகுடி ஆருரான் சர்க்கரை ஆலை
- பெல் மெட்டல் யூனிட்
- ஈகான் மேக்கிங் லிமிடெட் அகியவை அமைந்துள்ளன.

**திண்டுக்கல்**

- காந்தி கிராமியப் பல்கலைக்கழகம்
- அன்னை தெரசா பல்கலைக்கழகம்
- திண்டுக்கல் பூட்டு சிறப்புமிக்கது.

**திருச்சி**

- மலைக்கோட்டை, கல்லணை, முக்கொம்பு போன்ற முக்கிய சுற்றுலா தளங்கள் உள்ளது.
- பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைந் துள்ளது.

**திருநெல்வேலி**

- மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.
- சிற்பக் கலைக்கு புகழ்பெற்ற **கிருஷ்ணா புரம்**
- கூடங்குளம் அனுமின் நிலையம், அரியகுளம் மூன்றடைப்பு பறவைகள் சரணாலயம்
- களக்காடு - முண்டந்துறை புலிகள் சரணாலயம்

**பெரம்பலூர் மற்றும் அரியலூர்**

- தமிழகத்திலேயே அதிகளவில் சிமெண்ட் உற்பத்தியாகும் இடம்.
- ஜிப்சம் அதிகமாக இம்மாவட்டத்தில் காணப்படுகிறது.

**தூத்துக்குடி**

- ஆர்கானிக் கெமிக்கல்ஸ் ஸ்பிக் தூத்துக்குடி அனல் மின் நிலையம்.
- தாரங்கதாரா கெமிக்கல்ஸ் லிமிடெட்
- உப்பெடுத்தல் மற்றும் மீன் பிடித்தல் ஆகியவற்றுக்கு தூத்துக்குடி மாவட்டம் உலகப்புகழ் பெற்று விளங்குகிறது.
- தமிழ்நாடு கடல்சார் பயிற்சி கழகம் உள்ளது.

**நீலகிரி**

- புகைப்படச் சுருள் தயாரிப்பு
- துப்பாக்கி மருந்து தொழிற்சாலைகள்
- யுரேனியம், பினாயில், யூகலிப்டஸ் எண்ணெய் தயாரிப்பு
- ஊசித் தொழிற்சாலை
- புரோட்டீன் தயாரிப்பு
- வானிலை ஆய்வு நிலையம்

மலைவாழ் பழங்குடியினர்:

1. குறும்பர்
2. தோடர்
3. கோடர்
4. பனியர்
5. இருளர்

**விருதுநகர்**

- தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் ஆகியன இம்மாவட்டத்தின் சிறப்புகள்.
- இதனால் சிவகாசியை "**குட்டி ஜப்பான்**" என்று அழைக்கின்றனர்.

**வேலூர்**

- இராணிப்பேட்டை ஒரு தொழில் மையமாகும்.
- பெல், என்பீல்டு, ஈ.ஐ.டி பாரி போன்ற நிறுவனங்கள் இங்குள்ளன.
- தமிழ்நாடு வெடிபொருள் ஆலை, எஃகு ஆலை, எம்.ஆர்.எப். டயர், சந்தனம், சர்க்கரை, தோல் பதனிடும் தொழிற் சாலை போன்றவை அமைந்துள்ளன.
- ஆசியாவின் மிகப்பெரிய தொலை நோக்கி மையம் **காவலூரில்** உள்ளது.
- ஆசியாவிலேயே புகழ்பெற்ற **சி.எம்.சி. மருத்துவமனை** உள்ளது.

**தமிழகத்தின் சிறப்புகள்**

| | | |
|---|---|---|
| 1 | மிக உயரமான சிலை (133 அடி உயரம், கன்னியாகுமரி) | திருவள்ளுவர் சிலை |
| 2 | மிகபெரிய தொலைநோக்கி (ஆசியாவிலேயே மிகப்பெரியது) | காவலூர் (வைனுபாப்பு) வேலூர் |
| 3 | மிக உயர்ந்த சிகரம் (தென்னிந்தியா) | ஆனைமுடி (2697 மீ) |
| 4 | மிக நீளமான ஆறு | காவிரி (760 கி.மீ) |
| 5 | தமிழகத்தின் மான்செஸ்டர் | கோயம்புத்தூர் |
| 6 | மிக உயர்ந்த கோபுரம் | ஸ்ரீரங்கம் (240 அடி) |
| 7 | மிக பெரிய பாலம் | பாம்பன் பாலம் |
| 8 | தமிழகத்தின் ஹாலந்து (மலர் உற்பத்தி) | திண்டுக்கல் |
| 9 | மிகப்பெரிய தேர் | திருவாரூர் |
| 10 | முதல் பெண் ஆளுநர் | பாத்திமா பீவி |
| 11 | மிகச் சிறிய மாவட்டம் | சென்னை |
| 12 | மிகப் பெரிய மாவட்டம் | ஈரோடு (8162 sq.km) |
| 13 | முதல் பெண் நீதிபதி | பத்மினி ஜேசுதுரை |
| 14 | தமிழகத்தின் நெற்களஞ்சியம் | தஞ்சாவூர் |
| 15 | முதல் பெண் மருத்துவர் | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி |
| 16 | முதல் நாளிதழ் | மதராஸ் மெயில் (1873) |
| 17 | முதல் தமிழ் நாளிதழ் | சுதேசமித்திரன் (1829) |
| 18 | மிகப்பெரிய கோவில் | தஞ்சை பிரகதீஸ்வர் கோயில் |
| 19 | மிகப்பெரிய அணைக்கட்டு | மேட்டூர் அணைக்கட்டு |
| 20 | மிகப் பழைய அணைக்கட்டு | கல்லணை அணைக்கட்டு |
| 21 | முதல் மாநகராட்சி | சென்னை (1688) |

| | | |
|---|---|---|
| 22 | முதல் பெண் முதல்வர் | ஜானகி ராமச்சந்திரன் |
| 23 | முதல் பேசும் படம் | காளிதாஸ் (1931) |
| 24 | முதல் இருப்புப் பாதை | ராயபுரம் - வாலாஜா (1856) |
| 25 | முதல் ஊமைப்படம் | கீசகவதம் (1916) |
| 26 | மலைகளின் ராணி | உதகமண்டலம் |
| 27 | மலைகளின் இளவரசி | வால்பாறை |
| 28 | ஏழைகளின் ஊட்டி | ஏற்காடு |
| 29 | தமிழகத்தின் நுழைவு வாயில் | தூத்துக்குடி துறைமுகம் |
| 30 | கோவில் நகரம்/உறங்கா நகரம் | மதுரை |
| 31 | மலைக்கோட்டை நகரம் | திருச்சி |
| 32 | குட்டி ஜப்பான் நகரம் | சிவகாசி |
| 33 | தென்னகத்தின் நுழைவாயில் | சென்னை |
| 34 | தொழில் நகரம் | விருதுநகர் |
| 35 | நெசவாளர்களின் வீடு | கரூர் |
| 36 | பூட்டு நகரம் | திண்டுக்கல் |
| 37 | தமிழகத்தின் ஹாலிவுட் | கோடம்பாக்கம் |
| 38 | மிக உயர்ந்த கட்டிடம் | எல்ஐசி மவுண்ட்ரோடு, சென்னை |
| 39 | தென்னாட்டு கங்கை | காவிரி |
| 40 | முதல் பெண் தலைமை செயலர் | திருமதி.லக்சுமிபிரானேஷ் |
| 41 | தமிழகத்தின் முதல் நோபல் பரிசாளர் | சி.வி.ராமன் (1930 - இயற்பியல்) |
| 42 | தமிழகத்தின் முதல் நீர் மின் திட்டம் | ஐபகாரா (நீலகிரி) |
| 43 | தமிழ்நாட்டின் முதல் பெண் ஜீஐ அதிகாரி | திலகவதி |
| 44 | தமிழ்நாட்டில் முதல் வானொலி நிலையம் | சென்னை |
| 45 | தமிழ்நாட்டின் முதல் பெண் மேயர் (சென்னை) | தாரா செரியன் |
| 46 | தமிழ்நாட்டில் முதல் சோதனைக்குழாய் குழந்தையை உருவாக்கியவர் | டாக்டர். கமலா செல்வராஜ் |
| 47 | முதல் அனல் மின் திட்டம் | நெய்வேலி |
| 48 | தமிழகத்தின் பொற்காலம் | சங்ககாலம் |
| 49 | தமிழகத்தின் இருண்ட காலம் | களப்பிரர்கள் காலம் |
| 50 | தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி நாள் | ஜூலை 15 |

| | | |
|---|---|---|
| 51 | தமிழில் எழுந்த முதல் நாவல் | பிரதாப முதலியார் சரித்திரம் |
| 52 | தமிழ்நாட்டில் முதன்முதலில் ரயத்துவாரி முறை கொண்டு வந்தவர் | சர்.தாமஸ் மன்றோ |
| 53 | மஞ்சள் உற்பத்திக்கு பெயர் பெற்ற மாவட்டம் | ஈரோடு |
| 54 | பாரத ரத்னா விருது பெற்ற முதல் தமிழக முதலமைச்சர் | இராஜாஜி |

### தமிழக அடையாளங்கள்

| | |
|---|---|
| மாநில சின்னம் | ஸ்ரீ வில் லிபுத் தூர் ஆண்டாள் கோயில் கோபுரம் |
| மாநில விலங்கு | வரையாடு |
| மாநில மலர் | செங்காந்தள் (அ) கார்த்திகைப்பூ |
| மாநில பறவை | மரகதப்புறா |
| மாநில மரம் | பனைமரம் |
| மாநில விளையாட்டு | கபடி |
| மாநில கீதம் | பெ.சுந்தரம் பிள்ளையின் நீராரும் கடலுடுத்த என்றும் பாடல் |

### சுதந்திரத்திற்கு முன்னர்

- இந்தியாவை ஆங்கிலேயர் அரசியல் மற்றும் இராணுவ காரணங்களுக்காக பம்பாய், கல்கத்தா, மதராஸ் என்று மூன்று பெரும் மாகாணங்களாகப் பிரித்திருந்தனர். இந்திய சிற்றரசர்களுடன் 1799-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் இம்மூன்று மாகாணங்களும் உருவாக்கப்பட்டன.
- மதராஸ் மாகாணத்தில் 1881-ம் ஆண்டு 26 மாவட்டங்கள் இருந்தன.

### சுதந்திரத்திற்கு பின்னர்

- இந்தியா 1947-ம் ஆண்டு சுதந்திரம் அடைந்தபோது மதராஸ் மாகாணம்
  - தமிழ்நாடு
  - கேரளா
  - ஆந்திரப்பிரதேசம் ஆகிய பகுதி

களை உள்ளடக்கியது.

| வருடம் | பிரிக்கப்படும் மாவட்டம் | புது தனி மாவட்டம் |
|---|---|---|
| 1966 | சேலத்திலிருந்து | தருமபுரி |
| 1974 | திருச்சியிலிருந்து | புதுக்கோட்டை |
| 1979 | கோயம்புத்தூரிலிருந்து | ஈரோடு |
| 1985 | மதுரை மற்றும் இராமநாதபுரத்திலிருந்து விருதுநகர் மற்றும் சிவகங்கை | விருதுநகர் மற்றும் சிவகங்கை |
| 1985 | மதுரையிலிருந்து | திண்டுக்கல் |

| | | |
|---|---|---|
| 1986 | திருநெல்வேலியிலிருந்து | தூத்துக்குடி |
| 1989 | வட ஆற்காட்டிலிருந்து | திருவண்ணாமலை மற்றும் வேலூர் |
| 1991 | தஞ்சாவூரிலிருந்து | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 1993 | தென் ஆற்காட்டிலிருந்து | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 1995 | திருச்சிராப்பள்ளியிலிருந்து | கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 1996 | மதுரையிலிருந்து | தேனி |
| 1997 | சேலத்திலிருந்து | நாமக்கல் |
| 1997 | செங்கல்பட்டிலிருந்து | காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் |
| 2004 | தருமபுரியிலிருந்து | கிருஷ்ணகிரி |
| 2007 | பெரம்பலூரிலிருந்து | அரியலூர் |
| 2009 | கோயம்புத்தூர் மற்றும் ஈரோடிலிருந்து | திருப்பூர் |

- ஆந்திரப்பிரதேசத்தில் ஏற்பட்ட போராட்டத்தினால் இந்த நிலப்பரப்பில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மதராஸ் மாகாணம் 1956-ம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு **தெலுங்கு மொழி பேசும் மக்களை ஆந்திரபிரதேச மாநிலமாகவும்**, **தமிழ் மொழி பேசும் மக்களை மதராஸ் மாநிமாகவும்** அமைக்கப்பட்டது.
- அப்பொழுது மதராஸ் மாகாணத்தில் 13 மாவட்டங்கள் இருந்தன. அவை,

1. மதராஸ்
2. செங்கல்பட்டு
3. வடஆற்காடு
4. தென் ஆற்காடு
5. நீலகிரி
6. கோயம்புத்தூர்
7. சேலம்
8. தஞ்சாவூர்
9. திருச்சி
10. மதுரை
11. இராமநாதபுரம்
12. திருநெல்வேலி
13. கன்னியாகுமரி

- தமிழக அரசு மேற்கூறிய 13 மாவட்டங் களையும், **1965 முதல் 2009** நிர்வாக சீரமைப்பிற்காக **32 மாவட்டங்களாக** மாற்றியமைத்தது.

# தமிழ்நாடு இயற்கையமைப்பு

- வடக்கே விந்திய மலையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை பரவியுள்ள தக்காணத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது தமிழ்நாடு.

**தமிழகத்தின் எல்லைப் பகுதிகள்**

வடக்கில் - ஆந்திரபிரதேசமும், கர்நாடகாவையும்

கிழக்கில் - வங்காள விரிகுடாவையும்,

தெற்கில் - இந்தியப் பெருங்கடலையும்

மேற்கில் - கேரளத்தையும் கொண்டுள்ளது.

- தமிழகத்தில் பரந்த, அரிக்கப்படாத உயர்நிலங்களும், ஆற்றுச்சமவெளிகள் கொண்ட பகுதியாகும் நமது தமிழ்நாடு.
- இங்கு **காவேரி**, **பாலாறு**, **தென்பெண்ணை**, **செய்யாறு**, **தாமிரபரணி**, **வைகை**, **மணிமுத்தாறு**, **பவானி**, **நொய்யல்** போன்ற நதிகள் பாய்ந்து தமிழ்நாட்டை வளப்படுத்து கின்றன.
- தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பினை நான்குப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை.
  1. மலைப்பகுதி
  2. பீடபூமிப்பிரதேசம்
  3. சமவெளிப்பிரதேசம்
  4. கடலோரப்பகுதிகள்

**I. மலைப்பகுதி**


- தமிழகத்தின் மலைப்பகுதியை இரண்டாகப் பிரிக்கலாம். அவை
  - மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள்
  - கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள்
- இந்த இரண்டு மலைப்பகுதிகளும் நீலகிரியில் உள்ள "**தொட்டபெட்டா**" என்ற இடத்தில் இணைகின்றன.

**குற்றால மலை**

- திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இதுதான் தமிழகத்தின் புகழ்பெற்ற நீர்வீழ்ச்சிகள் உள்ளது.

**மகேந்திர மலை**

- திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்து உள்ளது.
- இதன் உயரம் **1650 மீட்டர்**.
- இது **அகத்தியர் மலை** என்றும் அழைக்கப் படுகிறது.
- மேலும் மேற்கில் சிறுகுன்றுகள் **வருச நாடாகும்**.
- ஆண்டிப்பட்டி குன்றுகளையும், வருச நாட்டையும் கம்பம் பள்ளத்தாக்கு பிரிக்கிறது.




தமிழ்நாடு இயற்கை அமைப்பு

## தமிழ்நாட்டின் மலைகள்

| மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| ◆ மேற்கு கடற்கரைக்கு இணையாகச் சென்றாலும் அதன் ஒரு பகுதி மட்டும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் காணப்படுகிறது.<br>◆ நீலகிரி மலைகள், ஆனைமலை, பழனி மலை, கொடைக்கானல் குன்று, குற்றாலமலை, மகேந்திரமலை, அகத்தியர் மலை ஆகியவையாகும். | ◆ கிழக்கு கடற்கரை ஓரத்தில் மலைகளின் ஒரு பகுதி தமிழகத்தில் உள்ளது.<br>◆ ஜவ்வாது மலை, கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, பச்சை மலை, கொல்லி மலை ஆகிய மலைகள் அடங்கும். |
| நீலகிரி மலை | ஜவ்வாது மலை |
| ◆ கடல் மட்டத்திலிருந்து சுமார் 1800 முதல் 2400 மீ உயரத்தில் உள்ளன.<br>◆ இதன் உயர்ந்த சிகரம் "தொட்டபெட்டா" ஆகும். இதன் உயரம் 2673 மீ.<br>◆ தொட்டபெட்டா உதகமண்டலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.<br>◆ இதன் சரிவு மிகச் செங்குத்தானது.<br>◆ 2 மீட்டரிலிருந்து 1800 மீட்டர் வரையிலுள்ள தூரம் 4 கி.மீ தான்.<br>◆ நீலகிரிமலை கோயம்புத்தூர் பீடபூமியை நோக்கி மெதுவாக சரிகிறது.<br>◆ உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி ஆகியவை முக்கியமான மலை வாழிடங்களாகும். | ◆ இவை மைசூர் பீடபூமியை விட உயரம் அதிகம்.<br>◆ தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் வேலூர் மாவட்டத்தில் காணப்படும் குன்றுகளாகும்.<br>◆ இவற்றின் உயரம் 1090 முதல் 1160 மீ ஆகும். இது 252 ச.மீ வரை பரவியுள்ளது.<br>◆ இதில் அமைந்துள்ள ஏலகிரி கோடை வாழிடமாகும். |
| ஆனை மலை | கல்வராயன் மலை |
| ◆ தென்காசிக்கு மேற்கில் காணப்படும் இடைவெளி கேரளாவிற்கு செல்லும் பாதையாகப் பயன்படுத்தப்படுகிறது.<br>◆ இதில் உயர்ந்த சிகிரம் ஆனைமுடி (2652 மீ) இதற்கிடையில் பாலக்காட்டு கணவாய் உள்ளது. | ◆ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது.<br>◆ வெற்றாற்றின் துணை ஆறுகள் இந்த குன்றுகளில் உற்பத்தியாகின்றன.<br>◆ இங்கு முக்கியமான மலைசாதி குடியிருப்புகள் காணப்படுகின்றன.<br>◆ உயர்ந்த சிகரம் சோலைக்காடு (1640 மீ)<br>◆ இங்கு பாக்சைட் தாதுக்கள் கிடைக்கின்றன. |

| பழனி மலை | பச்சை மலை |
| --- | --- |
| ◆ இது ஒரு தாழ்ந்த குன்றுகளாகும்.<br>◆ இதன் உயரம் 150 மீட்டரிலிருந்து 2000 மீட்டராகும்.<br>◆ தெற்கில் ஏலகிரி மலைகள் உள்ளன.<br>◆ இதில் பெரியார் ஏரிக்கு அருகில் தேக்கடி சரணாலயம் உள்ளது. | ◆ பெரம்பலூர் மாவட்டத்தில் காணப்படுகிறது.<br>◆ இங்கு கருப்புக் கருங்கல் கிடைக்கிறது.<br>◆ இது உலகிலேயே தரம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. |
| **கொடைக்கானல் மலை** | **கொல்லி மலை** |
| ◆ இது பழனிமலையின் தொடர்ச்சி ஆகும்.<br>◆ இது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளது.<br>◆ இது ஒரு கோடை மலை வாழிடம் ஆகும். இங்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குறிஞ்சிப்பூ மலர்கிறது. | ◆ நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது.<br>◆ இங்கு பாக்சைட் தாது கிடைக்கிறது.<br>◆ பச்சை மலை, கொல்லிமலைக் கிழக்கில் பாலமலைக் குன்றுகள் காணப்படுகின்றன. இங்கும் கருங்கல், கல்தூரள்கள் கிடைக்கின்றன.<br>◆ கஞ்சமலை, சாக்குக் குன்று ஆகியவை சேலம் பகுதியில் உள்ளன.<br>◆ இவற்றில் இரும்புத்தாது மற்றும் மேக்ன சைட் தாதுக்கள் அதிகம் கிடைக்கின்றன. |

**2. பீடபூமிப்பகுதி**

- மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடையில் பீடபூமிப் பகுதிக் காணப்படுகிறது.
- இதன் உயரம் மேற்கில் 45 மீட்டரிலிந்து கிழக்கில் 150 மீட்டர் வரையாகும். நிலம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சரிகிறது. இங்கும் பாயும் ஆறுகளால் அரிக்கப்பட்டும் காணப்படுகிறது.
- தமிழ்நாட்டின் சேர்வராயன் குன்றுகளுக்கு மேற்கில் காணப்படும் **பாராமஹால் பீடபூமி** மைசூர் பீடபூமியின் தொடர்ச்சியாகும். இதன் உயரம் 350 முதல் 710 மீட்டர் வரையாகும்.
- மேற்கு தொடர்ச்சி மலைகளோடு ஒப்பிடும் போது கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்ற மலைகளாக காணப்படுகிறது.
- நீலகிரியிலிருந்து, தர்மபுரி வரை உள்ள பகுதியை கோயம்புத்தூர் பீடபூமி என்கிறோம். இதன் உயரம் 150 முதல் 450 மீ வரையாகும்.
- இது பாறை வடிவில் அமைந்துள்ளது. இதில் சேலம், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.
- **நீலகிரி பீடபூமி 2560ச.கி.மீ** நீலகிரி பீடபூமி 2560 ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இதன் உயரம் **1800மீ முதல் 2900மீ** வரையாகும்.

**பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்**

| மாவட்டங்கள் | மலைகள் |
|---|---|
| 1. வேலூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரி |
| 2. சேலம் | சேர்வராயன் மலை |
| 3. விழுப்புரம் | கல்வராயன் மலை |
| 4. திருச்சி | பச்சை மலை |
| 5. நாமக்கல் | கொல்லி மலை |
| 6. தருமபுரி மற்றும் சேலம் | சித்தேரி மலை |
| 7. திருவண்ணா மலை | செஞ்சி மலை |
| கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உயர்ந்த மலை சேர்வராயன் மலை (1500 மீ - 1600 மீ, சேலம்) | |
| மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உயர்ந்த மலை ஆனைமலை (2700 மீ, கேரளா) | |

- இது வடக்குப் பகுதியில் மேயாற்று நீரால் மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கப்படுகிறது.
- பொதுவாக பீடபூமிகள் என்பது தட்டையான மேல்பகுதிக் கொண்ட மலைகள் எனக் கருதப்படுகிறது. ஆனால் வரையறைப்படி மிகப்பெரிய தட்டையான நிலப்பகுதி அதனுடைய சுற்றுப்புறத்தைக் காட்டிலும் ஏறக்குறைய 15000 அடிக்கும் மேல் உயர்ந்தும் மற்றும் குறைந்தும் ஒரு செங்குத்து பகுதி கொண்ட அமைப்பாக வரையறுக்கப்படுகிறது.
- நீலகிரி உயிர்கோள பாதுகாப்பு அமைப்பு சிகுர் பீடபூமி மற்றும் நீலமலைத் தொடர்களை உள்ளடக்கி உள்ளது. இது UNESCO உயிர்கோள பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதி ஆகும்.
- இவ்விரு பீடபூமி பிரிவுகளுக்கும் இடையே பல தனித்தனிக் குன்றுகள் காணப்படுகின்றன.

**3. சமவெளிகள்**

- தமிழ்நாட்டின் சமவெளிப் பிரதேசத்தை மூன்று பிரிவுகளாப் பிரிக்கலாம். அவை.
  - i. சோழமண்டலக் கடற்கரை சமவெளி
  - ii. காவிரி வண்டல் சமவெளி
  - iii. வறண்ட சமவெளிப்பகுதிகள் ஆகியன.
- தமிழ்நாட்டின் சமவெளிகளை ஆற்றுச் சமவெளி மற்றும் கடலோரச் சமவெளி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



**(i) சோழ மண்டலக் கடற்கரைச் சமவெளி**

- கடலோரச் சமவெளிகள் வடக்கே **பழவேற்காடு** ஏரியில் இருந்து தெற்கே **கன்னியாகுமரி**வரை சுமார் **1000** கி.மீ
- நீளத்தில் பரவியுள்ளது. இச்சமவெளி கள் சராசரி உயரம் 50 மீட்டர் ஆகும்.
- இதில் **பாலாறு**, **செய்யாறு**, **பெண்ணையாறு**, **வேலூாறு** நதிகளின் வடிகால்களும் அடங்கும்.
- இதற்குத் தெற்கில் பல மலைத்தொடர்கள் குறுக்கே செல்கின்றன. இச்சமநிலம் மேடு பள்ளங்களால் ஆனது. கல்வராயன் மலையில் உற்பத்தியாகும்.

- மணிமுத்தாறு மற்றும் அதன் துணை நதிகள் சமநிலங்களை அளிக்கின்றன.
- வெள்ளாற்றுப் பள்ளத்தாக்கில் "**ஆர்ட்டீசியர் நீருற்றுகள்**" உள்ளன.
- வடக்கில் செங்கல் கணவாயும், தெற்கில் ஆத்தூர் கணவாயும் பீடபூமியும், சமவெளியையும் பிரிக்கின்றன.
- இச்சமவெளி திருவாரூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங் களில் பரவியுள்ளது.

**(ii) காவிரி வண்டல் சமவெளி**

- காவிரி சமவெளியில் காவிரி மற்றும் அதன் துணை நதிகள் பாய்கின்றன. இதன் உயரம் 300 மீட்டருக்குக் குறை வானதாகும்.
- இதில் **தருமபுரி**, **சேலம்**, **தஞ்சாவூர்**, **திருச்சி**, **திருவாரூர்**, **புதுக்கோட்டை**, **கரூர்**, **நாகப்பட்டினம்** ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.
- **வடக்கில் பச்சைமலையும்**, **கொல்லி மலையும்**, **தெற்கில் விராலிமலையும்** இச்சமவெளியைப் பிரிக்கின்றன.
- இது செழிப்பான வண்டல் மண் சமநிலத்தைக் கொண்டதாகும்.

**(iii) வறண்ட தென் சமவெளிகள்**

- இச்சமவெளிகள் மலையடிவாரத்தில் உயர்ந்தப் பகுதிகளாகக் காணப்படு கின்றன.
- **மதுரை**, **சிவகங்கை**, **இராமநாதபுரம்**, **விருதுநகர்**, **தூத்துக்குடி**, **திண்டுக்கல்** ஆகிய மாவட்டங்கள் இதில் அடங்கும்.
- கடற்கரைச் சமவெளிகள் பாலாற்றுக்கும், காவிரி ஆற்றுக்கும் இடையில் வண்டல் படிவுகளால் ஆனது.
- இதன் உயரம் 50மீ உயரத்தில் செம்மண் குன்றுகள் காணப்படுகின்றன.
- தமிழகத்தின் கடற்கரை அதிகம் உடைபடாமல் வளையாமல் நேரான கடற்கரை மணல்பரப்புகள் கொண்டதாக அமைந்துள்ளது.

## 4. கடலோரப் பகுதிகள்

- தூத்துக்குடியில் கடற்கரைக்கு இணையாக 10மீ உயரத்திற்கும் மேலான தேரி மணல் மேடுகள் காணப்படுகின்றன.
- தமிழ் நாட்டில் இரண்டு கடற்கரைகள் குறிப்பிடத்தக்கதாகும்.
  i. மெரினா கடற்கரை
  ii. இராமேஸ்வரம் கடற்கரை

**(i) மெரினா கடற்கரை**

- உலகின் இரண்டாவது அழகிய பெரிய கடற்கரையான மெரினா சுமார் 13 கிலோமீட்டர். நீளம் வரை பரவியுள்ளது. இது சென்னை நகரின் முக்கிய சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாகும்.

**(ii) இராமேஸ்வரம் கடற்கரை**

- அழகிய கடல் நிலத்தோற்றங்களுக்கும், அலையில்லாக் கடற்பரப்பிற்கும், இக்கடற்கரை புகழ் பெற்றதாகும்.
- இங்கு கடல் அலைகள் **3செ. மீட்டருக்கும்** மிகாத அளவிற்கு எழும்புவதால் இது பார்ப்பதற்கு ஓர் மிகப்பெரிய **ஆறு போன்ற** தோற்றத்தை அளிக்கின்றது.

# தமிழ்நாடு ஆறுகள்

- தமிழகத்தின் ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் பருவ மழையினால் உருவாகின்றன. இவைகள் மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்கின்றன.
- வடக்கில் பாயும் ஆறுகள்:

1. பாலாறு
2. பொன்னியாறு
3. செய்யாறு

ஆகிய நதிகள் தமிழ்நாட்டின் வடக்கில் பாய்கின்றன.

**காவிரி ஆறு**

- காவிரி **வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு** ஆகிய இரண்டு பருவங்களிலும், மழையினைப் பெற்று கர்நாடகத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் பாய்கிறது.
- தமிழ்நாட்டை வளப்படுத்தி காவிரி டெல்டாவான தஞ்சை மாவட்டத்தை "**நெற்களஞ்சியம்**" என அழைக்கக் காரணமாக இருந்தது.
- ஆனால் தற்போது கர்நாடகத்தில் காவிரியின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுவிட்டதால் கோடைக் காலத்தில் தமிழ்நாட்டில் காவிரியில் நீரின்றி விவசாயிகள் பெரும் அவதிக் குள்ளாகின்றனர்.
- இதன் முக்கிய துணை நதிகள் பவானி, அமராவதி ஆகும். தமிழகத்தின் கால்வாய் பாசனத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றன.
- இந்த துணை ஆறுகளின் இடையே பல்வேறு அணைகள் கட்டப்பட்டுள்ளன. **பவானிசாகர்**, **கல்லாணை**, **முக்கொம்பு** போன்ற அணைகள் உள்ளன.
- காவிரிக்கு தெற்கே **வைப்பார்**, **வைகை**, **தாமிரபாணி** போன்ற முக்கிய ஆறுகள் பாய்கின்றன.

> காவிரி நடுவர் நீதிமன்ற தீர்ப்பாயம் 1990-களில் அமைக்கப்பட்டது. இத்தீர்ப்பாயம் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய எல்லை வரையறைக்குள் வருகிறது. தற்போது இதன் தலைவராக **அப்பாய் மனோகர் சாப்ரே** இருக்கிறார்.

**பவானி ஆறு**

- பவானி தமிழ்நாட்டின் **அமைதி பள்ளத்தாக்கில்** (Silent Valley) உற்பத்தியாகிறது.
- காடுகள் அடர்ந்த இப்பகுதியில் தோன்றும் பவானியுடன் கிளை ஆறுகளாக **சிறுவாணி**, **குந்தாமேயார்** முதலியவையும் சேர்கின்றன.


- இது காவேரியுடன் கலக்குகிறது. இதன் நீளம் 20 கி.மீ இதன் குறுக்கே **பவானிசாகர் அணைக்கட்டு** உள்ளது.

**தென்பெண்ணை**

- கர்நாடகா மாநிலத்தில் **சென்னராயன் பேட்டை** என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.
- பிறகு தமிழ்நாட்டில் தர்மபுரி, **திருவண்ணா மலை** மாவட்டங்களில் ஓடி **கடலூர்** மாவட்டத்தில் கடலூருக்கு அருகில் கடலில் கலக்கிறது.
- **சாத்தனூர் அணையும்**, இதன் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. **சின்னாறு, மார்கண்ட ஆறு, வாணியாறு** இதன் முக்கிய கிளை ஆறுகள் இதன் நீளம் **396 கி.மீ**

**பாலாறு**

- கர்நாடக மாநிலத்தில் "**நந்தி துர்க்கம்**" என்ற மலைப்பகுதியில் தோன்றி கிழக்காக ஓடி **வேலூர்**, **காஞ்சிபுரம்** மாவட்டங்களைக் கடந்து சென்று சதுரங்கப் பட்டிணத்தின் அருகில் கடலில் கலக்கிறது.



தமிழக ஆற்றின் பரவல்கள்

- பெருமழை பெய்தாலன்றி இதில் வெள்ளம் வராது. இதனால் பாலாற்றில் நிரம்ப வேண்டிய ஏரிகள் பெரும்பாலும் வறண்டே காணப்படும்.
- செய்யாறு, பெரும்பாலும் வறண்டே காணப்படும். **செய்யாறு**, **பொயினி**, **நள்ளாறு** இதன் முக்கிய கிளை ஆறுகள் இதன் நீளம் 348 கி.மீ.

**வைகையாறு**

- தேனி மாவட்டத்தில் பல இடங்களிலிருந்தும் ஓடைகளாப் பெருகி வரும் நீர் ஒன்றுபட்டு வைகையாறு ஆகி **கண்டனூர்**, **கடமலைக்கண்டு மயிலாடும் பாறை**, **வருசநாடு** என்பவற்றை கடந்து மேகமலையை அடைந்து வள்ளிமலைத் தோட்டத்திலிருந்து புறப்படுகிறது.



- இப்பகுதிகளில் இதனுடன் **மேல் மணலாறு**, **மணலாறு**, **மூங்கிலாறு**, **வருச ஆறு** முதலியவையும், கம்பம் பகுதியில் முல்லையாறும், பழனி மலைப்பகுதி வழியாக ஆறும் கலந்து வைகை அணைகட்டி அந்த நீரை திருப்பி விடுகிறார்கள்.

### தாமிரபணியாறு

- "**பொருநை**" எனப்பெயர் பெறும் தாமிரபரணி **திருநெல்வேலி**, **தூத்துக்குடி** மாவட்டங்களை வளப்படுத்துகிறது.
- எகிப்து நைலின் நன்கொடை என்பதைப்போல் **தென்பாண்டி நாடு** தாமிரபரணியின் நன்கொடை.
- இது பொதிகை மலையில் பல கால்களாகத் தோன்றுகிறது.
- **பேயாறு**, **பாம்பாறு**, **உள்ளாறு**, **களரியாறு**, **சேர்வையாறு** எனப் பலவும் ஒன்றுகூடி தாமிரபரணியாகி **121 கி.மீ** நீளம் ஓடி புண்ணைக் காயல் என்ற இடத்தில் வங்காள விரிகுடாவுடன் கலக்கிறது.
- இதன் முக்கிய கிளை ஆறு **மணிமுத்தாறு**, தாமிரபரணியின் நீளம் 130 கி.மீ.

### வெள்ளாறு

- சேர்வராயன் மலைகள், கல்வராயன் மலைகள், பச்சை மலை ஆகியவற்றின் சரிவுகளில் துள்ளிப்பாயும் அருவிகள் ஒன்றுக்கூடி வெள்ளாறு ஆகின்றது.
- இது கிழக்கு நோக்கி ஓடி சிதம்பரத்திற்கு வடக்கே 16 கி.மீ தொலைவில் உள்ள தரங்கம்பாடி அருகே வங்கக் கடலுடன் கலக்கிறது.
- **கோமுகியும் மணிக்குட்ட நதியும்** இதன் கிளை ஆறுகள் ஆகும். இதன் நீளம் 193 கி.மீ.

### பரளியாறு

- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடும் பல சிற்றாறுகள் புகழ் வாய்ந்தது. "**பழையாறு**" என்று இதை அழைப்பர்.
- பல சிற்றாறுகள் ஒன்றுகூடி நதியாகிறது. இவற்றுள் ஒன்று மகேந்திரகிரிக்கு வடக்கே உற்பத்தியாகி **பூதப்பாண்டி**, **கோட்டாறு**, **நாகர்கோவில்**, **சுசீந்திரம்** ஆகிய ஊர்கள் வழியாக **50 கி.மீ** நீளம் ஓடி மணக்குடியருகே தேங்காய்பட்டிணத்தில் வங்கக்கடலுடன் கலக்கிறது.

### மணிமுத்தாறு

- இது திருநெல்வேலி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் **செங்கல்தேரிச் சோலையில்** உற்பத்தியாகி பொருனை ஆற்றுடன் கலக்குகிறது.

### கொடுதலையாறு

- "**கொற்றையனையாறு**, **குசஸ்தலையாறு**" என்றும் வழங்கப்படுகிறது. சென்னைக்கு வடமேற்கு 160 கி.மீ தொலைவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள **நகரி** மலையில் உற்பத்தியாகி திருவள்ளூர் மாவட்டத்தில் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கிறது.
- வடகிழக்கு பருவ மழை பெய்யும் **அக்டோபர் முதல் டிசம்பர்** வரையிலான காலப்பகுதியில் இதில் 3 அல்லது 4 முறை வெள்ளம் கரைபுரண்டோடும்.

**தமிழகத்தில் பாயும் ஆறுகளின் கிளை நதிகள்**

| ஆறுகள் | கிளை நதிகள் |
|---|---|
| காவிரி ஆறு | பவானி, லோக் பவானி, நொய்யல், அமராவதி ஆறு |
| பவானி ஆறு | சிறுவாணி, குந்தாமேயர் |
| தென்பெண்ணை ஆறு | சின்னாறு, மார்க்கண்ட் ஆறு, வாணியாறு |
| பாலாறு | செய்யாறு, பொயினி, நள்ளாறு |
| தாமிரபரணி | மணிமுத்தாறு, பேச்சியாறு, சித்தார் ஆறு, சேர்வையாறு |
| வெள்ளாறு | கோமுகி, மணிக்குட்ட நதி, கல்லாறு, அணைமடுவு |
| மணிமுத்தாறு | கீழ ஆறு, வரட்டாறு |
| கொசஸ்தலையாறு | நகரி ஆறு |

**தமிழக்தின் பல்வேறு மாவட்டங்களில் பாயம் ஆறுகளின் பெயர்கள் பின்வரும் அட்டணையில் காண்போம்**

| மாவட்டம் | பாயும் ஆறுகள் |
|---|---|
| சென்னை | கூவம், அடையாறு, பக்கிங்காம், கால்வாய், ஓட்டேரி கால்வாய்கள் |
| கடலூர் | தென்பெண்ணை, கெடிலம் |
| விழுப்புரம் | கோமுகி |
| காஞ்சிபுரம் | அடையாறு, செய்யாறு, பாலாறு |
| திருவண்ணாமலை | தென்பெண்ணை, செய்யாறு |
| கரூர் | அமராவதி |
| திருச்சி | காவேரி, கொள்ளிடம் |
| தஞ்சாவூர் | வெட்டாறு, வெண்ணாறு, கொள்ளிடம், காவேரி |
| சிவகங்கை | வைகையாறு |
| நாகப்பட்டினம் | பாமணியாறு, காவேரி |
| தூத்துக்குடி | வெண்ணாறு |
| தேனி | வைகையாறு |
| கோவை | சிறுவாணி, அமராவதி |
| திருநெல்வேலி | தாமிரபரணி |
| மதுரை | பெரியாறு, வைகை |
| திண்டுக்கல் | பரப்பலாறு, வரதமாநதி, மருதா நதி |

| | |
|---|---|
| கன்னியாகுமரி | கோதையாறு, பரளியாறு, பழையாறு |
| இராமநாதபுரம் | குண்டாறு, வைகை |
| தருமபுரி | தொப்பையாறு, தென்பெண்ணை, காவேரி |
| சேலம் | வசிட்டா நதி, காவேரி |
| விருதுநகர் | கௌசிகாறு, வைப்பாறு, குண்டாறு, அர்ஜீனாறு |
| நாமக்கல் | உப்பாறு, நொய்யல், காவேரி |
| ஈரோடு | பவானி, காவேரி |

**தமிழ்நாட்டின் அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள்**

| மாவட்டம் | அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் |
|---|---|
| தருமபுரி | தொப்பையாறு, கிருஷ்ணகிரி, நாகாவதி, பாம்பாறு, கெலவரளப்பா, கேசரளிகுல்லா, பஞ்சப்பள்ளி, வாணியாறு, ஈச்சம்பாட்டி நீர்த்தேக்கம். |
| ஈரோடு | பவானிசாகர், வரட்டுப்பள்ளம், குண்டேரிப்பள்ளம், கொடிவேரி, ஓரத்துப்பள்ளம், உப்பாறு |
| நீலகிரி | அவலாஞ்சி, எமரால்டு, கிளம்மார்க்கன்குத்தா, சாண்டிநல்லா, பார்சன்ஸ்வேலி, பைக்காரா, போக்த்திமந்து, மரவகண்டு, முக்குருத்தி, மேல்பவானி. |
| கோயம்புத்தூர் | அமராவதி, சின்னாறு, பரம்பிக்குளம், ஆளியாறு, திருமூர்த்தி |
| திருநெல்வேலி | பாபநாசம், கடனாநதி, இராமாநதி, கருப்பா நதி, சேர்வையாறு, குண்டாறு, மணிமுத்தாறு |
| திருவண்ணாமலை | சாத்தனூர் அணை |
| விழுப்புரம் | மணிமுத்தாறு, கோமுகி வீடுர் நீர்த்தேக்கம் |
| சேலம் | மேட்டூர் அணை, வசிட்டா நதி |
| திருச்சிராப்பள்ளி | கல்லணை, முக்கொம்பு |
| மதுரை | வைகை அணை |
| தேனி | மஞ்சளாறு அணை, வைகை அணை |
| விருதுநகர் | பிளவக்கல் அணை |
| கன்னியாகுமரி | பேச்சிப்பாறை அணை |

# தமிழ்நாட்டின் காலநிலை

"**மான்சூன்**" என்ற சொல்லானது "**மௌசம்**" என்ற அரேபிய சொல்லில் இருந்து பெறப் பட்டது ஆகும். இச்சொல்லுக்கு **பருவம்** என்று பொருள். ஓர் ஆண்டில் ஒரு குறிப்பிபட்ட பருவத்தில் நேர் எதிர்திசைகளால் இருந்து வீசும் காற்றுகளை **பருவக் காற்றுகள்** என்பர்.

- ஆவியாதல் குளிர்காலத்தை விட கோடைகாலத்தில்தான் அதிகமாக காணப்படுகிறது. மழைப்பொழிவு தரும் மேகங்கள் கோடைக்காலங்களில் பெருமளவில் காணப்படுகின்றன.
- கோடை காலத்தின் அதிக வெப்பமான காலம் "**அக்னி நட்சத்திரம்**" அல்லது "**கத்திரி வெயில்**" எனப்படும்.

**தமிழ்நாட்டின் மழைப்பொழிவு 3 காலக்கட்டங்களில் பெறப்படுகிறது.**

1. தென்மேற்கு பருவக்காற்று மழைப்பொழிவு
2. வடகிழக்கு பருவக்காற்று மழைப்பொழிவு
3. சூறாவளி மழைப்பொழிவு

**மழைப்பொழிவு பரவல் (Rainfall Distribution)**

- தமிழக மாவட்டங்களுள் கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமே மூன்று பருவக் காலங்களிலும் மழையைப் பெறும் மாவட்டமாகும்.
- கடலோர மாவட்டங்களும், நீலகிரி மாவட்டங்களும் ஆண்டிற்கு சுமார் 1400 மி.மீட்டருக்கு மேல் மழைப்பெறுகிறது.
- ஆண்டின் மொத்த மழைஅளவில் குறைந்தளவு மழையை கோயம்புத்தூர் மாவட்டம் பெறுகின்றது.

| பருவங்கள் | தமிழ் பருவங்கள் | தமிழ் மாதங்கள் |
|---|---|---|
| கோடைக்காலம் (ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை) | இளவேனில், முதுவேனில் | சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி |
| மழைக்காலம் (ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை) | கார்காலம், குளிர்காலம் | ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை |
| குளிர்காலம் (டிசம்பர் முதல் ஏப்ரல் வரை) | முன்பனி, பின்பனி | மார்கழி, தை, மாசி, பங்குனி |


- ஆண்டு மழைப்பொழிவின் அளவைக் கொண்டு தமிழ்நாட்டின் மாவட்டங்களை ஐந்து மழை மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

**இயற்கைத் தாவரங்கள்**

- தமிழ்நாட்டின் காட்டுப் பகுதியின் விகிதாச்சாரம் 17 சதவீதமே ஆகும். தமிழகத்தின் காடுகள் மேற்கு மலைத் தொடர்மற்றும்பிறமலைத்தொடர்களிலும் காணப்படுகின்றன.
- தமிழ்நாடு 999 கி.மீ கொண்ட நீண்ட கடற்கரையைக் கொண்டு பாறை கடற்கரையாகம் உள்ளது.

| தென்மேற்கு பருவக்காற்று மழைப்பொழிவு | வடகிழக்கு பருவக்காற்று மழைப்பொழிவு | சூறாவளி மழைப்பொழிவு |
|---|---|---|
| காலம்: ஜீன் முதல் செப்டம்பர் வரை | அக்டோபர் முதல் நவம்பர் வரை | நவம்பர் மாதம் |
| நீலகிரி மாவட்டம், கன்னியாகுமாரி மாவட்டம், கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதி, தருமபுரி மற்றும் சேலம். | தமிழ்நாட்டின் கடலோர மற்றும் உள்நாட்டு சமவெளிப் பகுதிகள் | |
| பயன்பெறும் மாவட்டங்கள்: மேற்கு தொடர்ச்சி மழையின் மேற்குப் பகுதியில் இப்பருவமழை முதலில் தொடங்குகிறது. | கிழக்கு மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவையும், மத்திய மேற்கு மாவட்டங்கள் குறைவான மழைப்பொழிவையும் பெறுகிறது. | வங்கக்கடலின் தென் பகுதியில் ஏற்படுகின்ற வளி மண்டல அழுத்த வேறுபாட்டினால் தாழ்வு அழுத்தப் பகுதியில் உண்டாகி, அது மேன்மேலும் தீவிரமடைந்து சூறாவளியாக மாறுகின்றது. |
| சராசரி மழைப்பொழிவு: 150 cm. | சராசரி மழைப்பொழிவு: 150 cm – 200 cm. | |
| மழையின் அளவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்ல செல்ல குறைகிறது. | மழையின் அளவு கிழக்கிலிருந்து மேற்காக குறைகிறது. | வடகிழக்குப் பருவ மழையும், சூறாவளி மழைப்பொழிவும் சமமான அளவில் கடலோர மாவட்டங்களுக்கு மழைப் பொழிவை தருகின்றன. |
| 70% சதவீத மழைப்பொழிவு நீலகிரி மாவட்டத்தில் பெய்கிறது. | திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 100 cm முதல் 150 cm இப்பருவ காலத்தில் மழையைப் பெறுகின்றன. | |

| மழைப்பொழிவின் அளவு | மழைப்பொழிவின் பரவல் | மாவட்டங்கள் |
|---|---|---|
| மிகக்குறைவான மழைப்பொழிவு | 800 மி.மீக்கு கீழ் | கோயம்புத்தூர், திருப்பூர் |
| குறைவான மழைப்பொழிவு | 800 மி.மீ முதல் 1000 மி.மீ வரை | நாமக்கல், கரூர், தூத்துக்குடி, ஈரோடு, தருமபுரி, மதுரை, திருச்சி, பெரம்பலூர் அரியலூர், கிருஷ்ணகிரி. |
| மிதமான மழைப்பொழிவு | 1000 - 1200 மி.மீ வரை | புதுக்கோட்டை, விருதுநகர், சிவகங்கை, தஞ்சாவூர், சேலம், தேனி, வேலூர். |
| அதிக மழைப்பொழிவு | 1200 - 1400 மி.மீ வரை | திருநெல்வேலி, திருவண்ணாமலை, கன்னியாகுமரி |
| மிக அதிக மழைப்பொழிவு | 1400 மி.மீ க்கு மேல் | காஞ்சிபுரம், சென்னை, விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம், நீலகிரி |



- தமிழ்நாட்டில் உள்ள கழிமுகங்கள், ஈரநிலங்கள் சிறப்பு அம்சங்கள் காரணமாக அவை முக்கியமானதாகக் கருதப்படுகிறது.
- கடற்கரை சார்ந்த மண்டலங்களில், உலர்ந்த பருவநிலையும், வளமற்ற மண்ணும் சவுக்கு மரத்தை மட்டுமே வளர அனுமதிக்கின்றன. அதிக மழைப்பொழிவு பெறும் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு அயன மண்டலக்காடுகளும் காணப்படுகின்றன.

மன்னார் வளைகுடா:
1. எண்ணூர்
2. கூவம் அடையார்
3. உப்பனார்
4. வெள்ளார் கொல்லிடம்
5. காவேரி
6. அக்னியார்
7. கல்லார்
8. கடையார்

**காடுகளின் பரவல்**

- தமிழக மாவட்டங்களில் காடுகளின் பரவல் சதவீதம் சமமற்ற நிலையில் காணப்படுகிறது.
- சேலம் மாவட்டங்களில் அடர்த்தியான காடுகள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் **50 சதவீதத்திற்கும்** மேற்பட்ட பரப்பு காடுகளாகவே உள்ளன.
- மற்ற மாவட்டங்களில் காடுகள் **1 முதல் 5 சதவீதம் வரை** காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டின் காடுகளில் பல்வேறு வகையான மரங்கள் காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 5,88,000 ஹெக்டர் பரப்பளவில் சந்தன மரக் காடுகள் உள்ளன. கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன.

| | |
|---|---|
| இரப்பர் தோட்டங்கள் | கன்னியாகுமரி |
| கற்பூர மற்றும் தைல மரம் | நீலகிரி |
| தீக்குச்சி மரங்கள் | திருநெல்வேலி மற்றும் விருதுநகர் |
| மா, பலா, நாவல், வாழை | மாநிலங்களின் பல்வேறு மாவட்டங்களில் காணப்படுகிறது. |

**காடுகளின் வகைகள்**

| அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் | அயன மண்டல அகன்ற இலைக் காடுகள் | முட்புதர் காடுகள் |
|---|---|---|
| இவை பசுமை மாறாக் காடுகள் எனப்படுகின்றன. | இவை பருவக்காடுகள் எனப்படுகின்றன. | நீண்ட வறண்ட காலமும், குறைவான மழைப்பொழிவும் உள்ள இடங்களில் காணப் படுகின்றன. |

| | | |
|---|---|---|
| இலைகள் உதிர்காதவை | இலைகள் உதிர்த்து விடுகின்றன | ஆழமான வேர்களும், கனமானத் தண்டு அமைப்பும் மற்றும் சதைப் பற்றுள்ள இலைகள் |
| மழைப்பொழிவு: 200 cm | மழைப்பொழிவு: 100 cm – 200 cm | |
| காணப்படும் இடங்கள்: நீலகிரி, ஆனைமலைச் சரிவு, கடலோரப் பகுதிகள் | காணப்படும் இடங்கள்: மேற்குதொடர்ச்சிமலையின் கிழக்குச் சரிவுகளிலும் பெரும்பான்மையானவை. | இவை வறண்டகால நிலைகள் எனப்படுகின்றன. |
| மரங்கள்: எபோனி, தேக்கு, செம்மரம், கருங்காலி சராசரியாக 60 மீ உயரம் வரை வளரும். | | தாவரங்கள்: சிறிய குட்டையான மரங்கள், புதர்கள் |


| சதுப்பு நிலக்காடுகள் | மலையகக் கோடுகள் |
|---|---|
| இவை சதுப்புநிலக்காடுகள் (அ) ஓதக் காடுகள் எனப்படுகின்றன. | மழைப்பொழிவு அதிகமாகவுள்ள மலைச் சரிவுகளில் காணப்படுகின்றன. |
| **காணப்படும் இடங்கள்:** பிச்சாவரம், கோடியக்கரை, மற்றும் வேதாரண்யம் | **காணப்படும் இடங்கள்**: தமிழகத்தில் உள்ள ஆனைமலைப் பகுதியிலும், நீலகிரி மலையிலும் காணப்படுகின்றன. |
| இவை ரைசோபோரா தாவரக் குடும்பத்தை சார்ந்தவைகளாகும். | தாவரங்கள்: |
| **பரப்பளவு**<br>பிச்சாவரம் - 25 ச.கிமீ<br>கோடியக்கரை - 17 ச.கி.மீ | |



தமிழகத்தின் காடுகளின் வகைகள்


## தமிழகத்தில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயங்கள்

| பெயர் | மாவட்டம் |
|---|---|
| **I. பறவைகள் சரணாலயம்** | |
| 1. பழவேற்காடு ஏரி | திருவள்ளூர் |
| 2. வேடந்தாங்கல் | காஞ்சிபுரம் |
| 3. வெள்ளோடு | ஈரோடு |
| 4. காரைவெட்டி | பெரம்பலூர் |
| 5. உதயமார்த்தாண்டபுரம் | திருவாரூர் |
| 6. வடுவூர் | திருவாரூர் |
| 7. சித்திரங்குடி | இராமநாதபுரம் |
| 8. கூத்தன்குளம் | திருநெல்வேலி |
| 9. கோடியக்கரை | நாகப்பட்டினம் |
| 10. மேல செல்வனூர் - கீழ செல்வனூர் | இராமநாதபுரம் |
| 11. காஞ்சிரங்குளம் | இராமநாதபுரம் |
| 12. வேட்டன்குடி | சிவகங்கை |
| **2. தேசிய பூங்காக்கள்** | |
| 1. இந்திராகாந்தி | கோயம்புத்தூர் |
| 2. முதுமலை | நீலகிரி |
| 3. முக்குர்த்தி | நீலகிரி |
| 4. கிண்டி | சென்னை |
| 5. மன்னார் வளைகுடா | இராமநாதபுரம் |
| **3. வனவிலங்குகள் சரணாலயம்** | |
| 1. இந்திராகாந்தி | கோயம்புத்தூர் |
| 2. முதுமலை | நீலகிரி |
| 3. கோடியக்கரை | நாகப்பட்டினம் |
| 4. திருவில்லிப்புத்தூர் | விருதுநகர் |
| 5. வல்லநாடு | தூத்துக்குடி |
| 6. கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 7. களக்காடு | திருநெல்வேலி |
| 8. முண்டந்துரை | கன்னியாகுமரி |
| 9. வடக்கு காவேரி | தர்மபுரி |
| 10. கங்கை கொண்டான் | திருவாரூர் |
| **4. உயிர்கோள இருப்புகள்** | |
| 1. மன்னார் வளைகுடா | இராமநாதபுரம் |
| 2. நீலகிரி | நீலகிரி |
| 3. அகத்தியர் மலை | திருநெல்வேலி - கன்னியாகுமரி |




தமிழ்நாடு தேசியப்பூங்கா, பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம்

# தமிழ்நாட்டின் மக்கள் தொகை




மக்கள் தொகை பரவல்

## மக்கள் தொகை


- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, அந்நாட்டில் வாழும் மக்களே மிகப்பெரிய வளமாகும். ஒரு பகுதியில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையே மக்கள்தொகை ஆகும்.

## டெமோகிராபி (Demography)

- மக்கள்தொகை குறித்த பாடங்களைப் படிப்பதை மக்கட் புவியியல் என்கிறோம்.

## மக்கள் தொகை வளர்ச்சி

- 1951 முதல் 2001 வரை 50 ஆண்டுகால இடைவெளியில் தமிழ்நாட்டின் மக்கள் **இரு மடங்காக** உயர்ந்துள்ளது.




மக்கள் தொகை கணக்கீடுகள்

- இந்த **பத்து ஆண்டுகளில்** மொத்த மக்கள்தொகை வளர்ச்சியானது **15.61 விழுக்காடாக** உள்ளது.
- 2011-ம் ஆண்டு இந்திய மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை **5.96 விழுக்காடு** ஆகும்.

> மாநிலங்கள் மற்றும் யூனியன் -பிரதேசங்களுக்கு இடையே மக்கள் தொகையின் அடிப்படையில் தமிழ்நாடு **7வது இடத்தில்** உள்ளது.

- தமிழக மொத்த மக்கள்தொகை - 7.2 கோடி
- நகர மொத்த மக்கள்தொகை - 3.49 கோடி
- கிராம மக்கள்தொகை - 3.7 கோடி

- 2011-ம் ஆண்டு தமிழ்நாட்டின் பிறப்பு மற்றும் இறப்பு வீதம் முறையே 15.9 மற்றும் 7.4 விழுக்காடு ஆகும்.
- 2011-ம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி இளம் சிறார் உயிரிழப்பு விதமானது 1000 உயிர் பிறப்பிக்கு 22-யை அமைந்துள்ளது.
- 1976-ம் ஆண்டு சட்டத்திருத்த ஆணையின் படி தமிழ்நாட்டில் உள்ள 76 SC க்கள், SC & ST என்று அறிவிக்கப் பட்டனர்.

**தமிழக மக்கள்தொகை கணக்கெடுப்பு - 2011**

- தமிழக மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநர் - **கோபால கிருஷ்ணன்**
- மொத்த மக்கள்தொகை - 7, 21, 38, 958 பேர் ஆண்கள் - 3, 61, 58, 871 பேர் பெண்கள் - 3, 59, 80, 087 பேர்
- இந்தியாவின் மக்கள்தொகையில் தமிழகம் 7வது இடம்

**மக்கள் தொகை (Population)**

- முதலிடம் - சென்னை (46, 81, 087 பேர்)
- கடைசியிடம் - பெரம்பலூர் (56, 64, 511 பேர்)

**பாலின விகிதம் (Sex Ratio)**

- இந்தியாவின் பாலின விகிதத்தில் தமிழகம் **2-வது இடம்**
- தமிழகத்தில் 1000 ஆண்களுக்கு **995 பெண்கள்**
- முதலிடம் - நீலகிரி (1000 / 1041 பேர்)
- கடைசியிடம் - தர்மபுரி (1000 / 946 பேர்)

**தமிழக எழுத்தறிவு**

- இந்தியா தமிழகம் எழுத்தறிவில் **8-வது இடம்**
- தமிழகத்தின் எழுத்தறிவு சதவீதம் - 80.33%
- முதலிடம் - கன்னியாகுமரி (93.9%)
- கடைசியிடம் - தர்மபுரி (64.7%)

**மக்கள் தொகை அடர்த்தி**

- இந்தியாவில் தமிழகம் **6-வது இடம்**
- முதலிடம் - சென்னை (26, 903 பேர்/1 ச.கி.மீ)
- கடைசியிடம் - நீலகிரி (288 பேர் / 1 ச.கி.மீ)

**பரப்பளவு**

- தமிழகத்தின் பரப்பளவு - 1, 30, 058 ச.கி.மீ
- முதலிடம் - விழுப்புரம்
- கடைசியிடம் - சென்னை

**தமிழ்நாட்டின் மக்கள் தொகை அமைப்பு**

- 2011-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில்
  - இந்து மதத்தவர்கள் - 88%
  - முஸ்லீம் இனத்தவர்கள் - 5.5%
  - கிறிஸ்துவர்கள் - 6%
  - மீதமுள்ள இனத்தவர்கள் - 0.5%

தமிழ்நாடு மக்கள்தொகையில், SC மக்கள்தொகை ஏறக்குறைய **20 விழுக்காடு** ஆகும்.

**வேலைவாய்ப்பு**

- 2000-ம் ஆண்டில் மாநிலங்களில் வேலையற்றோரின் வீதம் **2.4 விழுக்காடு** ஆகும். 2011-12ல் தமிழ் நாட்டின் வேலையற்றோரின் வீதம் **2.1 விழுக்காடு** ஆகும். தமிழ்நாட்டில் வேலை செய்பவர்களின் மொத்த எண்ணிக்கையில், விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் **42.1 ளவிழுக்காடு** ஆகும். 2011ல் உள்ள **49.3 விழுக்காட்டை** ஒப்பிடுகையில் குறைந்து உள்ளது.

**மக்கள்தொகை அடர்த்தி**

- தமிழ்நாட்டின் மொத்தப்பரப்பு - 1, 30, 060 ச.கி.மீ
- தமிழ்நாட்டின் மக்கள்தொகை செறிவு ஒரு சதுரகிலோமீட்டருக்கு 555 ஆக உள்ளது. இது தேசிய சராசரியான ஒரு ச.கி.மீட்டருக்கு 382 என்பதை விட அதிகம். 2001-ம் ஆண்டில் தேசிய சராசரி 324 ச.கி.மீட்டராக இருக்கையில் தமிழ்நாட்டின் செறிவு ஒரு ச.கி. மீட்டருக்கு 480 ஆக இருந்தது.

உயர் அளவு செறிவு:

1. சென்னை - 26553
2. கன்னியாகுமரி - 1111
3. திருவள்ளூர் - 1098
4. காஞ்சிபுரம் - 892
5. மதுரை - 819

**உயர்நிலை மக்கள் தொகை வளர்ச்சி**

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | 38.95% |
| திருவள்ளூர் | 35.33% |
| திருப்பூர் | 29.11% |
| கிருஷ்ணகிரி | 20.41% |
| கோயம்புத்தூர் | 18.56% |

# தமிழ்நாட்டின் வாணிபம்


முக்கிய வாணிபங்கள்

### வர்த்தகம்

பொருட்களின் பரிமாற்றம் என்பது மட்டும் அல்லாமல் சேவை பரிமாற்றம் அடங்கியதாகும்.

வர்த்தகம் என்பது இரண்டு வகைப்படும்.

1. உள்நாட்டு வர்த்தகம்
2. வெளிநாட்டு வர்த்தகம்

### 1. உள்நாட்டு வர்த்தகம்

- ஒரு நாட்டின் உள்பகுதிகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் உபரிப் பொருட் களின் பரிமாற்றம் உள்நாட்டு வணிகம் எனப்படுகிறது.
- இவை தாய் நிலத்தின் வணிகம் என அழைக்கப்படுகிறது.
- சாலை வழிகளும், இரயில் பாதைகளும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த வகை வணிகத்தில் தேசிய செலாவணி உபயோகிக்கப்படுகிறது.

### 2. வெளிநாட்டு வர்த்தகம்

- வான்வழிப் போக்குவரத்து சாலை மற்றும் நீர்வழிப் போக்குவரத்துகளின் மூலமாக வெளி வர்த்தகம் நடைபெறுகிறது.

### தமிழ்நாட்டின் வர்த்தகம்

- மாநிலத்தில் பொருட்களை விற்பனை செய்வதற்காக பல்வேறு வியாபார சங்கங்களும் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் மாவட்டம் தோறும் நிறுவப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு வியாபார சங்கமும் பயனாளிகளால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுக்கின்றனர்.
- பொருட்களின் விற்பனையைக் கையாளு வதற்கும், நியாயமான விலையை நிர்ணயம் செய்வதற்கு அமைக்கப்பட்ட சுமார் 21 வியாபாரச் சங்கங்கள் தமிழகம் எங்கும் இயங்கி வருகின்றன.

### விற்பனை மையங்கள்

- மூன்று வகைகளாக வகைப்படுத்தப் படுகிறது. அவை
  1. முதன்மை விற்பனைக் கூடங்கள்
  2. இரண்டாம் விற்பனைக் கூடங்கள்
  3. முறைப்படுத்தப்படாத விற்பனைக் கூடங்கள்

| முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் | முக்கிய இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| 1. துணி வகைகளும், ஆயத்த ஆடைகளும்<br>2. மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் இரசாயனப் பொருட்கள்<br>3. தோல் மற்றும் தோல் பொருட்கள்<br>4. இயந்திரப் பொருட்கள் மற்றும் டீசல் வகைகள்<br>5. தாதுக்கள், கனிமங்கள்<br>6. மென்பொருள் மற்றும் மின்னனுப் பொருட்கள் | 1. எரிபொருள் தாதுக்கள் மற்றும் எண்ணெய்<br>2. மின்சார இயந்திரக் கருவிகள் மற்றும் உதிரி பாகங்கள்<br>3. இரும்பு, எஃகு மற்றும் அதன் பொருட்களும்<br>4. இயற்கை மற்றும் செயற்கை முத்துக்கள்<br>5. தாவர இரசாயனப் பொருட்கள்<br>6. பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் |

ஈரோடு மாவட்டத்தில் அதிகப்படியான 34 முறைப்படுத்தப்பட்ட விற்பனை கூடங்களைக் கொண்டுள்ளது.

### உழவர் சந்தை திட்டம்

- விவசாயப் பொருட்களின் நேரடி கொள்முதல் மற்றும் விற்பனைக்காகவும், இடைத்தரகர்கள் இன்றி உற்பத்தி யாளர்களும், நுகர்வோரும் பயனடையும் வகையில் **1999-ம்** ஆண்டு முதன் முதலில் **மதுரையில்** உழவர் சந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தற்போது சுமார் 103 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. இத்திட்டம் நாளொன்றுக்கு சுமார் 7526 விவசாய உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை 2,71,685 நுகர்வோருக்கு இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்கிறது.

**தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் சங்கம்**

- **காஞ்சிபுரத்தை** தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.
- இவ்வமைப்பு பட்டுநூல் கச்சா பட்டை பெற்று, கைத்தறி கூட்டுறவு.

**தொழில் கூட்டுறவு சங்கம்**

- தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் வணிகத்துறையின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு கிராம தொழில் முனை வோருக்கும், கைவினைஞர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும், தேவையான விற்பனை வசதிகளைச் செய்து வருகின்றது.

### SIPCOT

- தமிழ்நாட்டின் மாநில தொழில் வளர்ச்சி கழகம் ஆகும்.
- தொழில் வளர்ச்சிக்கும், விற்பனை ஊக்குவிக்கும் வகையில் தொழில் மையங்கள் மற்றும் பூங்காங்களை அமைத்துள்ளது.

வர்த்தகம் என்பது வளர்ச்சியை ஊக்குவிக்கும் இயந்திரமாகும்.

# தமிழ்நாடு – தொழில்கள்



### வேளாண் தொழில்

- வேளாண்மை நம் நாட்டின் முக்கியத் தொழிலாகும்.
- தமிழ்நாட்டில் 70 சதவீத மக்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர்.
- தமிழகத்தின் மாநில வருவாயில் 40 சதவீதம் வேளாண் தொழிலில் இருந்து கிடைக்கிறது. இத்தகைய வேளாண் தொழிலிலிருந்து நல்ல மகசூல் பெற தமிழ்நாட்டில் நீர்பாசனம் தேவையாகிறது.

### கால்வாய் பாசனம்

- காவிரி டெல்டா, பாலாறு, பெண்ணை யாறு வடிநிலப் பகுதிகளிலும், அமராவதி, வைகை, தாமிரபரணி, பரம்பிக்குளம், ஆளியார் வடிநிலப்பகுதிகளிலும் இப்பாசனம் பின்பற்றப்படுகிறது. ஆறுகளின் இரு தரப்பகுதிகளிலும் கால்வாய்கள் அமைக்கப்படுகின்றன.
- ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி நீரைத் தேக்கி வைத்து கால்வாய்களின் வழியாக வயல்களுக்கு நீர் பாய்ச்சப் படுகிறது. மாநிலத்தின் நீர்பாசனப் பரப்பில் 33 சதவீதம் கால்வாய் பாசன முறையில் பாசனம் நடைபெறுகிறது.
- இதில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகள் பாதியளவு பரப்பை உள்ளடக்கியவை.
- கால்வாய் பாசனம் கடலூர், திருச்சி, கோவை, ஈரோடு, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறுகிறது.

### வேளாண்மை சார்ந்த தொழில்கள்

- வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை கச்சாப் பொருளாகக் கொண்டு பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள் அடங்கும். இதில் முக்கிய மானவை பருத்தி நெசவாலைகள். சர்க்கரை ஆலைகள் உணவுப் பதப் படுத்தும் ஆலைகள் ஆகும்.

| நீர்பாசனம் | ஏரிப்பாசனம் |
|---|---|
| தமிழ்நாட்டில் மழை ஆண்டு முழுவதும் இல்லாமல் சில பருவங்களில் மட்டுமே பொழிகிறது. அதிக ஆவியாதலும் நடைபெறுகிறது. | இயற்கையான பள்ளங்களிலோ, செயற்கையாகப் பள்ளங்களை வெட்டியோ மழைநீர் தேக்கி வைக்கப்படுகிறது. இவை ஏரிகள் எனப்படுகின்றன. |
| எனவே பயிரை நல்ல முறையில் உற்பத்தி செய்ய பயிருக்குத் தேவையான நீரைத் தர நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது. | ஏரிகளிலிருந்து பயிர் களுக்கு நீர்பாசனம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் சுமார் 3900 ஏரிகள் உள்ளன. |
| தமிழகத்தில் சுமார் 50 சதவீதம் பயிர்நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது. இதில் மூன்றில் இரு பங்கு ஆறு, ஏரி, குளம் போன்ற நிலமேல் நீர் நிலைகளிலிருந்தும் மூன்றில் ஒரு பங்கு நிலத்தடி நீரை எடுத்து நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. | மாநிலத்தில் நீர்பாசனம் பெறும் பயிர் நிலங்களில் 22 சதவீதம் ஏரிப் பாசனத்தின் மூலம் நீர்ப்பாசனம் பெறுகின்றன. தமிழ்நாட்டின் வட பகுதியில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டங்களிலும், இப்பாசன முறை பின்பற்றப்படுகிறது. |

## நெசவுத் தொழிற்சாலை

- இந்திய நெசவுத் தொழில்துறையில் பருத்தி இழை உற்பத்தி, நெசவுத்துணி, உள்ளாடை மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தியில் தமிழ்நாடு பெரும்பங்கு வகிக்கின்றது.
- பருத்தி ஆலைகள், பருத்திச் செடியிலிருந்து பருத்தியை பிரித்தெடுத்து, நூற்களாகத் தயாரித்துப் பின்னர் சாயம் ஏற்றித்தறியில் துணிகளாக நெய்து வடிவமைத்து சந்தைக்கு அனுப்புவது வரை நெசவுத் தொழிலாகும்.
- இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 25 விழுக்காடு தமிழகத்தின் பங்களிப் பாகும்.



**நெசவுத் தொழில் பகுதிகள்**

1. கோயம்புத்தூர்
2. பொள்ளாச்சி
3. உடுமலைப்பேட்டை
4. திருப்பூர்
5. காரமடை
6. ஈரோடு
7. புவானி
8. திண்டுக்கல்
9. திருமங்கலம்

10. மதுரை
11. பாளையங்கோட்டை
12. பாபநாசம்

- கோயம்புத்தூர் மண்டலம் மிகப்பெரிய அளவில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தால் இதனை "**தென் இந்தியாவின் மான் செஸ்டர்**" என்று அழைக்கின்றனர்.
- திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மூன்றுமாவட்டங்கள் நெசவுத் தொழிலின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிப்பதால் இப்பகுதி "**தமிழ்நாட்டின் நெசவும் பள்ளத்தாக்கு**" என்று பெயர்.
- திருப்பூர் தமிழ்நாட்டின் 70மூ உள்ளாடை ஏற்றுமதி செய்கிறது. ஆடை மற்றும் படுக்கை விரிப்புகளின் உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முன்னிலை வகிக்கிறது.

## பட்டு நெசவுத் தொழில்

- நாட்டின் பட்டு நெசவுத் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.

#### பட்டு நெசவுத் தொழில் பகுதிகள்

1. சேலம், 2. தர்மபுரி,
3. காஞ்சிபுரம், 4. ஆரணி,
5. திருப்புவனம், 6. கும்பகோணம்,
7. மதுரை, 8. இராசிபுரம்

- ஓசூரில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி மையம் விவசாயிகளுக்கு, விவசாயத்துடன், பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி அளித்து ஊரகத்தின் உற்பத்தி திறனை உயர்த்த வகை செய்கிறது.

#### செயற்கை இழை ஆடை உற்பத்தி பகுதிகள்

1. மேட்டூர், 2. மதுரை, 3. இராமநாதபுரம்

## சர்க்கரை ஆலைகள்

- இந்தியாவின் 10 சதவீத சர்க்கரை உற்பத்தி தமிழ்நாட்டில் உற்பத்தி யாகிறது.
- கரும்பிலிருந்து சர்க்கரை, வெல்லம், கழிவுச் சாறிலிருந்து (Molasses) சாராயம் (spirit) எனப் பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.
- கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் போன்ற பொருட்களும் தயாராகின்றன.
- காலநிலை, அதிக மகசூலைத்தரும் பொருத்தமான மண்வளம் பாசன வசதி, போக்குவரத்து, சந்தை மற்றும் ஒழுங்குப் படுத்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் போன்ற ஆதாரமான காரணிகளால் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் பல இடங்களிலும் பரவி இருக்கின்றன. தமிழ்நாட்டில் 42 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவு சங்கமும் 3 அரசாலும், 23 தனியாராலும் நிர்வகிக்கப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 26 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது.
- விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்கள் சர்க்கரை ஆலைகள் அதிகமுள்ள மாவட்டங்களாகும்.

1. கோத்தாரி - சதமங்கலம்
2. ராஜஸ்ரீ - செம்மேடு
3. தரணி - கலையநல்லூர்
4. சக்தி - மொடக்குறிச்சி
5. எம்.ஈ.சுகர் - இடைக்கல்
6. ஸ்ரீஅம்பிகா - மன்ஜினி
7. தனலெட்சுமி - ஸ்ரீனிவாசன்
8. பன்னாரி அம்மன் - கொலுந்தன்பட்டு
9. அரியலூர்
10. விழுப்புரம்
11. விழுப்புரம்
12. ஈரோடு
13. திருநெல்வேலி
14. சேலம்
15. பெரம்பலூர்
16. திருவண்ணாமலை

**உணவு பதப்படுத்தும் தொழில்**

- தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக வளர்ந்திருக்கிறது. மாம்பழ இரசம் பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப் படுகிறது.
- திடீர் உணவுப் பொட்டலங்கள், மற்றும் உணவிற்கு தேவையான மசாலாப் பொடிகள், தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விநியோக்கப்படுகிறது.

**காகிதத் தொழிற்சாலைகள்**

- மென் மரங்களையும், கரும்புச் சக்கையையும்,கச்சாப்பொருளாகப்பயன் படுத்தி காகிதம் தயாரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் காகித உற்பத்தியில் ஆந்திராவிற்கு அடுத்தபடியாக தமிழகம் இரண்டாம் நிலையில் உள்ளது. நாட்டின் 12 சதவீத உற்பத்தி தமிழ்நாட்டிற் குரியது.
- காகித உற்பத்திக்கு சோடா, சோடா உப்பு, குளோரின் கந்தகம், மரக்கூழ் அதிகளவில் தண்ணீர் ஆகியவை இதர தேவைகளாகும்.

**காகிதத் தொழிற்சாலைகள்**

1. புக்காத்துறை (காஞ்சிபுரம்)
2. பவானிசாகர்
3. பள்ளிப்பாளையம்
4. புகளூர்
5. பரமத்தி வேலூர்
6. கோவை
7. உடுமலைப் பேட்டை
8. தொப்பம்பட்டி
9. நிலக்கோட்டை

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) :**

- உலகவங்கியின் உதவியுடன் 1979ம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் புகளூ ருக்கு அருகாமையில் நிறுவப்பட்டது. ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு காகிதமாகத் தயாரிப்பதில் உலகிலேயே மிகப்பெரிய ஆலையாக இந்த ஆலை திகழ்கிறது. செய்தித்தாள் தவிர காகிதம், தொலைபேசி கையேடு, கணினி அச்சுத்தாள், சுவரொட்டி தாள்கள் மற்றும் நகல் அச்சுத்தாள் உற்பத்தியிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது,

**தோல் பதனிடும் தொழில்**


1. ஆடு, மாடு தோல்களை பதனிடும் கலையானது, மிகப் பழங்காலம் முதலே காணப்படுவதாகும்.
2. இத்தொழிற்சாலை மிகவும் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
3. இந்தியாவில் 70% தோல் பதனிடும் ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன.
4. இந்தியாவின் மொத்த உற்பத்தியில், ஏற்றுமதி 60% தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதியாகிறது.

**தோல் பதனிடும் தொழிற்சாலைகள்**

1. சென்னை
2. வேலூர்
3. ஆம்பூர்
4. இராணிப்பேட்டை
5. வாணியம்பாடி
6. திண்டுக்கல்
7. திருச்சி

**இரசாயன தொழிற்சாலைகள்**

- இரசாயனம், மருந்து, உரம், பெட்ரோலியப் பொருட்கள், சோப்பு அழகுப்பொருட்கள், செயற்கை ரப்பர், பிளாஸ்டிக் உற்பத்தி ஆகியவை இரசாயன தொழில்களில் உள்ளடங்கியதாகும்.
- யூரியா, நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாசியம் போன்ற உரங்களையும், பூச்சி மருந்துகளையும், ஸ்பிக், என். எஸ்.பி, எப்.சி.ஐ. ஆகியவைகள் தயாரிக்கின்றன.
- தமிழ்நாட்டில் சென்னை அருகில் மணலி, கடலூர், மனங்குடி (நாகப்பட்டினம்) மற்றும் தூத்துக்குடியில் காணப்படுகிறது.



**ஸ்பிக்**

இந்தியாவிலேயே மிக அதிகளவில் உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆகும். இந்நிறுவனம் 12 மாநிலங்களுக்கு, தன் 4000 மையங்கள் மூலம் உரம் வினியோகம் செய்கின்றது. ஒரு வருடத்திற்கு இரண்டு மில்லியன் டன் உரத்தை இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்றது.

**சிமெண்ட் தொழிற்சாலை**

- தேசிய அளவில் சிமெண்ட் உற்பத்தியில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சுமார் 10% சிமெண்ட் உற்பத்தி செய்கிறது.
- சுண்ணாம்புக்கல், டாலமைட், ஜிப்சம், களிமண், நிலக்கரி ஆகியவை இத்தொழிற்சாலையின் மூலப் பொருட்களாகும். அத்தனைப் பொருட்களும் தமிழ்நாட்டில் அகழ்ந்து எடுக்கப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட் கூட்டுறவு நிறுவனம்**

தமிழக அரசால் நிர்வகிக்கப்படும் பொதுத்துறையைச் சார்ந்தது ஆகும். இங்கு இந்திய தர நிர்ணயத்தைக் காட்டிலும், மிக உயர்ந்த தரத்தில் இரு வகையான சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது.

அவை

1. சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்ட்
2. சூப்பர் ஸ்டார் சிமெண்ட்

**தமிழ்நாட்டின் சிமெண்ட் உற்பத்தி மையங்கள்**

1. சங்ககிரி
2. மதுக்கரை
3. புலியூர்
4. குன்னம்
5. செந்துறை
6. அரியலூர்
7. டால்மியாபுரம்
8. மானாமதுரை
9. துலுக்கப்பட்டி
10. ஆலங்குளம்
11. சங்கர் நகர்
12. தாலையூத்து

### மோட்டார் வாகன தொழிற்சாலைகள்

- பெட்ரோல் அல்லது டீசல் மூலம் இயங்கும், இருசக்கர, மூன்று சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெரும் நகரங்களான சென்னை, திருச்சி, கோவை மற்றும் வேலூர் பகுதிகளில் அடர்ந்து காணப்படுகின்றன.
- சென்னையை "**தமிழகத்தின் டெட்ராய்ட்**" என்று சொல்லும்படியாக வாகன உதிரிபாகங்களை தயாரிக்கிறது.
- இரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை, சென்னையில் பெரம்பூரில் உள்ளன. இது மத்திய அரசுக்குச் சொந்தமானதாகும்.
- தமிழ்நாட்டின் பொதுவளர்ச்சி குறியீட்டில் (GDP) 8 சதவீதம் மோட்டார் வாகனத் தொழிலில் மூலம் கிடைக்கிறது.
- இந்தியாவின் 21 சதவீத பயணிகள் கார் மற்றும் 33 சதவீத வணிக வாகனங்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிறது.

### உலோகத் தொழிற்சாலைகள்

- இரும்பு எஃகு தகடுகள், கனரக இயந்திரங்கள் மற்றும் இயந்திரக் கருவிகள், ஊர்திகள், தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் மின் அணுத்தொழிற்சாலைகள் இவற்றுள் அடங்கும்.
- இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் சேலம் மற்றும் வேலூர் ஆகியப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இரும்புத் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பழனி, தஞ்சை ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் இருந்து எவர்சில்வர் தயாரிக்கும் பட்டறைகள் தமிழகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன.

••••••

# தமிழகத்தில் மின்னாளுகை

### தொலைநோக்கு பார்வை

நல்லாளுமை செய்யும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பக்கரவிகளின் வாயிலாக அரசாங்கத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை, திறன்களை மேன்படுத்துதல் மற்றும் மக்களுக்கு இணக்கமான வகையில் வெளிப்படைத் தன்மையுடன் திறன் மிகுந்த சேவைகளை வழங்குவதே இதன் நோக்கம்.

### குறிக்கோள்

தகவல் தொழில்நுட்பத்தின் கருவிகளை பயன்படுத்தி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, குறைந்த செலவிலும், அளவிடக்கூடிய நிர்வாகத் தீர்வுகளை வழக்குவதும் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain) செயற்கை நுண்ணறிவு (Artificial Interlligence) / இயந்திர கற்றல் (machine Learning) பொருட்களின் இணையம் (IoT), ஆளில்லா குருவிமானங்கள் (Drones), தரவுப்பகுப்பாய்வு (Data Analytics), மிகைநிகர் உண்மை / மெய்நிகர் (Augmented Reality / Virtual Reality) ஆகியவற்றை முழுமையாக பயன்படுத்தி அரசின் சேவைகளை திறம்பட வழங்குவதே தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் குறிக்கோளாகும்.

### நோக்கம்

- தமிழக அரசின் முதன்மைத் தொழில்நுட்ப மற்றும் புதுமையான அணுகுமுறைகளை உருவாக்கும் அமைப்பாக விளங்குதல்.
- தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு நிறுவனத்தினையும் காகிதப் பயன்பாடற்ற, இடையூறுகளற்ற, வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் நேரடி தொடர்புகளற்ற நிறுவனங்களாக மாற்றுதல்.
- அரசின் சேவைகளை விரைவாக வழங்குவதன் மூலம் அச்சேவைகளைப் பெறும் பயனாளிகளுக்கு அதன் எளிமைத் தன்மையை உணரச் செய்தல்.
- மாநிலத்தில் மென் உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி மாநில பொருளாதாரத்தின் போட்டி தன்மையை ஊக்குவித்து, மாநிலத்தை எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப தயார்படுத்தும் ஊக்குவிப்பானாக செயல்படுதல்.
- அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவுனங்களின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்வதில் ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் உதவுதல்.
- பல்வேறு அரசுத் துறைகளின் பொதுவான சேவைகளின் தேவையை கண்டறிந்து, குறைந்த செலவில் தரமான தீந்வுகளை வழங்குதல்.
- தமிழ்நாடு மின்னாளுமை முகமையினைப் போன்ற ஒத்த நோக்கமுடைய அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOs). சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற

நிறுவனங்களுடன் இணைந்து, பகிர்ந்துகொள்ளத்தக்க வகையிலான ஆளுமையை உருவாக்குதல்.

- ஆளுமை தொடர்பான சிக்கல்களுக்கு புதுமையான மற்றும் செயல்படுத்தக்கூடிய தீர்வுகளை அளித்திடும் வகையில், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொடக்கநிலை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் திறமையான தனிநபர்களை கொண்ட ஒரு துடிப்பான சூழலை உருவாக்குதல்.
- நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்த, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத்தில் அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்.
- மின்னாளுமை குறித்த பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடத்துதல்.
- தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பயிலரங்க நடவடிக்கைகள், செய்திமடல்கள் போன்றவற்றை வெளியிடுதல்.

**மின் ஆளுமை கொள்கை (e – Governance Policy)**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மின் ஆளுமைக் கொள்கை 02.01.2018 அன்று வெளியிடப்பட்டது.

**இக்கொள்கையின் நோக்கங்கள்:**

மாநில அரசின் பல்வேறு துறைகளில் மின் ஆளுமை செயல்பாடுகளுக்கு வழிகாட்டுதல். கணினி, மென்பொருள் மற்றும் தடையற்ற இடைசெயல்பாட்டு மற்றும் பெயர்வுத்திறனை உறுதி செய்தல். குடிமக்களுக்கு இணையவழி சேவைகளை செயல்திறனுடன் வழங்குவதை ஊக்குவித்தல்.

மேலும், அரசு துறைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் வன்பொருள் அதாரங்களை பகிர்வு செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதலை எளிதாக்குதல், பிராட்பேண்ட் இணைப்புகளின் ஊடருவலை அதிகரித்தல். அனைத்து மின் ஆளுமை பயன்பாடுகள் / இணையதளங்கள் / வலைதளங்களில் தமிழ் மொழி மற்றும் தமிழ் ஒருங்குறித்தரநிலை பயன்பாட்டை ஊக்குவித்தல். மிக குறைந்த செலவில் அரசு குடிமக்கள் (G2G), அரசு ஊழியர்கள் (G2E), அரசு அரசு (G2G) மற்றும் அரசு வணிகம் (G2B) சேவைகள் வழங்குவதற்கு ஒரு ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குதல்.

**சில மின் ஆளுமை திட்டங்கள்**

- ❖ மின் மாவட்ட திட்டம்
- ❖ மின்னஞ்சல் தீர்வு
- ❖ மின் அலுவலகம்

- e-Taal திட்டம்
- உள்ளங்கை சான்றிதழ் திட்டம்
- அம்மாசெயலி
- e-மடல் திட்டம்
- நமது அரசு
- e-சேவை மையங்கள்
- ஆதார் நிரந்தர பதிவுமையம்
- Star 2.0 (பதிவுத்துறை)
- உழவன் செயலி
- மாநில சேவை இணையதளம்
- மின் கையொப்பம்

**1. மின் மாவட்ட திட்டம் (e-District)**

மின் மாவட்ட திட்டமானது தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் மாநில அளவில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இது மாநில அளவில் செயல்படும் குறிக்கோள் திட்டங்களில் ஒன்றாகும். மின் மாவட்ட திட்டம் பொதுமக்களை மையப்படுத்திய சேவைகளை, இ.சேவை மையங்கள் மூலம் இணைய வழியில் வழங்குகிறது.

மத்திய அரசு, மின் மாவட்ட திட்டத்தைச் செயல்படுத்த மாதிரி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டைத் தேர்வு செய்தது. தொடக்கத்தில், மின் மாவட்ட மென்பொருள் உருவாக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் / மிகவம் பிற்படுத்தப்பட்டோர் / தசீர் மரபினர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் நலத்துறையின் கல்வி உதவித்தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

**2. மின் அலுவலகம் (e – Office)**

- இது ஒரு செயலி அல்லது மென்பொருள்
- TEEGA செயல்படுத்துகிறது
- அரசு அலுவலகங்களிடையே காகித பயன்பாட் குறைக்க
- துறைகளிடையே கோப்பு பரிமாற்றத்தை குறைத்தல்
- அரசு துறைகளில் வெளிப்படைத் தன்மை உருவாக்கல்
- அரசு அலுவலரிடையே பொடுருப்புடையை உருவாக்கல்"தகவல் தொழில் சட்டதுறையில்" தற்போது முன்மாதிரியாக செயல்படும்

**3. அரசு e-சேவை மையங்கள்: 2015 – 659 மையங்கள்**

- 2014 (சென்னையில் 1st )
- மின்மாவட்டத் திட்டத்தின் மூலம் சான்றிதழ்களை வழங்க
- மக்களின் சிரமத்தினை குறைக்க
- "அரசு கேபிள் TV" இதனை கண்காணிக்கிறது.

**4. E – Taal திட்டம்**

- Elecronic Transaction Aggregation and Analysis Layer.
- மத்திய மற்றும் மாநில அளவிலான திட்டங்களில் மேற்கொண்ட மின் பரிவர்த்தனை புள்ளி விவரங்களை காட்டும் இணையத்தரவு தளமாகும்.
- 2017 – 14 கோடி பரிவர்த்தனைகள்
- 2018 – 38 கோடி (இந்தியாவில் 4வது)

**5. உள்ளங்கை சான்றிதழ் திட்டம் : (Tiny Url)**

- 2017-ல் துவக்கம்
- மின்மாவட்ட திட்டத்தின் மூலம் வழங்கப்படும் 209 வகை சான்றிதழ்களை பொதுமக்கள் வீட்டிலிருந்தபடியே பெற்றுக்கொள்ளும் வசதி.
- பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு இணைய முகவரி சுருக்கம் அனுப்பப்படும்.
- மக்கள் திறன்பேசி மூலம் அதை எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் பதவிரக்கம் செய்துகொள்ளலாம்.

இவை அனைத்து திட்டங்களுமே மத்திய அரசின் மின் ஆளுமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

**தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance)**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, தமிழ்நர்டு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975இன் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி அமைப்பாகும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) ஆளுமை குழுவானது தகவல் தொழில்நுடபவியல் துறை செயலாளர்தலைமையில் 11 குறிக்கோள் திட்டத் துறைகளின்செயலாளர்களை உறுப்பினர்களாகவும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலரை உறுப்பினர் செயலராகவும், தேசிய தகவலியல் மையம் (NIC) சென்னையின் மாநில தகவலியல் அலுவலரை முதன்மை தொழில்நுட்ப அலுவலராகவும் கொண்டுள்ளது.

**நிறுவன கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு**

தகவல் தொழில்நுடபத்தின் மூலம் பொதுமக்களின் தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு துறைகள் பல்வேறு திட்டஙகளைச் செயல்படுத்தியுள்ளது. ஒருங்கிணைந்த பாதுகாப்பான தகவல் தொழில்நுட்ப சூழலை உருவாக்கி அவற்றிற்கு வழிகாட்டவும், நிலைப்படுத்தவும் நிறுவனத்தை வலுப்படுத்துவது அவசியமாகிறது. அதனைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத் தொகுப்பில் (IT Cadre) 98 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தேர்வாணையத்தின் வாயிலாக 60 உதவி கணினி பகுப்பாய்வாளர்கள்/உதவி கணினி பொறியாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அரசுத் துறைகளுக்கான "மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது"**

அரசுத் துறைகளில், மின் ஆளுமையின் உபயோகத்தினை, உரிய வகையில் அங்கீகரித்து, ஊக்குவிக்கும் வகையில் "மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது" ஆண்டுதோறும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள், அரசுத் துறைகள் மற்றும் மாவட்டங்களிடமிருந்து கீழ்காணும் பிரவுகளில் பெறப்பட்டுள்ளன.

- ❖ அரசின் சேவைகளை மறுவடிவமைத்தலில் சிறந்து விளங்குதல்
- ❖ தொழில்நுட்பத்தைத் பயன்படுத்தி மக்களை மையப்படுத்திய சேவையை மிகச்சிறந்த முறையில் வழங்குதல்.
- ❖ மாவட்டங்கள் மற்றும் அரசுத் துறைகளால் மாவட்ட அளவில் மின்ஆளுமை முயற்சிகள் விருதுகளைத் தேர்வு செய்ய ஆய்வுக் குழுவின் இறுதி அறிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாணவர்களுக்கான மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருது**

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களிடையே மின் ஆளுமையின் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையி தமிழக அரசானது, மாணவர்களுக்கான "மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருது" அறிவிக்கப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டிற்கான அனைத்து பிரிவுகளிலும் பங்கேற்க திருத்தி அமைக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, (1) மாவட்ட அளவில் என இரண்டு நிலைகளில் பின்வரும் தலைப்புகளில் நடத்தப்பட்டு மாவட்ட அளவிலான விருது இறுதி செய்யப்பட்டது.

- ❖ கைபேசி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் செயலிகள்

- மாற்றுத்திறனாளி நபர்களுக்காகப் புதுமையான செயலிகள்
- நரம்பியல் வலையமைப்பு (Neural Network) தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் செயலிகள்

**சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME Awards) தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை விருது**

மேம்படுத்தப்பட்ட மின் ஆளுமை தீர்வுகளை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும், சக தேவைகளுக்கேற்ப டபுதிய முயற்சிகள், தொழில்நுட்பப் பங்களிப்பினை கருத்திற்கொண்டு செயல்திட்டங்களை உருவாக்கும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களைக் கண்டறியவும். தமிழ்நாடு அரசானத சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

2015-16 ஆண்டிற்கான பின்வரும் 3 பிரிவுகளிலும் பங்கேற்க பரிநதுரைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

- பல்வேறு துறைகளில் சிறந்த மின் ஆளுமை மென்பொருள் பயன்பாடு.
- கைபேசி சேவைகள்/பொதுமக்கள் சேவைகளை வழங்கும் சிறந்த மின் ஆளுமை மென்பொருள் பயன்பாடு.
- நூதன மின் ஆளுமை தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான மின் ஆளுமை விருது.

தேர்வுக் குழுவானது சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெற்றன பரிந்துரைகளை மறுசீராய்வு செய்துள்ளது. விருதுகளின் இறுதிப்பட்டியலுக்கான பரிந்துரைகள் அரசின் பரிசீலணையில் உள்ளது.